

மகத்தான ஆரம்பம்
ஆகஸ்ட் 6உ முதல்
விநோதமான கதை....
விசித்திரமான சம்பவங்கள்
அலங்காரமான தயாரிப்பு
இவையெல்லாம் சேர்ந்த
உல்லாசச் சித்திரம்...
ஜூபிடரின்
கன்னியின்
காதலி
ராம்நாத் · சேகர்
தயாரிப்பு
டைரக்ஷன் · ராம்நாத்
அஞ்சலி தேவி · மாதுரி தேவி
எம். எஸ். எஸ். பாக்கியம்
எஸ். ஏ. நடராஜன் · கே. ஆர். ராமசிங்
கே. ஸாயிராமன் · கே. சாரங்கபாணி
புளிமூட்டை ராமஸ்வாமி
நடனங்கள் · லலிதா · பத்மினி..........
ஸ்டுடியோ · சென்ட்ரல்

J - 31-7

சிறந்த சலவை...



இந்த OK கொண்டு தான்!

தயாரிப்பாளர்கள்: ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) லிமிடெட், சென்னை



தனிமையாக்கப்பட்ட கல்லூரி மாணவி



இப்போது பிரபல பரிசைப் பெற்றவள் 'க்ருஷனு'க்கு வந்தனம்.

ஒரு வருட காலத்துக்குள் சீதா தன் களையான வதனத்தையும் சுறுசுறுப்பையும் இழந்தாள். அவள் களைப்பும் கவனமின்மையும் பெற்று அவளது மேனி கருக்கிட்டு விட்டது. எல்லோரும் அவளை மந்தம் என்றும் முன் கோபி என்றும் கூறினர். தன் தாயாரிடம் தன் கல்லூரியை விட்டுவிடப் போவதாகக் கூறியபோது அவளது தாய் "தினம் காலை உண்டிக்கு முன் "க்ருஷன்" சாப்பிடு" என்று புத்தி கூறினாள்.

ஒரு வருடத்துக்குப் பின் சீதா ஓர் பரிசு பெற்ற மாணவி. இன்டர்மீடியேட் பரீக்ஷையில், "அழகும் புத்தியும் அடைவது அதிர்ஷ்டமே" என்று அவள் நண்பர்கள் கூறினர். முறுவலித்து தனது தாயின் யோசனையைக் கூறினாள்.

மனித வர்க்கத்தைத் தாக்கும் பாதி நோய்கள் ஓர் மூலகாரணத்தைக் கொண்டதாகும். அதுதான் உள்ளச் சோர்வு. உங்கள் உடம்பின் உட்புறத்தை ஒழுங்காக வைத்துக்கொள்ள ஓர் நிச்சயமான ஆக்ரதையான முறை சிறிதளவு தினமும் 'க்ருஷன் ஸால்ட்' எடுத்துக் கொள்வதுதான். 'க்ருஷன்' ஆறுவகை இயற்கை உப்புகளின் சேர்க்கையாதலால் உங்கள் வெளிப்போக்கு அவயவங்களை சரியான முறையில் பாதுகாத்து, குடலை சுத்தப்படுத்தி, ரத்தத்தை விஷமாக்கும் மலத்தை அப்புறப் படுத்துகிறது. 'க்ருஷன்' உங்களை அதிக வலுவுடனும், அதிக களையுடனும் விளங்கச் செய்கிறது.

இன்றே 'க்ருஷன்' வாங்குங்கள். கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் எங்கும் கிடைக்கும் விலை ரூ. 1-10 (மஞ்சள் பெட்டியில்)



நீங்கள்கூட அந்த 'க்ருஷன்'

உணர்ச்சியை அடையலாம்

இத்தகைய தோற்றத்தை அளிக்கவே

நீங்கள் செலவு செய்கிறீர்கள்



நீங்கள் ஒரு வாரத்தில் மூன்று க்ஷவரங்களுக்கு மட்டுமே நாவிதனுக்கு ஆறு அணு செலவு செய்வீர்களேயானால், ஏழு நாட்களில் நான்கு நாட்கள் இத்தகைய — நைக்கக்கூடியதும், அசுத்தமானதுமான — தோற்றத்தையே அளிப்பீர்கள்.

இத்தகைய தோற்றத்தை அளிக்க


உங்களுக்கு லாபத்தைக் கொடுக்கிறது



நீங்கள் "7 ஓ'க்ளாக்" பிளேடுகளால் தினசரி க்ஷவரம் செய்துகொள்ளுவீர்களேயானால், வெற்றியை அடைவதற்குக் காரணமான சீர்படுத்தப்பட்ட தோற்றத்தைப் பெறுவீர்கள். தவிர, நீங்கள் பணத்தையும் மிச்சப்படுத்துவீர்கள்—ஒரு பாக்கெட் பிளேடுகள் பல வாரங்களுக்கு வரும்.

மார்க்கட்டில் "7 ஓ'க்ளாக்" பிளேடுகள் தான் மிகச்சிறந்தவை. அவைகள் மிகவும் சுத்தமான எஃகினால் செய்யப்பட்டவை. அதிகக் கருக்கை அளிப்பதன் பொருட்டு மும்முறை சாணை தீட்டப்பெற்றவை.

தினசரி "7 ஓ' க்ளாக்" பிளேடால் க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்.



குறைந்த செலவில் அதிக க்ஷவரம்
கனிய அளிக்கும் பிளேடுகள்

6 பிளேடுகளடங்கிய ஒரு பாக்கெட்டுக்கு அணு 7

இது ஒன்றே ஜிண்டான்!



பல வருஷங்களுக்குப் பிறகு உலகப் பிரசித்திபெற்ற, மணமிகுந்த, உற்சாக மூட்டும் சிகப்பு, வெள்ளை மாத்திரைகள்


320 சிகப்பு மாத்திரைகள்	ஒரு பாக்கெட்	ரூ. 2-0-0
60 சிகப்பு மாத்திரைகள்	ஒரு பாக்கெட்	ரூ. 0-8-0
1000 வெள்ளி நிற மாத்திரைகள்	ஒரு பாக்கெட்	ரூ. 2-0-0
150 வெள்ளி நிற மாத்திரைகள்	ஒரு பாக்கெட்	ரூ. 0-8-0

தபால், இதர செலவுகள் பிரத்யேகம்

ஸ்டாக்கிஸ்டுகள் :
எ. பி. பரேக்
48, பந்தர் தெரு, சென்னை-1

சோல் ஏஜண்டுகள் :
எஸ். வைத்யா & கோ.,
12, ஆண்டர்ஸன் தெரு, சென்னை-1

ஒரே விலையில் ஏதேனும் ஒரு கைக் கெடிகாரத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.
எல்லாம் ஸ்விஸ் தயாரிப்பு, லீவர் மெஷின். ஒவ்வொன்றும் மூன்று வருஷ உத்தரவாதம்.



7 ஜுவல்கள் குரோம் கேஸ் ...	ரூ. 42/-	ரோல்டு கோல்டு கேஸ் ...	ரூ. 65/-
15 ஜுவல்கள் குரோம் கேஸ் ...	ரூ. 60/-	ரோல்டு கோல்டு கேஸ் ...	ரூ. 70/-
15 ஜுவல்கள் வாட்டர் ப்ரூப் (படத்தில் 1163-65ல் உள்ளதுபோன்ற அமைப்பு)		குரோம் ரேஸ்கோப் அசைவு ...	ரூ. 55/-
15 ஜுவல்கள் வாட்டர் ப்ரூப் (படத்தில் 1163-65ல் உள்ளதுபோன்ற அமைப்பு) ரேடியம் டயல் குரோம் கேஸ் ...	ரூ. 80/-	லீவர் அசைவு, சென்டர் செகண்ட், ரோல்ட் கோல்ட் ...	ரூ. 100/-
அலாரம் டைம்பீஸ் ரூ. 15/- உயர்ந்த ரகம்	ரூ. 18/-	ஸீட்டர் அலாரம் ...	ரூ. 25/-

குறிப்பு:- ஏதேனும் மூன்று வாட்சுகளுக்கு ஆர்டர் அனுப்புவோருக்கு 12 சத விகிதம் விலையில் தள்ளுபடி செய்யப்படும். மேலே குறிப்பிட்ட டிசைன்களில் லேடீஸ் கை கெடிகாரங்களுக்கு 12½ சத விகிதம் அதிகம்

PIONEER WATCH Co.
POST BOX NO. 11428, CALCUTTA - 6
SHOWROOM: 318A, CHITTARANJAN AVENUE

கல்கி பொருளடக்கம்

மலர் 8 இதழ் 53	ஜூலை 31	விரோதி ௵ ஆடி 16உ



புதுவை ஸ்ரீ. து. வேலு ரெட்டியார் (Retd. Teacher) குமாரர் சிரஞ்சீவி சாம்பசிவத்திற்கும், (Secretariat - Finances Dept.), காரைக்கால் ஸ்ரீ திருவேங்கட ரெட்டியார் (Land lord) குமாரத்தி சௌபாக்கியவதி புனிதவதிக்கும் ஜூலை 7-ந்தேதி காரைக்காலைச் சேர்ந்த தளத் தெருவில் திருமணமும், மேற்படி மாதம் 10-ந் தேதி புதுவையில் மணமக்கள் இருகப் பிரவேசமும் சிறப்பாக நடைபெற்றன. மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் அன்பளிப்புகளும், வந்து குவிந்தன.

வாழ்க. சிவ - புனிதவதி!

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 53

என்ன சேதி?

ஆர். எஸ். எஸ். தலைவர்

சமீபத்தில் இந்திய சர்க்காரால் விடுதலை செய்யப்பட்ட ராஷ்ட்ரீய சுயம் சேவா சங்கத்தின் தலைவர் ஸ்ரீ கோல்வால்கர் சென்ற வாரம் சென்னைக்கு விஜயம் செய்தார். பத்திரிகைப் பிரதிநிதிகளின் கூட்டத்திலும் பொதுக் கூட்டத்திலும் பேசினார். அப்போது அவர் பழைய சம்பவங்களைக் கிளறிக் கொண்டிராமல் அடக்கத்துடன் பேசியதைப் பாராட்டுகிறோம். அனாவசியமான வாதத்திலும் தர்க்கத்திலும் காலத்தைக் கழிக்காமல், தமது ஸ்தாபனத்தின் கொள்கையைச் சந்தேகத்துக்கு இடமின்றி விளக்கிக் கூறினார். ஆர். எஸ். எஸ். சங்கத்தில் பலாத்காரத்துக்குச் சிறிதும் இடமில்லை என்றார். அத்துடன் மேற்படி சங்கத்தின் அலுவல்களில் இரகசியம் என்பதே கிடையாது என்று சொன்னார். இந்திய தேசீயக் கொடியை அங்கீகரிக்கத் தாங்கள் தயங்கவில்லை என்றும் உறுதி கூறினார்.

அவர் அவ்வாறு பகிரங்கமாகக் கூறியது, பலருக்கும் அந்தச் சங்கத்தின் மீதிருந்த தப்பெண்ணத்தை அகற்றும். மகா வல்லமை பொருந்திய பிரிட்டிஷாரை எதிர்த்தபோதுகூட தேசிய காங்கிரஸ் ஸ்தாபனம் பலாத்காரத்துக்கும் இரகசியத்துக்கும் இடம் கொடுக்கவில்லை. அதிலிருந்து, புனிதமான இலட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்ட இயக்கத்துக்குப் பலாத்காரமும் இரகசியமும் தேவையில்லை என்றாகிறது. அதேபோல, பலாத்காரத்தையும் இரகசியத்தையும் அடிப்படையாகக் கொண்ட எந்த இலட்சியமும் பரிசுத்தமானதாக இருக்க முடியாது என்பதும் தெளிவாகிறது. எனவே, ஸ்ரீ கோல்வால்கர் அவ்விஷயத்தை வியக்தமாகக் கூறியது வரவேற்கத் தக்கதாகும். பலாத்காரமோ, இரகசியமோ இல்லாமல் சட்ட வரம்புக்கு உட்பட்டு நடைபெறும் எந்த ஸ்தாபனமும் சுதந்திர இந்தியாவில் பயப்படவேண்டிய அவசியமே இல்லை. மேற்படி சங்கத்தின் மீதிருந்த தடையுத்தரவை சர்க்கார் ரத்து செய்ததே அதைக் காட்டுவதற்குப் போதுமானது.


நீதியாகுமா?

இந்தியாவிலிருந்து பத்திரிகைகளைத் தருவித்து விற்ற இரண்டு வியாபாரிகளுக்கு மலாயா கோர்ட்டார் தலா ஆறு மாதம் கடுங்காவலும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்திருக்கிறார்கள். இது மிகவும் கடுமையான தண்டனை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. தாங்கள் விற்கும் பத்திரிகைகளில் ராஜத்துவேஷமான கட்டுரைகள் இருக்கின்றனவா அல்லவா என்பதைக் கவனிக்க வேண்டியது ஏஜண்டுகளின் கடமை என்று மேற்படி வழக்கில் விவாதித்த சர்க்கார் தரப்பு வக்கீல் கூறியிருக்கிறார். இந்தக் கூற்றை எவரும் ஒப்புக்கொள்ள முடியாது. முதலாவதாக, ஒவ்வொரு பத்திரிகையிலும் வெளியாகும் கட்டுரைகளை விற்பனை ஏஜண்டுகள் துருவிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இரண்டாவதாக, மேற்படி ஏஜண்டுகளுக்கு ராஜத்துவேஷமற்றதாகத் தோன்றும் கட்டுரைகள், அதிகாரிகளுக்கு வேறு விதமாகத் தோன்றலாம்!

தவிர, இந்தியாவிலிருந்து மலாய் நாட்டுக்கு நூற்றுக்கணக்கான பத்திரிகைகள் போகின்றன. அவைகளை விற்க ஏராளமான ஏஜண்டுகள் இருக்கிறார்கள். குறிப்பிட்ட சில பத்திரிகைகளில் ராஜத்துவேஷமான கட்டுரைகள் வெளியானதாகக் கூறி அதிகாரிகள் அத்தனை ஏஜண்டுகள் மீதும் வழக்குத் தொடருவதென்றால், அது நீதியாகுமா? அல்லது அறிவுடைமைதானாகுமா?

நிகழ்ச்சிச் சித்திரம்

-சாஸ்திரி





பிரிட்டனில் தேர்தல் போருக்குப் பூர்வாங்கமாகச் சர்ச்சில் அறிக்கைப் போர் ஆரம்பித்திருக்கிறார்.
அறிக்கை
அறிக்கை
டோரிகட்சி
சர்ச்சில்
முதலில் இந்த இளைத்த மனிதனுடைய பசியைத் தீர்க்கலாம்.
மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு 140 கோடி டாலர் உதவி அளிக்க அமெரிக்கா தீர்மானித்திருக்கிறது.
140 கோடி டாலர்
என் கதி என்ன?
அமெரிக்கா
மேற்கு ஐரோப்பா
யார் அது? நான் குடிக்கும் ஜலத்தைக் கலக்கிறாயோ தெரியுமா?
வியாஸ நதி
ஓஹோ! கதையில் வரும் ஆடு என்று என்னையும் நினைத்தாயோ!
கிழக்குப் பஞ்சாப்பில் ஓடும் வியாஸ நதியில் அணைகட்ட இந்தியாவுக்கு உரிமை இல்லை என்று பாகிஸ்தான் விதண்டா வாதம் செய்ய ஆரம்பித்திருக்கிறது.
சென்னைப் பிரதமர் கனம் குமாரசாமி ராஜா டில்லியில் சர்தார் படேலைப் பேட்டி கண்டார்.
—பத்திரிகைச் செய்தி
இதோ பார்த்துக் கொள்ளுங்கள்; என் கையில் கொஞ்சம் கூட அழுக்கு இல்லை! —புகார்கள் மற்றவர்களைப் பற்றித்தான்.

பறை ஒலிக்கின்றது! படையிலே சேருங்கள்!

புது டில்லியில் பல அதிசயங்கள் நடைபெற்று வருகின்றன.

கவர்னர் - ஜெனரல் மாளிகையைச் சுற்றியுள்ள விஸ்தாரமான தோட்டம் உழப்பட்டு வருகிறது. கவர்னர் ஜெனரல் ராஜாஜி ஏர்பிடித்து உழுகிறார். டிராக்டர் கலப்பைகளும் உழுகின்றன.

பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு வசிக்கும் மாளிகையின் சுற்றுத் தோட்டங்களில் பூத்திருந்த வித விதமான புஷ்பச் செடிகள் மறைந்துவிட்டன. பசும்புல் தரைகளை உழுதுப் பயிரிட்டு முத்துச் சோளமும் மக்காச் சோளமும் வள்ளிக் கிழங்கும் வாழையும் பயிரிட்டிருக்கிறார்கள். மலையாளத்திலிருந்து மரவள்ளிப் பதியன்கள் போயிருக்கின்றன.

பிரதம மந்திரியின் தோட்டத்தில் சோளப் பயிர்கள் மூன்று அடி உயரம் வளர்ந்து பூவிட்டிருக்கின்றன. இன்னும் சில நாளில் கதிர்கள் விட்டுவிடும். முத்து முத்தான தானியங்கள் நிறைந்த சோளக் கொண்டைகள் பச்சை வர்ணச் சட்டைகள் போட்டுக் கொண்டு இளங்காற்றில் அசைந்தாடும். அவற்றைத் தேடிப் பைங்கிளிகள் வந்து சேரும்.

பிரதம மந்திரி நேரு அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு என்ன செய்வாரோ என்பது பற்றி நமக்குக் கவலையாயிருக்கிறது. இயற்கை அழகில் ஆசைகொண்டவர் பண்டித நேரு. முதிர்ந்த தானியக் கொண்டைகள் அசைந்தாடுகின்ற சோளக் கொல்லையைப் பார்த்து விட்டு அவர் பரவசமடைந்து வெளி உலகத்தை மறந்து விடாமல் இருக்க வேண்டுமே என்று கவலைப் படுகிறோம். அப்படி அவர் மெய்மறந்து விட்டால் புதிதாகச் சுதந்திரம் பெற்ற நம்முடைய தாய் நாட்டின் கதி என்ன ஆகிறது?

முன்னொரு சமயம் இந்தமாதிரி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. துகாராம் என்ற பக்தர் சோளக்கொல்லை காவல் காப்பதற்குச் சென்றார். சோளப் பயிரின் அழகைப் பார்த்து மெய் மறந்தார் : பரவசமானார் : சோளப் பயிரின் காட்சியில் அந்தப் பரமபக்தர் இறைவனைத் தரிசனம் செய்து ஆத்மானந்தத்தில் மூழ்கிவிட்டார். சோளக் கதிர்களையெல்லாம் பச்சைக் கிளிகள் ஆனந்தமாகக் கொத்தித் தின்றன!

சோளம், கம்பு, ராகி முதலிய புன்செய்த் தானியங்களைப் பயிர் செய்வதில் இந்த ஒரு கஷ்டம் இருக்கத்தான் இருக்கிறது. அந்தப் பயிர்களையும் தானியங்களையும் கண்டு விட்டால் பறவை இனங்களுக்கு ஒரே ஆனந்தம். கிளிகளும் மைனாக்களும் காக்கைகளும் குருவிகளும் வந்து மொய்த்துக் கொண்டுவிடும்.

வான வெளியில் பறந்து ஆகாச அலைகளில் மிதந்து இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தும் பட்சிகளுக்கு எது மிகவும் பிரியமான உணவோ, அது மனிதனுக்கும் மிகச் சிறந்த உணவாகுமன்றோ?

* * *

புன்செய்த் தானியங்களின் உணவுச் சத்தைப் பற்றி ராஜாஜி அன்று ரேடியோப் பிரசங்கத்தில் தெளிவாக எடுத்துச் சொன்னார்.

"அரிசியே கதி என்று நம்பியிருக்க வேண்டாம். அரிசியைக் காட்டிலும் சத்துள்ள சோளம், ராகி, கம்பு முதலிய புன்செய்த் தானியங்களை அதிகம் பயிர் செய்யுங்கள். புன்செய்த் தானியங்களை உண்ணப் பழகிக்கொள்ளுங்கள். சோளம்-ராகியை உங்கள் தினசரி உணவில் ஒரு பகுதியாகப் பழக்கிக் கொள்ளுங்கள். இந்த முறையைப் பின்பற்றி இப்போது 'இந்தியாவுக்கு நேர்ந்திருக்கும் நெருக்கடியைக் கடப்பதற்கு உதவி செய்யுங்கள்!" என்று நம் கவர்னர் ஜெனரல் இந்திய மக்களைக் கேட்டுக் கொண்டார்.

ராஜாஜி இந்த உபதேசத்தை மற்றவர்களுக்கு மட்டும் செய்துவிடவில்லை. தாம் அநுசரியாதகாரியத்தை ராஜாஜி மற்றவர்களுக்கு உபதேசிப்பது கிடையாது. தியாகராஜநகர் பஸ்லுல்லா ரோடு 48-ம் நம்பர் வீட்டிற்கு 1943-ம் வருஷத்துக்குப் பிறகு போய்ப் பழக்க

ழுள்ள நண்பர்கள் அந்த வருஷத்திலிருந்து ராஜாஜியின் வீட்டில் சோள மாவினால் தோசை செய்வது வழக்கம் என்பதை அறிந்திருப்பார்கள்.

யுத்த காலத்தில் உணவு நெருக்கடி நேர்ந்திருந்த நாளிலிருந்தே ராஜாஜி ஒருவேளை அரிசிச் சாதத்துக்குப் பதிலாகச் சோளத் தோசை சாப்பிடுவதற்குப் பழக்கப் படுத்திக் கொண்டார்.

அதனால் ராஜாஜியின் உடல் நலத்துக்கோ, அறிவு வலிமைக்கோ, எவ்விதக் குறைவும் ஏற்படவில்லை என்பதை நாம் அறிந்தே இருக்கிறோம்.


ராஜாஜி தம்முடைய வாழ்க்கையில் அனுஷ்டித்துப் பார்த்துப் பலன் கண்ட முறையையே நமக்கு உபதேசிக்கிறார். அதை நாம் பின்பற்றுவதில் என்ன கஷ்டம் இருக்க முடியும்?

* * *

சுதந்திர இந்தியாவுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி என்னவென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்த நாட்டில் வேண்டிய ஆள் பலம் இருக்கிறது; அறிவு பலம் இருக்கிறது; பலவித வளங்களும் வசதிகளும் இருக்கின்றன. இந்த ஆள் பலத்தையும் அறிவு பலத்தையும் வளங்களையும் வசதிகளையும் கொண்டு, இந்தியாவை உலகில் மகோந்நதமான தேசமாகச் செய்யலாம்; ஆனால் செய்வதற்குப் போதிய அவகாசம் வேண்டும்; பத்து வருஷ அவகாசமாவது நிச்சயமாக வேண்டும்.

அதுவரை மக்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும். பல கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளச் சித்தமாயிருக்க வேண்டும். ஆனால் எதைப் பொறுத்தாலும் பட்டினியைப் பொறுக்க முடியுமா? முடியாதுதான். உண்டு உடுத்தி உயிர் வாழ்தல் எப்படியும் நடந்து தீர வேண்டும்.

தற்சமயம் இந்தியா தேசத்தில் இந்திய மக்களுக்குப் போதுமான உணவு உற்பத்தியாகவில்லை. பற்றாக்குறையை இட்டு நிரப்ப வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் தருவித்துக் கொண்டு வருகிறோம். இறக்குமதியாகும் உணவுப் பொருளில் ஒரு பெரும் பகுதி அரிசி. உணவுப் பொருள் இறக்குமதிக்காகக் கோடி கோடி ரூபாய் அயல் நாடுகளுக்குக் கொட்டிக் கொடுக்க வேண்டியிருக்கிறது.



சுதந்திர பாரதநாட்டின் செல்வம் பெருகவும் சுபிட்சம் தழைக்கவும் அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து பல வகை இயந்திரங்கள் தருவிக்க வேண்டும். செல்வ உற்பத்தி செய்யக் கூடிய இயந்திரங்கள் வாங்குவதற்குப் பயன்பட வேண்டிய பணத்தைக் கொண்டு அன்றாடம் வயிற்றை நிரப்புவதற்கான உணவுப் பொருள்களைத் தருவித்துக் கொண்டிருக்கிறோம். ஒன்றுக்கு இரண்டு விலை கொடுத்து வாங்குகிறோம். (நஷ்டத்தை இந்திய சர்க்கார் ஈடு செய்கிறார்கள்.) வெளி நாட்டிலிருந்து அதிக விலை கொடுத்து வாங்கும் தானியம் நன்றாக இருக்கிறது என்ற திருப்தியாவது உண்டா? உளுத்து மடித்து நாற்றமெடுத்துப் போன தானியம் வருகிறது; அல்லது வந்த பிறகு சீக்கிரத்தில் கெட்டுப் போய்விடுகிறது. 'காசைக் கொடுத்துத் தேளைக் கொட்டிக் கொள்ளும்' காரியத்துக்கு இதை விட நல்ல உதாரணம் வேறு கிடையாது.

இவ்விதம் எல்லா விதத்திலும் தேசத்துக்குக் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் உண்டாக்கும் தானிய இறக்குமதியை நிறுத்தியாக வேண்டும். 1951-ம் வருஷத்துக்குப் பிறகு தானிய இறக்குமதியை அடியோடு நிறுத்தி விடுவது என்று இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். சரியான முடிவுதான். ஆனால் அந்த முடிவை நிறைவேற்றுவதற்குத் தேசத்தில் சில காரியங்கள் அவசியம் நடந்தாக வேண்டும்.

இறக்குமதியை நிறுத்தி விடுவது காரணமாகத் தேசத்தில் பஞ்சம் ஏற்படக் கூடாது, ''பட்டினி'' என்கிற கூச்சல் கிளம்பக் கூடாது. பஞ்சமும் பட்டினியும் என்றைக்குமே தீங்கானதுதான். அதிலும் புதிதாகச் சுதந்திரம் அடைந்திருக்கும் நாட்டில் பஞ்சமும் பட்டினியும் ஏற்பட்டால் சுதந்திரத்துக்கே ஆபத்து வந்து விடும். கொள்ளையும், கொலையும், அராஜகமும் தலைவிரித்தாடும். தலைவலி போய்த் திருகுவலி வந்த கதையாக, பிரிட்டிஷ் அடிமைத் தனத்துக்குப் பதில் இன்னொரு அயல் நாட்டிற்கு இத்

தியா மீண்டும் . அடிமைப்படவும் நேரிடலாம்.

இந்த விபத்துகளை யெல்லாம் தடுக்க வேண்டுமானால், வருகிற இரண்டு வருஷத்துக்குள் ஒரு பெரு முயற்சி செய்து இந்தியாவுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் எல்லாம் இங்கேயே விளையும்படி செய்துவிட வேண்டும். இந்தக் காரியத்தை யுத்தகால முயற்சியின் துரிதத்துடனும் தீவிரத்துடனும் செய்து முடிக்க வேண்டும் என்று நம் அரும்பெருந் தலைவர்கள் மன்றாடி வேண்டிக் கொள்கிறார்கள்.

யுத்த காலத்தில் போர் முனையில் உள்ள வீரர்கள் ஆகட்டும், வீட்டில் தங்கியிருக்கும் குடிமக்கள் ஆகட்டும், "எங்களுக்கு இன்ன வகை உணவு தான் வேண்டும்" என்று கேட்க முடியுமா? கேட்டால்தான் கிடைக்குமா? தேச பக்தியும் சுதந்திர தாகமும் உள்ள மக்கள் அவ்விதம் கேட்க மாட்டார்கள். அகப்பட்ட உணவைக் கிடைத்த வரையில் உண்டு வாழ்வார்கள். அதே சமயத்தில் யுத்தத்தில் ஜயிப்பதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளிலும் ஊக்கமாகவும் உற்சாகமாகவும் ஈடுபடுவார்கள்.

இந்தியாவில் நம் சுதந்திர சர்க்கார் பஞ்சமென்னும் அரக்கனுடன் பெரும் போர் தொடங்கியிருக்கின்றனர்.

இந்தப் போர் நடக்கும் சமயத்தில் மக்கள் "அந்த உணவுதான் வேண்டும்; இந்த அளவுதான் வேண்டும்" என்று முறையிடுவதோ பிடிவாதம் செய்வதோ நியாயமாகாது.

முக்கியமாக, "அரிசி வேண்டும்; எங்களுக்கு அரிசிதான் வேண்டும்" என்ற கூக்குரல் கூடவே கூடாது.

இரண்டு வருஷத்திற்குள்ளே இந்தியா தேசத்தின் உணவுப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்குப் பிரதம முட்டுக்கட்டையாயிருப்பது நம்மவர்கள் சிலரின் அரிசிப் பைத்தியமேயாகும்.

இரண்டு வருஷத்திற்குள்ளே பற்றாக்குறை அரிசி முழுவதையும் நாமே இந்த நாட்டில் உற்பத்தி செய்து கொள்ளுவது சாத்தியமல்ல.

ஆனால் அரிசிக்குப் பதிலாக அதே அளவு சத்துள்ள வேறு வகை உணவுகளை உற்பத்தி செய்துவிட முடியும். சோளம், கம்பு, ராகி ஆகிய புன்செய்த் தானியங்கள் அரிசியைக் காட்டிலும் சத்துள்ளவை.

அரிசிச்சோறு சாப்பிடுகிறவர்களைக் காட்டிலும் சோளம், கம்பு, ராகி உண்ணுகிறவர்கள் பலசாலிகளாகவும் ஆரோக்கியமுள்ளவர்களாயும் இருப்பதைக் கண் முன்னால் பிரத்யட்சமாகப் பார்க்கலாம்.

நெற் பயிருக்கு வேண்டிய தண்ணீரில் நாலில் ஒரு பங்கு தண்ணீரைக் கொண்டு மேற்கூறிய புன்செய்த் தானியங்களைப் பயிர் செய்யலாம்.

தரிசு நிலத்தைப் பண்படுத்தி நன்செய் சாகுபடிக்குத் தகுதியாக்குவது எளிதில் நடக்கக் கூடியதல்ல; விரைவில் நடக்கக் கூடியதுமல்ல.

பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பூர்த்தியாகும் போதுதான் நன்செய்ப் பயிர் அதிகம் செய்யலாம்.

ஆனால் தரிசு நிலங்களைப் புன்செய்ப் பயிர் சாகுபடிக்குத் தகுதியாக்குவது அவ்வளவு கஷ்டமானதல்ல; உடனடியாகச் செய்யக்கூடிய காரியம்.

ஆகையால் அரிசிச்சோறு சாப்பிட்டுப் பழக்கமுள்ளவர்கள் அனைவரும் கொஞ்ச காலத்துக்குத் தங்கள் உணவில் மூன்றில் ஒரு பகுதி புன்செய்த் தானியத்தை உபயோகிப்பது என்று வைத்துக் கொண்டால் நமது உணவுப் பிரச்னையைத் தீர்ப்பது சுலபமாகும்.

இந்த உலகத்தில் இருநூறு கோடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் 150 கோடிப் பேர் அரிசி என்பதைக் கண்ணாலே பார்த்தது கிடையாது.

இந்தியாவிலுள்ள 40 கோடி மக்களில் இருபது கோடி மக்கள் அரிசி சாப்பிடுவதில்லை. இன்னும் பத்துக் கோடிப் பேர் அரிசியைத் தங்கள் உணவில் ஒரு சிறு பகுதியாக வைத்துக் கொண்டு சாப்பிடுகிறார்கள்.

அரிசி உணவு சாப்பிட்டால்தான் உயிர் வாழலாம் என்பதில்லை. வேறு உணவுகளை அருந்தியும் உயிர் வாழலாம். அப்படியிருக்கும்போது வழக்கமாக அரிசி சாப்பிடுகிறவர்கள் தேசத்தின் நன்மையை முன்னிட்டுத் தங்கள் உணவில் ஒரு பகுதியை வேறு வகைக்கு மாற்றிக் கொள்வதினால் என்ன கெடுதல் வந்துவிடும்? தேசத்திற்காக இந்தத் தியாகம் செய்ய முடியாது என்று சொன்னால் வேறு என்னதான் செய்யப்போகிறோம்?

* * *

புன்செய்த் தானியங்களைத் தவிர அரிசிக்குப் பதிலாக உபயோகிக்கக் கூடிய இன்னொரு உணவு வகை இருக்கிறது. அதுதான் மரவள்ளிக்கிழங்கு. இங்கிலீஷ் பெயர் டாபியோகா. அரிசி

யில் உள்ள அதே சத்து அதே அளவில் மரவள்ளிக் கிழங்கிலும் உண்டு.

மரவள்ளியிலிருந்து செயற்கை முறையில் செய்யப்படுவதுதான் செவ்வரிசி. செவ்வரிசியைப் பாயசம் பட்சணம் முதலியவை செய்வதற்கு நாம் உபயோகப்படுத்தி வந்திருக்கிறோம்.

மலையாளத்தில் வசிக்கும் மக்கள் வருஷத்தில் ஏறக்குறைய நாலு மாத காலம் மரவள்ளிக் கிழங்கை வேக வைத்துப் பலவிதமாகப் பாகம் பண்ணி உண்ணுகிறார்கள்.

ஒரு ஏக்கரா நிலத்தில் எவ்வளவு மணங்கு அரிசி விளையுமோ அவ்வளவு மணங்கு மர வள்ளிக்கிழங்கு விளையும்.

ஆனால் நெல்லுக்கு வேண்டிய தண்ணீரில் எட்டில் ஒரு பங்கு மர வள்ளிக் கிழங்குக்கு இருந்தால் போதும்.

மழை நன்றாகப் பெய்யும் பிரதேசங்களில் மர வள்ளிக்கு மழைத் தண்ணீரே போதுமானது.

மர வள்ளிக்கிழங்குச் செடியை மாடு தின்னாது; ஆடும் தின்னாது! ஆகையால் வேலி முதலிய பந்தோபஸ்துக்கள் அதிகம் தேவையில்லை.

நெல்லாகட்டும், வேறு எந்தத் தானியம் ஆகட்டும், விளைவில் பத்தில் ஒரு பாகம் விதைக்காகப் போய்விடுகிறது.

மர வள்ளிக்கு விதை கிடையாது. விளைந்த செடியைத் துண்டு துண்டாக வெட்டி வைத்துவிட வேண்டியதுதான்.

ஆகையால் சென்னை மாகாணத்தில் புன்செய்ப் பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் ஏராளமாக மர வள்ளிக் கிழங்கைப் பயிர் செய்ய வேண்டும்.

வீட்டுக் கொல்லைகளில் எல்லாம் மர வள்ளிக்கிழங்கைப் பயிரிடவேண்டும்.

அரிசிக்குப் பதிலாக மர வள்ளிக் கிழங்கை ஓரளவு உபயோகிக்கவும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

* * *

இந்தியா அரிதில் பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு நம் அரும்பெரும் தலைவர்கள் இந்தப் பெரும் போரைத் தீவிரமாகத் தொடங்கியிருக்கிறார்கள்.

பஞ்சம் என்னும் அரக்கனோடு யுத்தம்; பட்டினி என்னும் பகைவனோடு கடும் போர்; பற்றாக்குறை என்னும் சத்துருவோடு சண்டை.

இந்தப் போர்முனையில் வீரர்களாகச் சேரும்படியும் வேறு விதங்களில் உதவி செய்யும்படியும் நம் தலைவர்கள் நம்மைக் கேட்டுக் கொள்கிறார்கள்.

"பறை ஒலிக்கிறது! படையில் சேருங்கள்!" என்று நாமும் நம் நேயர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

உணவு உற்பத்தி செய்யக் கூடிய வசதியும் திறமையும் உள்ளவர்கள் உணவு உற்பத்தி செய்யுங்கள். மற்றவர்கள் உணவை வீணாக்காமல் பாதுகாக்க உதவுங்கள்.

அரிசிக்குப் பதிலாக ஓரளவு வேறு புன்செய்த் தானியங்களையும் மர வள்ளி, சர்க்கரை வள்ளி முதலிய கிழங்கு வகைகளையும் சாப்பிடப் பழக்கம் செய்து கொள்ளுங்கள்.

உணவு உற்பத்தி செய்வதிலும் உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்வதிலும் உங்களுடைய அநுபவங்களை நமக்கு எழுதி அனுப்புங்கள்.

மேற்கூறிய துறைகளில் நீங்கள் செய்யும் சேவைகள் எல்லாம் தேச நன்மைக்கு மிக அவசியமான சேவைகள் என்பதை நம்புங்கள்.



புதுப் பொலிவு அளிக்கவல்ல ஒரு புதிய சோப் அறிமுகம். அநேக வருஷ ஆராய்ச்சி அநுபவத்தைக் கொண்டது ரூப் சோப். மனோகரமான மலர்களின் மணம் கமழும் ரூப் சோப் சருமத்திற்கு மிருதுத்தன்மையும் கவர்ச்சிமிக்க காந்தியையும் அளிப்பது. இன்றே ரூப் உபயோகித்துப் பாருங்கள்.

தயாரிப்பு:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர் அணை :: சேலம்

மாவட்டத்தின் ஏஜண்ட்கள்:

சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்

திருச்சிராப்பள்ளி

பூரா விற்பனை ஏஜண்டுகள்:

அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிமிடெட்

120, அரண்மனைக்காரத் தெரு

மதராஸ்

நாட்டுக்கு நல்லதைச் செய்வோம்!

★

உன்னுள்ளே நீ எண்ணிப் பாரு—இந்த
உணவுப் பஞ்சம் தீர வழி என்ன கூறு! (உன்)

அரிசியே உடம்பை வளர்க்கும்—என்ற
ஆகாத பேச்சுக்குத் தாளம் போடாதே!
ஒருசாண் வயிற்றை நிரப்ப—அரிசி
ஒன்றே பெரிதென்று எண்ணி இராதே! (உன்)

கம்பு,கேழ் வரகோடு சோளம்—நிலக்
கடலை மரவள்ளிக் கிழங்கு வகைகள்
தெம்போடு உண்டிடப் பழகு—நம்
தேசத்தின் நலனுக்கு அதுதான் அழகு! (உன்)

ராஜாஜி சொல்றார் கேளு—நமது
ராஜாங்கம் படுகிற கஷ்டத்தைப் பாரு!
வாசா கைங்கரியங்கள் போதும்—நல்ல
வழியென்று பெரியோர்கள் சொல்வதைக் கேளு! (உன்)

விருந்திடும் உணவு வகையில்—அரிசி
விகிதத்தைக் குறைத்துநீ புதுமைகள் செய்தால்
பறந்தோடிப் போகுமிப் பஞ்சம்—இது
பணக்காரர் மனதில்தான் ஏறணும் கொஞ்சம்! (உன்)


ஏர்பிடித் துழுதிடும் வி. ஆர்.—நாம்
எல்லாரும் உய்ந்திட உழைப்பவர் அன்றோ?
ஆர்வம் மிகுந்த ஜவாஹர்—உணவில்
அரிசியை அடியோடு தள்ளுறார் அன்றோ! (உன்)

பஞ்சத்தைப் பற்றி நீ பேசி—உடனே
பக்கத்தில் அரிசிக்குப் பறந்து நிற்காதே
புஞ்செய் நிலந்தனில் விளையும்—பொருளில்
புஷ்டி தரும் பல சத்துக்கள் உண்டு! (உன்)


அரிசிக்குச் சமமான பண்டம்—இந்த
அவனியில் பல உண்டு என்று தெளிந்தால்
பெரிதாகிப் போகாது கஷ்டம்—அதைப்
பிரியமாய்ச் செய்வதில் உண்டாமோ நஷ்டம்? (உன்)

நாட்டுக்கு நல்லதைச் சொன்னார்—வி. ஆர்.
நாளை வருவதை உணர்ந்திங்கு சொன்னார்
ஓட்டலாம் பஞ்சத்தை இன்றே—இங்கு
ஒருநாளும் குறைவின்றி வாழலாம் நன்றே! (உன்)


— காட்டூர் கண்ணன்




இயந்திரங்கள் டிராக்டர்கள் எத்தனைதான் உழுதாலும்....



ஏர்க் கலப்பைக்கும் எருது மாட்டுக்கும் இணையாகி விடுமோ?



கலைகளில் சிறந்த உழவுக் கலையைக் கவர்னர்-ஜெனரல் உவந்து கற்கிறார்!



'வேல் வேந்தர் நோக்கும் கை, மேழி பிடிக்கும் கை' ஆகிறது!



அத்தியாயம் 31

பிழைத்த அகதி

குளிர் என்றால் இன்னதென்பதை அறியவேண்டுமானால் டில்லியில் குளிர் காலத்தில் வசிக்கவேண்டும். கனமான கம்பளிச் சட்டைகளுக்குள்ளும் பஞ்சடைத்த ரஜாய் மெத்தைகளுக்குள்ளும் அந்தக் குளிர் புகுந்து, தோல் சதை இரத்தம் இவற்றை ஊடுருவிக் கொண்டு சென்று, எலும்புக்கு உட்புறத்திலும் புகுந்து பனிக் கட்டியைப் போல் ஜில்லிடச் செய்யும் சக்தியுடையது. 1948-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் டில்லியில் வழக்கத்தைக் காட்டிலும் அதிகக் குளிராயிருந்தது. நாட்டை விட்டு, ஊரை விட்டு, வீட்டை விட்டு, உற்றார் உறவினரை விட்டு ஓடிவந்த இரண்டு லட்சம் அகதிகள் டில்லி மாநகரின் வீதிகளிலும் சுற்றுப்புறங்களிலும் குளிரில் விறைத்துக்கொண்டு கிடந்தார்கள். அவர்கள் உடம்பு குளிரில் நடுங்கிக் கொண்டிருந்ததே தவிர உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு அகதியின் இருதயத்திலும் கோபத் தீ கொழுந்து விட்டெரிந்தது. அந்தத் தீ டில்லி நகரிலுள்ள பத்து லட்சம் ஜனங்களின் இருதயத்தையும் பற்றி எரித்துக்கொண்டிருந்தது. அந்தக் கோபத் தீயை அணைத்துச் சாந்தம் உண்டு பண்ண ஒரு மகான் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தார்.

மாலை ஏழு மணிக்கு ஜந்தர்-மந்தர் சாலையில் ஒரு மோட்டார் வண்டி மூடு பனிப் படலத்தைக் கிழித்துக்கொண்டு விரைந்து சென்றது. சாலையில் வண்டிப் போக்குவரவோ மனுஷர்களின் நடமாட்டமோ அதிகம் இல்லையாதலால் மோட்டார் ஓட்டுவதில் ஜாக்கிரதை தேவையாயிருக்கவில்லை. ஆனால் இது என்ன? திடீரென்று ஒருவன் குறுக்கே வந்து விழுகிறானே? கடவுளே!—பலமாகப் 'பிரேக்'கைப் போட்டதில் 'கர்ர்ர்' 'கர்புர்ர்ர்' என்ற சத்தத்துடன் மோட்டார் நின்று ஒரு குலுங்குக் குலுங்கிற்று. அந்த மனிதன் ஒரு மயிரிழையில் தப்பினான்! அப்பாவி! சாலையோரத்திலுள்ள நடைபாதையில் நடந்து போகக் கூடாதோ! பஞ்சாபிலிருந்து வந்து குவிந்திருக்

கும் அகதிகளில் ஒருவனுயிருக்க வேண்டும். வேணுமென்று உயிரைப் போக்கிக் கொள்வதற்காக வந்து விழுகிறான் போலிருக்கிறது!

நின்ற மோட்டார் வண்டியிலிருந்து இருவர் இறங்கினர்கள். ஒரு புருஷன்; ஒரு ஸ்திரீ. அவர்கள் சௌந்தர ராகவனும் பாமாவுந்தான். விழுந்தவனுக்கு ஏதாவது காயம் பட்டிருக்கிறதா என்று பார்ப்பதற்காக அவர்கள் முன்னால் சென்றார்கள். அதே சமயத்தில் கீழே விழுந்த மனிதன் எழுந்து நின்றான். அவன் உடையினாலும், தோற்றத்தினாலும் ஒரு பஞ்சாப் அகதியைப் போலவே காணப்பட்டான். ஆயினும், அவன் முகத்தின் தோற்றம் அவன் யார் என்பதை வெளிப்படுத்தி விட்டது.

"அடே! இது என்ன கூத்து? சூரியா! நீ எப்படி இங்கே வந்து முளைத்தாய்? யாரோ பஞ்சாப் அகதி தற்கொலை செய்துகொள்ளப் பார்த்தான் என்றல்லவா நினைத்தேன்?" என்றான் சௌந்தரராகவன்.

ராகவனையும் பாமாவையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்த சூரியா பதில் சொல்லலாமா, வேண்டாமா என்று தயங்கினது போலக் காணப்பட்டது. பிறகு மனதில் ஒரு முடிவு செய்துகொண்ட பாவம் அவனுடைய முகத்தில் பிரதிபலித்தது.

"நீங்கள் நினைத்ததில் பாதி சரிதான்; மிஸ்டர் ராகவன்! நானும் ஒரு அகதிதான். ஆனால் நான் உயிரை விடுவதற்கு முயற்சி செய்யவில்லை. என் உயிரை வைத்துக் கொண்டிருப்பது இன்னும் சில காலத்துக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது. இந்தமட்டும் என்பேரில் வண்டியை ஏற்றாமல் விட்டீர்களே? அதற்காக மிக்க வந்தனம்!" என்றான்.

"அதற்காக எனக்கு வந்தனம் தேவையில்லை. இந்த மோட்டாரின் துரிதமான 'பிரேக்'குக்குத்தான் வந்தனம் செலுத்தவேண்டும். பரிகாசப் பேச்சு இருக்கட்டும், சூரியா! இப்போது நீ எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்? ஏதாவது அவசரமான வேலை இருக்கிறதா? இல்லாவிட்டால் என்னோடு கொஞ்சம் வந்துவிட்டுப் போகலாமே? உன்னிடம் பல விஷயங்கள் கேட்க வேண்டும்; பல விஷயங்கள் சொல்லவும் வேண்டும்!" என்றான் ராகவன்.

"எனக்கு அவசர வேலை இருக்கத்தான் இருக்கிறது. ஆனாலும் அரை மணி நேரம் பின்னால் போவதால் பாதகமில்லை" என்றான் சூரியா. அவனுக்கும் சௌந்தர ராகவனிடம் பல விஷயங்கள் கேட்கவேண்டியிருந்தது; சொல்லவேண்டியுமிருந்தது.

* * *

சௌந்தரராகவனுடைய பழைய வீட்டு வாசலில் வண்டி நின்றது. பாமா வண்டியிலிருந்து இறங்காமல் விடை பெற்றுக்கொண்டாள். மற்ற இருவரும் இறங்கினர்கள். வீட்டுக்குள்ளே நுழைந்தபோது சூரியாவின் உள்ளம் பதை பதைத்தது. முன்னே அந்த வீட்டுக்குள் பிரவேசித்தபோதெல்லாம் சீதா இருந்து தன்னை வரவேற்றாள். ஒரு தடவை துப்பாக்கியால் சுட்டுக் கொள்ளத் தயாராயிருந்த சீதாவைச் சூரியா காப்பாற்றினான். அந்தப் பழைய ஞாபகங்கள் எல்லாம் அணை உடைந்த வெள்ளம் போல் அவன் மனத்தில் புகுந்து கொந்தளிப்பை உண்டாக்கின.

"சூரியா! இந்த வீடு எவ்வளவு சூனியமாயிருக்கிறது, பார்!" என்று ராகவன் கூறியபோது சூரியாவுக்கு அழுகையே வந்துவிட்டது. கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டான்.

"உங்களுடைய உத்தியோகம் மறுபடியும் கிடைத்து விட்டதா?" என்று சூரியா கேட்டான்.

"ஆமாம்; கிடைத்துவிட்டது. இல்லாவிட்டால், இந்த வீடு கிடைத்திருக்குமா? உத்தியோகம் கிடைத்த பிறகு கூட இந்த வீட்டைச் சம்பாதிப்பதற்குப் பிரம்மப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருந்தது. இதிலே ஒரு பஞ்சாபி வந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினேன். ஆனாலும் இந்தப் பஞ்சாபிகளைப் போல் கோழைத் தடியர்களை நான் பார்த்ததேயில்லை. பஞ்சாபியர் எல்லாரும் வீரர்கள் என்றும் சீக்கியர்கள் எல்லாரும் சிங்கங்கள் என்றும் ஒரு காலத்தில் எண்ணிக் கொண்டிருந்தேன். சுத்தப் பிசகு! இவர்கள்

சென்ற வருஷம் ஆகஸ்டு மாதத்தில் பஞ்சாபிலிருந்து விழுந்தடித்து ஓடி வந்ததை நீ பார்த்திருந்தாயானால்..."

"நீங்கள் அதைப் பார்த்தீர்களா?" என்ற சூரியா கேட்டான்.

"ஆமாம், பார்த்தேன்."

"அதெப்படி? நீங்கள்தான் போன ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதி கல்கத்தாவுக்குப் போயிருந்தீர்களே?" என்றான் சூரியா.

"ஓகோ! நினைவு வருகிறது. நீ அப்போது இங்கேதான் இருந்தாயல்லவா? உன்னிடம் கூட நான் கல்கத்தா போகிறது பற்றிச் சொன்னேனே! சூரியா! அதுமுதல் நீ இங்கேதான் இருக்கிறாயா? என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று ராகவன் கேட்டான்.

"என்னத்தைச் செய்கிறது? அங்குமிங்கும் சுற்றி அலைந்து கொண்டிருக்கிறேன்" என்றான் சூரியா.

"அங்குமிங்கும் என்றால்?......"

"இந்த அகதி முகாம்களில்தான். ஏதாவது என்னாலான உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறேன்."

உடனே சௌந்தர ராகவன் மிக்க ஆவலுடன் "சூரியா! எந்த அகதி முகாமிலாவது நமக்குத் தெரிந்தவர்கள் யாரையாவது பார்த்தாயா?" என்று கேட்டான்.

"நமக்குத் தெரிந்தவர்கள் என்று யாரைச் சொல்கிறீர்கள்?"

"தாரிணியை அல்லது வஸந்தியைப் பார்த்தாயா என்று கேட்டேன்."

"இல்லை, மிஸ்டர் ராகவன்! அவர்களைப் பற்றி நான் உங்களைக் கேட்கலாம் என்றல்லவா நினைத்துக் கொண்டு வந்தேன்?"

"இவ்வளவுதானா?" என்று ராகவன் பெருமூச்சு விட்டான்.

"அவர்களைப் பற்றி உங்களுக்கு ஒன்றுமே தகவல் கிடைக்கவில்லையா?" என்று சூரியா கேட்டான்.

"அப்படியும் சொல்லுவதற்கில்லை. இரண்டு மாதத்துக்கு முன்னால் ஒரு அதிசயமான கடிதம் வந்தது. அது தாரிணியின் கையெழுத்தில் இருந்தது. தானும் குழந்தை வஸந்தியும் பத்திரமாக இருப்பதாகவும் கூடிய சீக்கிரம் வந்து சந்திப்பதாகவும் எழுதியிருந்தது. அதில் வேடிக்கை என்னவென்றால், கடிதம் சீதா பெயருக்கு எழுதப்பட்டிருந்தது. அதிலிருந்து சீதாவின் கதி தாரிணிக்குத் தெரியாது என்று அறிந்து கொண்டேன்......"

"சீதாவின் கதி என்ன?" என்று சூரியா கேட்டான். அவன் முகம் அப்போது ஒரு பெரிய ஆச்சரியக் குறியாக நீண்டது.

"அது ஒரு பெரிய சோகக் கதை, சூரியா! உலக வாழ்க்கையில் என்னைப் போல் துரதிர்ஷ்டங்களுக்கு உள்ளானவர்கள் யாருமே இல்லை. வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழி உடைந்ததுபோல் பல சம்பவங்கள் என்னுடைய வாழ்க்கையிலேயே நடந்துவிட்டன. அதிலும் கடைசியாகச் சீதாவை நான் இழந்ததைப் போன்ற துரதிர்ஷ்டம் வேறு ஒன்றுமே இல்லை. ஆகா! பஞ்சாபில் ஹொஷங்காபாத்தில் ஒரு வருஷ காலம் நாங்கள் எவ்வளவு ஆனந்தமாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தோம், தெரியுமா? அது கடவுளுக்கே பொறுக்கவில்லை!......"

"கடவுளை ஏன் இழுக்கிறீர்கள், ராகவன்! கடவுள் என்ன செய்வார்? என் தகப்பனார் கிட்டாவய்யரை உங்களுக்குத் தெரியும் அல்லவா? அவர் மூன்று பின்ளைகளைப் பெற்று வளர்த்துப் பிறகு 'உங்கள் இஷ்டப்போல் வாழ்க்கை நடத்துங்கள்' என்று தண்ணீரைத் தெளித்து விட்டுவிட்டார். அது மாதிரிதான் கடவுளும் செய்திருப்பார் என்பது என் நம்பிக்கை. இந்த உலகத்தையும் மனிதர்களையும் கடவுள் படைத்துவிட்டு 'உலகத்தைச் சொர்க்கமாக்குவதோ நரகமாக்குவதோ உங்கள் இஷ்டம்!' என்று மனிதர்களுக்குப் பூரண சுதந்திரம் கொடுத்து விட்டிருக்க வேண்டும்! ஆகையால் உலகத்தில் நடக்கும் காரியங்களுக்குக் கடவுளைப் பொறுப்பாக்குவது நியாயமல்ல...... போகட்டும்! சீதாவைப் பற்றிச் சொல்லுங்கள்!" என்றான் சூரியா.

"ஆகஸ்டு 14ல் உன்னை நான் இந்தப் புதுடில்லியிலே பார்த்துக் 'கல்கத்தா போகிறேன்' என்று சொன்னேன் அல்லவா? அதிலிருந்து சொல்கிறேன்!" என்றான் ராகவன்.

அத்தியாயம் 32

ராகவன் துயரம்

கல்கத்தாவுக்குச் சௌந்தர ராகவன் போன அன்றைக்கு அங்கே சுதந்திரத் திருநாள் குதூகலமாகக் கொண்டாடப் படுவதைக் கண்டான். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கட்டித் தழுவிக் கொள்வதைப் பார்த்தான். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஏகோபித்து ஒரே குரலில் "ஜே ஹிந்த்!" என்றும், "வந்தேமாதரம்" என்றும், "ஹிந்து முஸ்லிம் ஏக் ஹோ!" என்றும் கோஷமிடுவதைக் கேட்டான். சென்ற வருஷத்தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரையொருவர் கொன்று இரத்த வெள்ளம் பெருகிய அதே கல்கத்தாவில்தானா இதெல்லாம் நடைபெறுகிறது என்று அதிசயித்தான். இனி இந்தியாவுக்கு அதிர்ஷ்டகாலந்தான் என்று தீர்மானித்துக் கொண்டான். அமரநாத்தின் வீட்டில் சென்ற வருஷம் விட்டுவிட்டுப் போன தன் உத்தியோக சம்பந்தமான தஸ்தாவேஜிகளை வாங்கிக்கொண்டு புறப்பட்டான். திரும்ப டில்லிக்கு வந்தபோது பஞ்சாபபில் தீப் பிடித்து எரியும் விஷயம் தெரியவந்தது. ஸ்ரீமதி பாமா அவனைத் தேடிக் கண்டுபிடித்துப் பஞ்சாப்பில் நடப்பதைப் பற்றியெல்லாம் சொன்னாள். அத்துடன் தான் ஹொஷங்காபாத் சென்றிருந்ததையும், தன்னுடன் வந்துவிடும்படி சீதாவை அழைத்ததையும், அவள் வர மறுத்ததையும் பற்றிக் கூறினாள். சௌந்தர ராகவனுக்குச் சீதாவின் பேரில் சிறிது கோபமாகத்தான் இருந்தது. 'பாமாவுடன் அவள் புறப்பட்டு வந்திருந்தால் எவ்வளவு சௌகரியமாகப் போயிருக்கும்?' என்று எண்ணினான். ஆனாலும் அதைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. எப்படியாவது சீதாவையும் குழந்தை வஸந்தியையும் காப்பாற்றியாக வேண்டும். புலியின் குகைக்குள் நுழைவது போலவும் தீப்பிடித்து எரியும் பஞ்சாலைக்குள் பிரவேசிப்பது போலவும் பாம்புப் புற்றுக்குள் கையை விடுவது போலவும் பஞ்சாப்புக்குள் சென்றாக வேண்டும்.

பாமாவின் தைரியமும் சாமர்த்தியமும் பலருடன் சரளமாகப் பழகும் இயல்பும் இச்சமயம் ராகவனுக்கு மிக்க உதவியாயிருந்தது. பாமாவின் பேரில் அவனுக்கு ஏற்கெனவே இருந்த அருவருப்பெல்லாம் இப்போது மாறிவிட்டது. பெண்கள் என்றால் இப்படித்தான் தைரியமாக இருக்கவேண்டும் என்று தோன்றியது.

இரண்டு பேரும் ஆகாச விமானத்தில் இடம் பிடித்துக் கொண்டு லாகூர் போய்ச் சேர்ந்தார்கள்.

நல்ல வேளையாக லாகூரில் இன்னும் அவர்களுடைய கம்பெனியின் கிளை வேலை செய்து கொண்டிருந்தது. கம்பெனி உத்தியோகஸ்தன் என்ற முறையில் சௌந்தரராகவன் பிரயாண அனுமதிச் சீட்டுப் பெறுவது சாத்தியமாயிற்று. பாமாவின் செல்வாக்கும் அதற்குத் துணை செய்தது.

லாகூரில் ஒரு பகுதி பற்றி எரிந்து கொண்டிருந்தது. தெருக்களில் எல்லாம் குத்தும் கொலையும் பிணக்காடுமாயிருந்தது. பஞ்சாப்பின் உள் பிரதேசங்களில் நிலைமை இன்னும் பயங்கரம் என்று சொன்னார்கள். அதிர்ஷ்டவசமாகச் சௌந்தரராகவனையும் பாமாவையும் நடை உடை பாவனைகளைக் கொண்டு ஹிந்து மதத்தினர் என்று உடனே தெரிந்து கொள்ளுதல் கஷ்டமாயிருந்தது. ஆங்கிலோ இந்தியர்கள் என்றோ, இந்தியக் கிறிஸ்துவர்கள் என்றோ, பார்ஸிகள் என்றோ அவர்களைக் கருதும்படியிருந்தது. ஆகையால் உள் நாட்டில் அவர்கள் பிரயாணம் செய்வதில் அவ்வளவு அபாயம் இல்லை என்பதாகத் தெரிந்து கொண்டார்கள்.

ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களின் தயவினால் ஒரு ஜீப் வண்டி சம்பாதித்துக் கொண்டு பிரயாணமானார்கள். வழியெல்லாம் அவர்கள் பார்த்த காட்சிகள் அவர்களுக்குச் சீதாவின் கதியைப் பற்றிய கவலையையும் பயத்தையும் உண்டாக்கியது. ஆயினும் எப்படியோ கடைசியில் ஹொஷங்காபாத் போய்ச் சேர்ந்தார்கள்.

அவர்கள் போய்ச் சேர்ந்த சமயம் அந்த ஊரில் படுகொலைக்குத் தப்பிப் பிழைத்தவர்கள் எல்லாரையும் ஓரிடத்



தில் சேர்த்து வைக்கப்பட்டிருந்தது. பாதுகாப்புக்குச் சீக்கிய சோல்ஜர்கள் வந்ததும் தப்பிப் பிழைத்தவர்களின் பிரயாணம் தொடங்குவதாயிருந்தது. அதிகாரிகளின் அனுமதியுடன் சௌந்தரராகவனும் பாமாவும் அந்தக் கூட்டத்துக்குள் புகுந்து தேடித் தேடிப் பார்த்தார்கள். சீதாவையாவது குழந்தையையாவது காணவில்லை.

பிறகு துணிச்சலாக ஊருக்குள்ளேயே புகுந்தார்கள். சௌந்தரராகவன் குடியிருந்த வீட்டை நோக்கிச் சென்றார்கள். வீடு இருந்த இடத்தில் இடிந்து கரியுண்ட சில குட்டிச்சுவர்களும் கல்லும் கரியும் சாம்பலும் கலந்த குப்பல்களும் கிடந்தன! சில இடங்களிலிருந்து இன்னும் இலேசாகப் புகை வந்து கொண்டிருந்தது! ராகவன் அவனுடைய வாழ்நாளிலே என்றும் இல்லாத விதமாக அன்றைக்கு அங்கேயே உட்கார்ந்து விம்மி விம்மி அழுதான். பாமாவும் அவனுடன் சேர்ந்து 'ஓ' வென்று கதறினாள்.

இதற்குள்ளே அந்த வேடிக்கையைப் பார்ப்பதற்கு ஜனக் கூட்டம் சேரத் தொடங்கியது. பின்னோடு வந்திருந்த போலீஸ அதிகாரி அவர்களை அங்கிருந்து புறப்படும்படி வற்புறுத்தினார். கிளம்புகிற சமயத்தில் ஒரு பையன் அவர்களை நெருங்கி வந்தான். அவனை முன்னர் பார்த்திருந்த ஞாபகம் ராகவனுக்கு இருந்தது. அந்த ஊர் ரயில்வே ஸ்டேஷன் வாசலில் கோவேறு கழுதை வண்டியுடன் அவன் நிற்பதுண்டு. சில சமயம் ராகவனை ஏற்றி வீட்டில் கொண்டு வந்து விட்டிருக்கிறான். அவன் ராகவனைப் பார்த்து, "சாகிப்! ஒரு சமாசாரம் சொல்லவேண்டும்!" என்றான். அவனை ஜீப் வண்டியில் ஏறிக் கொள்ளச் சொன்னான் ராகவன். வண்டி புறப்பட்ட பிறகு "என்ன விஷயம்?" என்று கேட்டான். அந்த வீட்டிலிருந்த அம்மாள் சாகவில்லையென்றும் அவளை ஒரு முஸ்லிம் கிழவர் அழைத்துக் கொண்டு போனதாகவும் தன்னுடைய வண்டியில் ஏறிக் கொண்டுதான் அவர்கள் போனதாகவும் பையன் கூறினான். குழந்தையைப் பற்றி யாதொரு தகவலும் தெரியாது என்று சொன்னான். இரவெல்லாம் அவர்கள் பிரயாணம் செய்து விடியும் சமயத்தில் ஒரு பாறைக்குப் பின்னால் தங்கினார்கள் என்பதையும் சொல்லி அந்த இடத்



தைக் காட்ட முடியும் என்றும் கூறினான். அந்தப் பையனையும் ஜீப் வண்டியில் அழைத்துக்கொண்டு போனார்கள். பையன் காட்டிய இடத்தில் கட்டை வண்டியின் சக்கரச் சுவடுகள் தெரிந்தன. அது மட்டுமல்லாமல் சீதா வழக்கமாக அணியும் கண்ணாடி வளையல் ஒன்று அங்கே உடைந்து கிடந்தது.

அதைப் பார்த்ததும் ராகவனுடைய துயரம் பன்மடங்கு ஆயிற்று. துயரம் விரைவில் கோபமாக மாறியது. யாரோ ஒரு முஸ்லிம் இளைஞன் சீதாவைக் கொண்டு போய் விட்டதாக எண்ணினான். அவளை எங்கே கொண்டு போய் விற்கப் போகிறானோ? அல்லது என்ன செய்யப் போகிறானோ? அதைக் காட்டிலும் சீதா செத்துப் போயிருந்தால், எரிந்து போன வீட்டிலேயே இருந்து மாண்டிருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்குமே! சீதாவுக்கு நேரக் கூடிய கதியை நினைக்க நினைக்க ராகவனுக்குக் கோபம் பொங்கி வந்தது. இதற்கு யார் பேரிலாவது பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்று ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது.

பையனை இறக்கி விட்டுவிட்டு ராகவனும் பாமாவும் ஜீப் வண்டியை ஓட்டிக் கொண்டு விரைந்து சென்றார்கள். வழியில் எங்கேயாவது ஒரு முஸ்லிம் தனியே போவதைக் கண்டால் அவனை ராகவன் கைத் துப்பாக்கியால் சுட்டு விட்டுப் போனான். இதைப் பாமா தடுக்கப் பார்த்தும் பயன்படவில்லை. வழியில் ஒரு ஊரில் அவர்கள் இராத்திரி தங்கும்படி நேர்ந்தது. தங்கிய வீடு ஒரு பிரபல ஹிந்து வக்கீலின் வீடு. ஏற்கெனவே கம்பெனி உத்தியோக சம்பந்தமாக அவருடன் சௌந்தர ராகவனுக்குப் பழக்கம் ஏற்பட்டிருந்தது. அந்த ஊரில் ஹிந்துக்கள் அதிகமாதலால் அதுவரை அபாயம் ஏற்படவில்லை. ஆனால் எந்த நிமிஷம் அபாயம் வருமோ என்று எதிர்பார்த்துத் தயாராயிருந்தார்கள். ராகவன் அவருடைய வீட்டில் தங்கிய இரவு ஒரு செய்தி வந்தது. ஒரு ஹிந்துப் பெண்ணுக்கு முஸ்லிம் ஸ்திரீகள் அணியும் பர்தா உடையைப் போட்டு ஒரு முஸ்லிம் இளைஞன் ஜீப் வண்டியில் வைத்து அழைத்துப் போகிறான் என்பது அந்தச் செய்தி. சுற்றுப்புறங்களில் என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக அவர்கள் வைத்திருந்த துப்பறியும் ஒற்றர்கள் இந்தச் செய்தி

யைக் கொண்டு வந்தார்கள். இதைக் கேட்டதும் சௌந்தர ராகவனுக்கு ஒரு வேளை அந்தப் பெண் சீதாவாயிருக்கலாம் என்ற சந்தேகம் உதித்தது. இல்லாவிட்டால்தான் என்ன? ஒரு ஹிந்து ஸ்திரீக்கு அபாயம் நேர்ந்திருக்கிறது என்றால், அதைத் தடுக்காமல் தான் உயிர் வாழ்ந்திருப்பதில் என்ன பிரயோஜனம்? பழைய காலத்து ரஜபுத்திர வீரர்கள் தங்களுடைய குலப் பெண்களின் மானத்தைக் காப்பாற்றுவதற்காகச் செய்த வீர சாகஸச் செயல்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்ததெல்லாம் ராகவனுக்கு அப்போது நினைவு வந்தது.

உடனே அந்த ஜீப் வண்டி எந்தச் சாலையில் போகிறது என்று தெரிந்து கொண்டு அதே சாலையில் சௌந்தர ராகவன் தன் வண்டியையும் விட்டான். வழியில் பல தடங்கல்கள் நேர்ந்தன. ஆயினும் முன்னால் போன வண்டியை விட்டுவிடாமல் தொடர்ந்து போனான். ஒரு இடத்தில் முன் வண்டி தப்பிப் போய் விட்டதாகவே தோன்றியது. பிறகு அது பெரிய சாலையிலிருந்து பிரிந்த குறுக்குச் சாலையில் திரும்பியிருக்கவேண்டும் என்று ஊகித்து அந்த குறுக்குச் சாலையில் தானும் திரும்பினான். சிறிது நேரத்துக்கெல்லாம் ‘சேனுப்’ நதியின் கரையை அடைந்தான். அங்கே ஒரு படகு ஏறக்குறைய நடு ஆற்றில் போய்க் கொண்டிருந்தது. அதில் ஒரு முஸ்லிம் கிழவனும் ஒரு ஹிந்து ஸ்திரீயும் இருப்பதை ராகவன் பார்த்து விட்டான். அதற்கு மேல் பார்ப்பதற்கோ யோசிப்பதற்கோ என்ன இருக்கிறது? வேறு எந்த விதத்திலும் அந்தப் படகைப் பிடிக்கவோ, தடுக்கவோ முடியாது. துப்பாக்கியை எடுத்துக் கிழவனைக் குறி பார்த்துச் சுட்டான். குறி தவறாமல் குண்டு பட்டது. கிழவன் படகிலிருந்து சாய்ந்து தண்ணீரில் விழுந்தான். அதற்குப் பிறகு நடந்ததை ராகவன் எதிர்பார்க்கவில்லை. படகிலிருந்த பெண்ணும் இன்னொரு மனிதனும் தண்ணீரில் குதித்தார்கள். பயந்து கொண்டுதான் குதித்தார்களோ, என்னமோ தெரியாது. படகில் ஒரு படகோட்டி மட்டும் பாக்கியிருந்தான். ராகவனுக்கு அப்போது வெறியே பிடித்திருந்தது. அந்தப் படகோட்டி மனிதனையும் நோக்கிச் சுட்டான். படகு குண்டு பட்டு ஓட்டையாகியிருக்க வேண்டும். சிறிது நேரத்துக்கெல்லாம் படகு கவிழ்ந்து விட்டது.

இந்தச் சம்பவம் ராகவனுடைய கோப வெறியைத் தணித்தது. தான் செய்தது நியாயமோ என்னமோ என்ற ஐயம் எழுந்தது. நியாயந்தான் என்று மனதை உறுதி செய்து கொண்டான். ஒருவேளை படகில் இருந்தது சீதாவாக இருக்கலாமோ என்ற சிறு சந்தேகம் எழுந்தது. அப்படி இருக்க முடியாது என்றும், சீதாவாக இருந்தால் அந்த முஸ்லிம் கிழவன் நீரில் விழுந்ததைக் கண்டு அவளும் விழுந்திருக்க நியாயமில்லையென்றும் எண்ணி ஆறுதல் பெற்றான். ஒரு வேளை அப்படிச் சீதாவாயிருந்தால்தான் என்ன? ஒரு முஸ்லிம் வீட்டுக்குப் போய்ப் பலவந்தத்துக்கு ஆளாகி உயிர் வாழ்வதைக் காட்டிலும் நதியில் மூழ்கி இறப்பதே மேலல்லவா?

பிறகு ராகவனும் பாமாவும் பல அபாயங்களைத் தாண்டி டில்லிக்கு வந்து சேர்ந்தார்கள். வந்த பிற்பாடும் ராகவனுடைய மனது கேட்கவில்லை. டில்லியில் உள்ள அகதி முகாம்களில் மட்டும் அல்லாமல் பானிபத், கர்னால், குருக்ஷேத்திரம் முதலிய ஊர்களில் உள்ள அகதி முகாம்களில் எல்லாம் போய்த் தேடிப் பார்த்தான். எங்கும் சீதாவைப் பற்றியாவது வஸந்தியைப் பற்றியாவது தகவல் கிடைக்கவில்லை. அவர்கள் இருவரும் இறந்து போயிருக்க வேண்டும் என்ற முடிவுக்கே வர வேண்டியதாயிருந்தது. ஆனால் இரண்டு மாதத்துக்கு முன்பு சீதாவின் பெயருக்குத் தாரிணியிடமிருந்து வந்த கடிதமானது சௌந்தர ராகவனுக்கு மறுபடியும் மனக்குழப்பத்தை உண்டாக்கி விட்டது.

• • •

“சூரியா? இப்போது நீ எங்கே தங்கியிருக்கிறாய்?” என்று சௌந்தர ராகவன் கேட்டான்.

“இன்னும் ஒரு இடம் என்று நிலையாக ஏற்படவில்லை. ஏற்பட்டதும் தங்களுக்குத் தெரிவிக்கிறேன். தங்களுக்கும் பாமாவுக்கும் திருமணம் நடக்கும்போது எனக்குக் கட்டாயம்

அழைப்பு அனுப்பவேண்டும். மறந்துவிடக் கூடாது" என்று சூரியா கூறினான். அவனுடைய முகத்தில் வெறுப்பும் வேடிக்கையும் கலந்த குரூரமான புன்னகை காணப்பட்டது.

"ஆகா! அதைப் ற்றி உனக்கு எப்படித் தெரிந்தது, சூர்யா? நாங்கள் இன்னும் யாரிடமும் சொல்லவில்லையே?" என்றான் ராகவன்.

"சொல்லுவானேன்? ஊகித்துத் தெரிந்து கொள்ளக் கூடியதுதானே? பாவம்! நீங்கள் எத்தனை காலம் சூனியமாக இருக்கும் இந்தப் பெரிய வீட்டில் தனியாகக் குடியிருக்க முடியும்?" என்றான் சூரியா.

"ஆம், அப்பா! நீயாவது என்னுடைய நிலைமையைத் தெரிந்து அநுதாபப் படுகிறாயே? உலகத்தில் சுயநலம் அதிகமாகப் போய்விட்டது! பிறர் கஷ்டத்தைக் கவனித்து அநுதாபப் படுவாரே இல்லை. அதுவும் தியாகிகள் என்று சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு சுயநலம் பிடித்தவர்களாகிப் போயிருக்கிறார்கள், தெரியுமா? அவர்களை உத்தேசித்தால் நம்முடைய மாஜி திவான் ஆதிவராகாச்சாரியார் போன்றவர்கள் எவ்வளவோ தேவலை!" என்றான் சௌந்தர ராகவன்.

"ஆமாம்; உலக இயல்பே அப்படித்தான். நல்லவர்கள் கெட்டவர்கள் ஆவார்கள்; கெட்டவர்கள் நல்லவர்கள் ஆவார்கள். தியாகிகள் சுயநலத்தை மேற்கொள்வார்கள். சுயநலம் பிடித்தவர்கள் பரோபகாரிகள் ஆவார்கள். இப்படிப் பட்டவர்களுக்கு மத்தியில் காந்தி மகான் ஒருவர் மட்டும் மாறாமல் இருந்து கொண்டு திண்டாடுகிறார்!"

"ஆம், உன்னுடைய காந்தி மகானை நீதான் புகழ வேண்டும். எங்களால் காந்தி செய்கிற அநியாயத்தைப் பொறுக்க முடியவில்லை. அவர் எதற்காக இங்குப் புது டில்லியில் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார் என்று தோன்றுகிறது கோபமாய்க்கூட இருக்கிறது. இவ்வளவு அகதிகளையும் இவர்கள் படுகிற துயரங்களையும் பார்த்துவிட்டுப் பாகிஸ்தானுக்குப் பரிந்து பேச எப்படித்தான் மகாத்மாவுக்கு மனது வருகிறதோ தெரியவில்லை. பட்டினி கிடந்து சர்தார் படேலைக் கட்டாயப்படுத்தியல்லவா பாகிஸ்தானுக்கு அறுபது கோடி ரூபாய் வாங்கிக் கொடுத்தார்? அவரை 'மகாத்மா' என்று சொல்வதற்கே என் நாக்குக் கூசுகிறது!"

"கூசினால் சொல்ல வேண்டாமே! சொல்லாமலிருப்பதால் மகாத்மாவுக்கு நஷ்டமில்லை, உங்களுக்கும் கஷ்டம் இல்லை. நாங்கள் என்னமோ சில பைத்தியக்காரர்கள், மகாத்மா எது சொன்னாலும் எது செய்தாலும் அதுவே சரி என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். அதனாலும் யாருக்கும் லாபமோ நஷ்டமோ இல்லை. போகட்டும்; உங்கள் கலியாணம் எப்போது?" என்றான் சூரியா.

"அதைப் பற்றித்தான் தயக்கமாயிருக்கிறது, சூரியா! நான் இப்படியே என் வாழ்க்கையை நடத்த முடியாது என்பது நிச்சயம். ஆனால் சீதாவைப் பற்றியோ உறுதியாக ஒன்றும் தெரியவில்லை. போதாததற்கு, தாரிணியின் கடிதம் வேறு என் மனதை அடியோடு குழப்பிவிட்டிருக்கிறது......"

"தாரிணியின் கடிதம் இந்த விஷயத்தில் உங்கள் மனதைக் குழப்புவானேன்?" என்றான் சூரியா.

"உன்னிடம் சொன்னால் என்ன? ஒரு மாதிரி உனக்கு முன்னமேயே தெரிந்த விஷயந்தான். தாரிணி என்னுடைய முதற் காதலி, சூரியா! சீதாவை இழந்ததினால் எனக்கேற்பட்ட மனத் துயரத்தை மாற்றக் கூடியவள் தாரிணி ஒருத்திதான். ஒரு வேளை உனக்கு இந்த விஷயத்தில் ஆட்சேபணை இருக்கக் கூடும். ஆனாலும் நீ இதில் தலையிடாமலிருந்தால் நல்லது."

"மன்னிக்க வேண்டும்; ராகவன்! நான் அப்படியெல்லாம் பிறர் காரியத்தில் தலையிடுகிறவன் அல்ல. ஒரு தடவை பிறர் காரியத்தில் தலையிட்டுவிட்டு அதன் பலன்களை இன்றுவரை அநுபவித்துக் கொண்டிருக்கிறேன். போதும் போதும் என்றாகிவிட்டது. உங்களுக்கு இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். சீதா செத்துப் போயிருந்து ஒரு வேளை ஆவி வடிவத்தில் இந்த உலகத்துக்குத் திரும்பி வந்தால் நீங்களும் தாரிணியும் கலியாணம் செய்து கொள்வதைப் பார்த்து ஆனந்தமடைவாள். உங்கள் கலியாணத்துக்கு வந்திருந்து சீதா ஆசிகூடக் கூறுவாள்!" என்றான் சூரியா.

புது டில்லியில் கலை விருந்து

"ஆய கலைகள் அறுபத்து நான்கு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனினும், அந்த அறுபத்து நாலு கலைகளில் கலைமகளின் இரு கண்களுக்குச் சமமான கலைகள் சங்கீதமும் பரத நாட்டியமும். இந்த இரண்டு அற்புதமான கலைகளும் தென்னாட்டில் சிறந்திருப்பது போல் உலகில் வேறு எங்கேயும் சிறப்படையவில்லை. கர்நாடக சங்கீதமும் பரதநாட்டியமும் தென்னிந்தியாவின் அரும்பெரும் கலைச் செல்வங்கள் ஆகும்.

புது டில்லியில் இந்திய அரசாங்கத்தின் காரியாலயங்களில் தென்னாட்டினர் பல துறைகளிலும் பணி செய்து நல்ல பெயர் வாங்கி வருகிறார்கள். உத்தியோகம் செய்யப் போன இடத்தில் நம்மவர்கள் நம்முடைய கலைகளை மறந்துவிடவில்லையென்பது மிகவும் பாராட்டவேண்டிய காரியம். வடநாட்டுக்குச் சென்றுள்ள தென்னிந்தியர்கள் நம்முடைய கலைகளை எவ்வளவு அருமையாகப் போற்றி வளர்த்து வருகிறார்கள் என்பதற்குப் புது டில்லி 'கலா மந்திரம்' ஒரு சிறந்த உதாரணமாய் விளங்குகிறது.

கலா மந்திரம் செய்து வரும் பணிகளைப் பற்றி ஏற்கெனவே 'கல்கி'யில் விவரங்கள் வெளியாகியிருக்கின்றன. கலா மந்திரத்தின் ஸ்தாபகரும் போஷகரும் நிர்வாகியும் உடலும் உயிருமாக விளங்கும் ஸ்ரீ சுப்புடு அவர்களிடமிருந்து சென்ற வாரத்தில் ஒரு கடிதம் வந்தது.

"நான்தான் சுப்புடு; இந்த வருஷம் கலாமந்திரத்துக்குப் பிறந்திருக்கும் மகத்தான அதிர்ஷ்டத்தைப் பற்றித் தங்களுக்குத் தெரியப்படுத்தப் போகிறேன்" என்று கடிதம் ஆரம்பமாகிறது.

ஸ்ரீ சுப்புடு மேலும் சொல்கிறார்: "டில்லியில் மட்டற்ற செல்வாக்கையுடைய ஸ்ரீ பி. கே நாராயணய்யர் இவ்வருஷம் கலா மந்திரத்தின் தலைவர் பதவியை ஏற்றிருக்கிறார். இந்தச் சம்பவம் எங்களுக்கு அளித்திருக்கும் உற்சாகத்துக்கு எல்லையில்லை. அவர் 'ஸ்டேட் பிரைட்' பாத்திரங்களின் ஏஜெண்ட். அவர் தொட்ட காரியம் 'எப்போதும் பிரகாசமாயிருக்கும்' என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? ததாஸ்து.

"தலைவர் ராஜாஜி 'நம்ப குப்புசாமி' என்று அன்புடன் குறிப்பிடும் தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகக் காரியதரிசி, கலா மந்திரத்துக்கும் இந்த வருஷம் காரியதரிசியாயிருக்கிறார். கன்னித் தமிழைப் போல் கலாமந்திரமும் நித்திய யௌவனத்துடன் விளங்கப் போகிறது என்பதில் சந்தேகம் என்ன?

மூன்றாவதாக, புள்ளிக் கணக்கு நிபுணர் ஸ்ரீ எஸ் சுப்பிரமணியம் (தமிழ்ச் சங்கத் தலைவர்) கலா மந்திரத்தின் நிர்வாக சபை அங்கத்தினராக வந்துள்ளார்.

கடைசியாக, நடனக் கலையில் தேர்ச்சி பெற்ற ஸ்ரீமதி சங்கரி கலாமந்திரத்தின் நடனக் கலை ஆசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஸ்ரீமதி சங்கரியின் வசீகரமான நடனம் டில்லி வாசிகளை ஒரு குலுக்குக் குலுக்கி வைத்திருக்கிறது. ஸ்ரீமதி சங்கரி, கலை உலகில் மிகவும் புகழ் பெற்ற ஸ்ரீ எப். ஜி. நடேச ஐயரின் புதல்வி."

குமாரி தாரா—ஸ்ரீமதி சங்கரி



இவ்வாறெல்லாம் நம் புது டில்லி சுப்புடு ஆனந்த பரவசத்தில் எழுதியிருக்கிறார். ஸ்ரீ சுப்புடுவின் ஆனந்தத்தோடு நம்முடைய மகிழ்ச்சியையும் அதிகமாக்கும் மற்றொரு நிகழ்ச்சியின் விவரமும் டில்லியிலிருந்து கிடைத்திருக்கிறது.

அரசாங்க அச்சு இயந்திரத் தொழிலாளரின் குழந்தைகள் படிப்பதற்காக ஒரு

பள்ளிக்கூடம் புது டில்லியில் நடக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தின் உதவிக்காக ஒரு நடனக் கலை விருந்து ஜூலை 6-ல நடைபெற்றது. பாகிஸ்தான் ஹை கமிஷனர் உள்பட பல கனதனவான்கள் விஜயம் செய்து கண்டுகளித்தார்கள். நடன விருந்துக்கு வந்தவர்கள் அனைவரும் "இந்த நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்வதற்கு 'அற்புதம்' என்பது சின்ன வார்த்தை' என்ற அபிப்பிராயத்துடன் திரும்பிப் போனார்கள்!



குமாரி அம்புஜா
(கலா மந்திரத் தலைவர் ஸ்ரீ பி. கே. நாராயணய்யரின் புதல்வி)

அத்தகைய அபிப்பிராயம் உண்டுபண்ண முக்கிய காரணமாயிருந்த நிகழ்ச்சியில் ஸ்ரீமதி சங்கரியும் குமாரி தாராவும் ஆடிய ராதா கிருஷ்ண நடனம் ஒன்று; குமாரி ஸுசீலாவின் பாம்பாட்டி நடனம் மற்றொன்று. குமாரி ஏ. என். விசாலாட்சியின் பின்னணி சங்கீதம் அன்றைய நிகழ்ச்சிகள் எல்லாவற்றுக்கும் சோபையை அளித்தது. "குயில் கூவுது பார்!" என்னும் ஸ்ரீ சுப்புடுவின் சொந்த சாஹித்யத்தைக் குமாரி ஏ. என். விசாலாட்சி பாட ஆரம்பித்த போது சபையோர் அனைவரும் "குயில் எங்கே?" என்று அங்கும் இங்கும் திரும்பித் திரும்பிப் பார்த்தார்களாம்!

இவ்வாறாக, புது டில்லியில் நம்முடைய அருங் கலைகளை வளர்த்து வருவதோடு பற்பல பொதுப் பணிகளுக்கும் பணந் திரட்டிக் கொடுத்து உதவி வரும் ஸ்ரீ சுப்புடுவுக்கும் அவருடைய கலா மந்திரத்துக்கும் அவருடன் ஒத்துழைப்பவர்கள் அனைவருக்கும் நம்முடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

★ ★ ★ வேறு பகுதியில் வழக்கம்போல் “வட்ட மேஜை”க் கடிதங்கள் வெளியாகியிருக்கின்றன. கல்விச் சீர்திருத்தம் சம்பந்தமாகச் சென்ற “கல்கி” இதழில் வெளியான “கல்வி நோய்க்கு ஒரு சஞ்சீவி” என்னும் தலையங்கம் வழக்கத்தைவிட அதிகமாக நேயர்களின் கவனத்தைக் கவர்ந்திருப்பதாகத் தெரிகிறது. விஷயத்தின் முக்கியத்தைக் கருதி, கல்வி சம்பந்தமான நூற்றுக் கணக்கான கடிதங்களில் சிலவற்றைக் கீழே தனியாக வெளியிடுகிறோம்.

சஞ்சீவிக்கு ஜே!

★ ★ ★

இரண்டரை மணிப் படிப்பு

ஜூலை 24-ம் தேதி “கல்கி”யில் நான் ரொம்ப ரசித்துப் படித்தது ‘சஞ்சீவி’யான தலையங்கத்தைத்தான். என் நண்பர்களையெல்லாம் “கல்கியைப் பார்த்தாயா?” என்று கேட்டால் உடனே அவர்கள் “சஞ்சீவியைப் படித்தாயா?” என்று என்னைத் திருப்பிக் கேட்கிறார்கள். அப்படி இள மாணவர்களிடம் பரவிப் பிரசித்தி யடைந்துவிட்டது அந்தச் சஞ்சீவி.

அந்த லோபோ பிரபு சொன்னமாதிரி எங்களுக்கெல்லாம் படிப்பில் ருசி இல்லை என்பது சுத்த அபத்தம். அநேகமாக எல்லாப் பையன்களுக்கும் படிக்க ஆசை அதிகமாகத்தான் இருக்கிறது. ஆனால் அதற்கு வேண்டிய பணம்தான் இல்லை. அதனால்தான் பல பையன்கள் ஓசிப் படிப்பான ஐந்தாவதோடு நின்று விடுகிறார்கள். நானும் அந்தமாதிரி நிற்க வேண்டியவன் தான். ஏதோ பகவான் கிருபையால் என் உறவினர்கள் இலவசமாகச் சாப்பாடு போடுவதாக ஒப்புக் கொண்டதால் இந்த மேல் படிப்பையாவது என்னால் தொடர முடிந்தது. அரைச் சம்பளம் கட்டும் எனக்கே மாதாமாதம் ஒழுங்காகப் பணத்தைக் கொடுக்க என் பெற்றோர்களுக்குச் சக்தி இல்லை. ஏழை மாணவர்கள் படித்து முன்னுக்கு வர வேண்டுமானால் உங்களுடைய ‘சஞ்சீவி’யான வழிதான் ரொம்பவும் சிறந்தது. அதாவது “ஒரு வேளைப் பள்ளிக்கூடம், இரண்டரை மணிப் படிப்பு” என்றிருந்தால் எனக்கு வேண்டிய படிப்புச் செலவை நானே சம்பாதித்துக் கொண்டு விடுவேன். எப்படி யென்றால் எனக்கு நூல் நூற்கத் தெரியும். தினம் அரை நாள் ஓய்வு கிடைத்தால் குறைந்தது ஒரு சிட்டம் சிரமமில்லாமல் நூற்றுவிடுவேன். மாதாமாதம் சுமார் ரூ. 6-10-0 கிடைத்து விடும். என்னுடைய பள்ளிக்கூடச் செலவிற்கு இது போதுமல்லவா?

என் நண்பனொருவன் மிக ஏழை. ஐந்தாவது வகுப்புக்கு மேல் படிக்க அவனுக்கு வசதி இல்லை. வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்காமல் அவன் காப்பிக் கிளப்புக்குச் சப்ளையராக வேலை செய்யப் போய்விட்டான். அவனுக்கோ மேலே படிக்க வேண்டுமென்று மிகவும் ஆசை. தங்களது சஞ்சீவி ஜயத்துடன் பரவி விட்டால், அவன் பாதி வேளை கிளப்பில் வேலை செய்துகொண்டு, பாதி வேளை படிக்கவும் போகலாம். அவனே பணம் சம்பாதித்துத் தன்னுடைய படிப்பை முடித்துக் கொள்ளலாம் இல்லையா?

மன்னார்குடி
25–7–49

ஆர். சடகோபன்

★

யோசனை ஏறுமா?

சென்ற வாரம் வெளியான “கல்கி”யில் “கல்வி நோய்க்கு ஒரு சஞ்சீவி” என்ற தலைப்பில் தாங்கள் எழுதியிருந்த தலையங்கத்தை வாசித்துக் களிப்புற்றேன். குழந்தையைப் பெற்றுள்ள ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் கட்டுரையைப் பெரிதும் ஆதரிப்பர் என்பது திண்ணம்.

வாழ்க்கைக்கு அத்யாவசியமானது பகுத்தறிவே; புத்தக அறிவு அல்ல. பகுத்தறிவை வளர்ப்பது பள்ளிக்கூடத்துக்கு வெளியேதான் சாத்தியம். ஆதலின் பள்ளிக்கூடத்தில் மாணவன் செலவழிக்கும் காலத்தை மிகவும் குறைவுபடுத்த வேண்டும். ‘இரண்டரை மணிப் படிப்பு’ என்று தாங்கள் யோசனை கூறியிருப்பது மிகவும் வரவேற்கத் தக்கது. சமீபத்தில் நுங்கம்பாக்கம் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஒரு விழாவில் பேசும்போது கல்வித் துறை

யில் மேலும் செலவழிக்கப் பணம் இல்லை என்று கல்வி மந்திரி கூறினர். கார்ப்பொரேஷனுக்குப் பணமில்லை என்று கமிஷனர் கூக்குரலிட்டார். தங்கள் யோசனைப்படி பள்ளிக்கூடப் படிப்பு நேரத்தைக் குறைத்து விட்டால் கார்ப்பொரேஷன் கதற வேண்டாம்; அரசாங்கமும் அழவேண்டாம்; பணக்காரர்களிடம் பிச்சை கேட்கவும் வேண்டாம்; பள்ளிக் கூடங்களையும் அதிகரிக்க அவசியமும் இராது.

சென்னை
25-7-49 ந. ஸ. பார்த்தசாரதி

★

கல்வி நோய்க்கு இன்ஜக்ஷன் !

சென்ற, ஜூலை 24-ம் தேதி இதழில் "கல்வி நோய்க்கு ஒரு சஞ்சீவி" என்று தலையங்கம் தீட்டி யிருக்கிறீர்கள். கல்வி நோய்க்குச் சரியான இன்ஜக்ஷன் கொடுத்து இருக்கிறீர்கள். தாங்கள் சொன்ன பத்திய முறைகளைக் கையாண்டால், படிப்பின்மை என்னும் நோய் பறந்தோடிப் போகும்.

பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைகள் படிப்பதில் சிரத்தை கிடையாது என்றும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைத் தாங்கள் செய்யும் தொழிலில் ஈடுபடுத்த விரும்புகிறார்களென்றும் பலபேர் பிரபு சொல்லுகிறார்.

நான் ஒரு ஆரம்பப் பள்ளி ஆசிரியன். அநுபவ முறையில் எனக்குப் பெற்றோர்கள், பிள்ளைகள் இவர்களின் பண்பு ஓரளவு தெரியும். அந்த முறையில் நான் கண்ட அளவில் பலபேர் துரை சொல்லுகிறபடி பெற்றோர்களுக்குத் தங்கள் பிள்ளைகள் கல்வியில் சிரத்தை கிடையாதென்ற நிலை சில வருஷங்களுக்கு முன்னால் இருந்திருக்கலாம். இன்று அந்த நிலை இல்லை. சர்வகலா சாலை முதல் சாதாரண ஆரம்பப் பள்ளி வரை பிள்ளைகளைச் சேர்க்கப் பெற்றோர்கள் வருஷா வருஷம் செய்யும் பகீரதப் பிரயத்தனம் சொல்லுந்தரமன்று.

இந்த நிலை மாற வேண்டுமானால், தங்களுடைய திட்டப்படி 2½ மணி நேரம் பயிற்சியில், ஒரு ஆசிரியர் குறைந்தது 30 மாணவர்களுக்குக் காலையிலும், 30 மாணவர்களுக்கு மாலையிலும் கல்வி கற்பிக்கலாம். பிள்ளைகள் அரை நாள் விடுமுறையில் தம் பெற்றோர்களுக்கு உதவியாக வேலை செய்வதோ, உலக அறிவு பெறுவதிலோ கவனத்தைச் செலுத்தலாம்.

வாலாஜாப்பேட்டை
25—7—49 சி. ஏ. வரதராஜன்

கல்வியில் புரட்சி

"கல்வி நோய்க்கு ஒரு சஞ்சீவி" என்ற கட்டுரையைப் படித்தேன். இதை ஆபத்தில் உதவிய அபூர்வ சஞ்சீவி என்றே கூறலாம். நம் மாகாணத்தில் மதுவிலக்கால் பெரும் பணம் குறைந்து, பல ஆரம்பப் பாடசாலைகளை மூடிவரும் இந்நாளில் தாங்கள் கூறும் 'ஷிப்டு' முறை பெரிதும் வரவேற்கத் தகுந்தது. இத் திட்டத்தால் அரசாங்கத்திற்குச் செலவு குறைவது மட்டுமல்லாமல், ஆசிரியர்கள் கிடைக்காத பஞ்சமும், கட்டட வசதி இல்லாக் குறையும் நீங்கிவிடும். இம் மாற்று முறைக் கல்வித் திட்டம் கிராம மக்களுக்கு ஒரு வரப் பிரசாதமாகும்.

கிராமப் பிரதேசத்தில் பிள்ளைகள் பள்ளிக்கு ஒழுங்காய்ச் செல்வது கிடையாது. காரணம், தங்கள் வருவாயைக் கருதிப் பெற்றோர்கள் பிள்ளைகளைத் தங்கள் தொழில் முயற்சிக்கு நிறுத்திக் கொள்ளுகிறார்கள். கல்வி கற்கும் கால அளவை 2-30 மணியாகக் குறைத்து விட்டால், காலையில் பள்ளி செல்லும் மாணவர்கள் மாலையில் பெற்றோருடன் தொழில் முயற்சியில் ஈடுபட வசதி ஏற்படுகிறது. அவ்வாறே மாலையில் பள்ளி செல்லும் மாணவர்கள் காலையில் தங்கள் பெற்றோருடன் தொழில் முயற்சிக்கு உதவ ஏதுவாகிறது. பிள்ளைகள் கற்கும் நேரம் குறைவதால் பெற்றோர்கள் கண்டிப்பாகப் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவார்கள். இந்த மாற்று முறையால் பத்து ஆண்டுகளுக்குள் நாட்டிலிருந்து கல்வி இன்மையை ஒழித்துவிடலாம்.

விருதுநகர் எஸ். வின்சென்ட் ராஜ்
25-7-49 (தலைமை ஆசிரியர்)

★

ஏமாற்றும் வித்தை

ஜூலை 24-ம் தேதி "கல்கி" இதழில் எழுதியுள்ள "கல்வி நோய்க்கு ஒரு சஞ்சீவி" என்ற தலையங்கத்தை வாசித்தேன். அதில் குறிப்பிட்டிருப்பது அவ்வளவும் உண்மை. எதையோ 'எழுதுகிறேன் என்று நினைக்க வேண்டாம்; என் சொந்த அனுபவத்தைத்தான் கூறுகிறேன். நான் இந்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் 'பாஸ்' செய்தவன். ஹெட் மாஸ்டர் இங்கிலீஷ் வகுப்புக்கு வந்தால் என்னைக் காணமாட்டார்; முதல் 'பீரிட்' முடிந்ததும் நான் வீட்டுக்கோ, காப்பி ஹோட்டலுக்கோ போய்விடுவது வழக்கம்.

என் கையில் ஒரு நோட்புக்கும் கிடையாது. அப்படி யிருக்க இங்கிலீஷ் பரீட்சையில் தேற நான் போட்ட பிளான் பாருங்கள் :—

Poetry	10	மார்க்கு
Analysis	5	மார்க்கு
Parts of speech	5	மார்க்கு
Grammar	15	மார்க்கு
மொத்தம்	35	மார்க்கு

இப்படிப் புத்தகம் படிக்காமல் சர்க்காரை ஏமாற்றித் தேறலாம் என்று நம்பிக்கை எனக்கிருந்தது. அந்த நம்பிக்கை நிறைவேறியும் விட்டது.

நோட்டுப் புத்தகங்களை வைத்துக் கொண்டு ஓயாமல் படித்தவர்கள் 'பெயி' லாகி விட்டார்கள். பரீட்சைக்கு ஒரு வாரம் இருக்கு முன் எல்லாவற்றையும் படித்து நான் பாஸ் செய்து விட்டேன். இதனை யெல்லாம் எனக்கு அதிக மூளை இருப்பதாக நினைக்க வேண்டாம் நான போட்ட பிளான் அப்படி; அதுதான் ஏமாற்றும் வித்தை! மற்றப்படி, இவ்விதம் நான் பாஸ் செய்ததில் ஒரு ஆனந்தமும் அடைய விரும்பவில்லை.

கொல்லங்கோடு
24—7—49 ச. கிருஷ்ணன் குட்டி

★

நஷ்டம் இல்லை!

தங்கள் ஜூலை 24-ம் தேதி இதழில் "கல்வி நோய்க்கு ஒரு சஞ்சீவி" என்னும் தலைப்பில் தாங்கள் இப்பொழுது உள்ள கல்வி முறை நமது நாட்டிற்கு ஏற்ற நல்லதென்றும் அது சிறுவர் சிறுமிகளின் மூளையை வளரச் செய்கிறது என்றும் எழுதி இருக்கிறீர்கள். ஆனால் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியரின் கல்வியைப் பற்றித் தாங்கள் ஒன்றுமே குறிப்பிடாதது வருந்தத்தக்க விஷயமாகும். 1948—49-ம் ஆண்டுகளில் நடக்கப்பட்ட Basic Training-ல் உள்ள கஷ்டங்களைப் பற்றியும் தாங்கள் ஒன்றுமே குறிப்பிடவில்லை. டாக்டர் மார்க்கன், 'வாரத்திற்கு முப்பது மணி நேரம் பள்ளியில் குழந்தைகளை இருக்கச் செய்வது ஒரு சிறைவாசம்' என்றும், 'பெரியவர்களுக்குச் சிறைவாசம் எவ்வளவு துன்பம் தருகிறதோ அவ்வளவு சிறுவர்களுக்கும் பள்ளிக் கூடத்துச் சிறைவாசம் துன்பம் தருகிறது' என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இதைவிட Basic Training-ல் உள்ள திட்டங்கள் மோசமானவை. முதலாவது உள்ளூரில் இருக்கும் பிள்ளைகளும் ஹாஸ்டலில் இருக்க வேண்டும். 4-45 மணிக்கு எழுந்து 6 மணிக்குள் காலைக்கடன்களை முடித்துவிட வேண்டும். 6—8 மணிக்குள் சமையல் பெருக்குதல் போன்ற தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகளை மாணவிகள் முடித்து விட வேண்டும். 8 மணிக்குக் காலை ஆகாரம் அருந்தியபின், குறிப்பிட்டவர்கள் 9-30 மணிக்குள் சமையல் செய்துவிட வேண்டும். 9-30 மணிக்கு வகுப்பிற்கு வந்தால் நூல் நூற்றல், பஞ்சைச் சுத்தம் செய்தல் (அதன்மூலம் T. B.யை வரவழைத்துக் கொள்ளுதல்) எல்லாம் நடக்கும். பின்பு உபாத்திமைத் தொழிலுக்கு ஏற்ற பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். 12-30 மணிக்குப் பள்ளிக்கூடம் சாப்பாட்டிற்காக விட்டுத் திரும்பவும் 2 மணிக்கு மறுபடியும் ஆரம்பம். மறுபடியும் காலையில் செய்த வேலைகளை 6 மணி வரைக்கும் செய்ய வேண்டும். பின்பு 7-30 மணிக்குச் சாப்பாடு. 9-30 மணி வரையில் சொந்த வேலைகளைக் கவனித்துக் கொள்ளுதல். இவ்வாறு கொஞ்சம்கூட ஓய்வு ஒழிவில்லாத கல்வியை யார்தான் விரும்புவார்கள்?

அன்னிய பாஷை என்று உலக பாஷையான ஆங்கிலத்தை இந்த Training-ல் ஒதுக்கியாய் விட்டது. அது போதாதென்று தாய் பாஷையாகிய தமிழையும் இந்த Training-ல் ஒதுக்கி விட்டது தமிழுக்கே மானக்கேடான ஒரு விஷயமாகும். இந்த லட்சணத்தில் எங்களுக்கு லீவு நாட்களும் மிகக் குறைவே. மாணவர்களுக்கு ஒரு நாளைக்கு 2-30 மணி நேரம் படிப்பு போதும் என்று கூறுகிறீர்கள். ஆனால் உபாத்திமைத் தொழிலுக்குப் படிப்பவர்களுக்கோ 7 மணி நேர ஓய்வு உண்டு. அதாவது, தூங்கும் நேரம் மட்டும்!

வோபோ பிரபு தம் பிரசங்கத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைப்பதும் கட்டடங்கள் கிடைப்பதும் அதிகக் கஷ்டமாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார். இந்நிலையில் Training-ல் இரண்டு வருடம் படிக்க வேண்டும் என்று இருக்கிறது. அதிக உபாத்தியாயர்கள் வேண்டியிருப்பதால் அந்த இரண்டு வருடத்தை ஒரு வருடமாகக் குறைத்து விட்டால் சர்க்காருக்கு ஒன்றும் கஷ்டம் உண்டாகிவிடாது.

திருவண்ணாமலை
25—7—49 த. திலகவதி

நமக்கு வேண்டிய உணவு

ஸ்ரீபாத சங்கர்

இன்று நமக்கு சர்க்கார் நிபுணர்கள் கொடுத்து வரும் புள்ளி விவரங்கள் சரியானவை அல்ல. பத்து சதம் உணவுப் பொருள் அதிக உற்பத்தி செய்துவிட்டால் சரியாகப் போய்விடும் என்கிறார்கள். இது பெரும் தவறான அபிப்பிராயம். நிலைமை உண்மையாகவே அப்படியிருந்தால் அதில் ஒரு கஷ்டமும் இல்லையே! பத்து வேளை சாப்பிடுகிறவன் ஒரு வேளை சாப்பிடாவிட்டால் பரவாயில்லை; ஏகாதசி விரதம் அனுஷ்டித்தே இறக்குமதியை நிறுத்திவிடலாம். இப்பொழுது உற்பத்தி செய்து வருவதில் மூன்றில் ஒரு பங்காவது அதிகமாக உற்பத்தி செய்தால்தான் நாட்டில் இருக்கும் உணவுக் குறை தீரும்.

இந்திய சர்க்கார் விவசாயக் காரியதரிசி ஸ்ரீ எம். பஞ்சாபி அவர்கள் ஜூன் மாதம் 17-ம் தேதி பாரீஸில் கூடிய உலக உணவு உற்பத்தி சங்கக் கூட்டத்தில் பேசிய பொழுது, "உலகில் உள்ள ஜனங்களில் மூன்றில் இரண்டு பங்கு ஜனங்களுக்கு வேண்டிய அளவு உணவு இல்லை" என்று சொல்லியிருக்கிறார். இந்தியாவிலும் இதே நிலைமைதான். இதை நாம் பிரத்யட்சமாக அனுபவித்து வருகிறோம். நமக்கு இன்று கொடுத்து வரும் ரேஷன் வாரத்தில் நன்றாகச் சாப்பிடுகிறவர்களுக்கு மூன்று நாட்களுக்கும், சாதாரணமாகச் சாப்பிடுகிறவர்களுக்கு நான்கு நாட்களுக்கும் மட்டுமே வருகிறது. வீடு தவறாமல் மீதி நாட்களுக்கு 'பிளாக் மார்க்கெட்'டில்தான் அரிசி வாங்கிச் சாப்பிட்டு வருகிறார்கள்.

1949-ல் பாதி ரேஷன் கொடுக்கப்பட்டு வருபவர்களில் பாதிக்கு மேல் 1951-ல் பூரா ரேஷன் வாங்க வேண்டியவர்களாக வளர்ந்து விடுவார்கள். இன்று பால் குடிக்கும் ஒரு வருஷத்திய குழந்தைகள் எல்லாம் 1951-ல் நான்கு வயதுக் குழந்தைகளாகி நன்றாக நாலு வேளை சாப்பிட்டாக வேண்டும். பெரியவர்கள் சாப்பாட்டில் காய் கறிகள் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். குழந்தைகளோ வெறும் ரசம் சாதம், மோரும் சாதம் சாப்பிடுகிறவர்கள். நல்ல பாலோ, பழரசமோ அவர்களுக்குக் கிடைப்பதில்லை. பெரியவர்கள் இரண்டு வேளை சாப்பிடுகிற உணவைக் குழந்தைகள் நான்கு வேளை பிரவிச் சாப்பிடுகிறார்கள்.

இப்பொழுது உற்பத்தி செய்து வரும் உணவுப் பொருள்களை 15 சதம் அதிகப்படுத்தினாலும் 1951-ல் உணவுப் பொருள் இறக்குமதியை அடியோடு நிறுத்த முடியுமா என்பது சந்தேகம்.

உணவு மந்திரிகளும் உணவுக் கமிஷனர்களும் வெளி நாடுகளிலும் டில்லியிலும் பம்பாயிலும் கூடிப் பேசுவதால் இதைத் தீர்க்க முடியாது. மத்திய சர்க்கார் உணவுப் பொருள் உற்பத்திப் பெருக்கை மாகாண சர்க்கார்களிடமே ஒப்படைத்து விட வேண்டும். மாகாண சர்க்கார்கள் தற்சமயம் இந்த முக்கியமான வேலையைக் கவனிப்பதை விட்டு வேறு எந்த வேலையிலும் தலையிடக் கூடாது.

நம் மாகாணத்தைப் பொறுத்த வரை ஐந்தாறு ஜில்லாக்களில், அங்கு வசிக்கும் ஜனங்களுக்கு வேண்டிய அளவுக்கு மேல் உணவு உற்பத்தியாகிறது. சுமார் இருபது ஜில்லாக்களில் உணவு கொஞ்சம் குறைவாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஜில்லாவையும் தனித் தனியாக எடுத்துக்கொண்டு தாலூக்கா வாரியாகவும் பிர்க்கா வாரியாகவும் பிரித்து, ஒவ்வொரு பிர்க்காவிலும் எவ்வளவு ஏக்கரா நிலங்கள் இருக்கின்றன என்றும், அவைகளில் எவ்வளவு சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன என்றும், எத்தனை ஏக்கராக்கள் சாகுபடி செய்யலாயக்காக இருந்தும் சாகுபடி செய்யப்படாமல் இருக்கின்றன என்றும், அந்த பிர்க்காவில் வசிக்கும் ஜனங்களின் தொகையும், அங்கு விளையக் கூடிய தானியங்களின் விவரமும் முதலில் கண்டு பிடித்தாகவேண்டும். இதைக் கிராமாதிகாரிகள், ரிவின்யூ இன்ஸ்பெக்டர்கள், தாசில்தார்கள் இவர்களின் உதவியைக் கொண்டு கணக்கெடுத்து விடலாம். இவர்கள் சரியாகவும் துரிதமாகவும் இந்த வேலையைச் செய்ய பிர்க்காவுக்கு ஒன்றிரண்டு காங்கிரஸ்காரர்களையோ அல்லது இந்த வேலையில் ஈடுபட விரும்பும் பிரமுகர்களையோ கௌரவ உத்தியோகஸ்தர்களாக நியமிப்பது நலம்.

மேற்கூறிய விவரங்களைக் கண்டு பிடிப்பதினால் அந்தந்த பிர்க்காவில் உள்ளவர்


களுக்கு வேண்டிய அளவுக்கு உணவு உற்பத்தி செய்வதற்கு என்னென்ன சௌகரியங்கள் செய்ய வேண்டும் என்பதை வெகு சுலபமாக அறிய முடியும்.

இந்த விவரங்களைக் கண்டு பிடித்த பிறகு ஒவ்வொரு பிர்க்காவுக்கும் அவரவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்து அவர்கள் பிரயாசைப் பட்டு உணவுப் பொருள்களை அதிகப் படுத்திச் சுகமாக வாழலாமே தவிர வேறு எந்தக் காரணத்தைக் கொண்டும் வெளியூர்களிலிருந்து அவர்களுக்கு எவ்விதமான உணவுப் பொருளும் அளிக்கப் படமாட்டாது என்பதை நன்கு மனதில் பதியும்படியாகக் கூறிவிட வேண்டும். நாங்கள் கஷ்டப்பட மாட்டோம், ஒத்துழைக்க மாட்டோம், எப்படியாவது எங்கிருந்தாவது எங்களுக்கு உணவு கொண்டு வந்து கொடுங்கள் என்று சொல்லும்படியான ஜனங்களைக் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. பயிரிடுவதற்கு வேண்டிய சௌகரியங்களைக் கோரும் விவசாயிகளுக்குச் சுலபமாக, சீக்கிரமாக எல்லாவிதமான உதவிகளும் கிடைக்கும்படி செய்ய வேண்டியது சர்க்காரின் கடமை. இது இன்று சரியாக நடக்கவில்லை என்று பல புகார்கள் இருக்கின்றன. கிணறு வெட்டப் பணம் வாங்குவதற்கும், உரம், விதை, விவசாயக் கருவிகள் பெறுவதற்கும் அநேக அதிகாரிகளிடத்தில் பல தடவை முறையிட வேண்டியிருக்கிறது. இதற்குள் பயிரிட வேண்டிய காலமும் தவறிவிடுகிறது. இனிமேல் இம்மாதிரியான கஷ்டங்கள் நேரிடாமல் செய்துவந்தால் விவசாயிகள் ஊக்கமாகவும் உற்சாகமாகவும் பயிரிடப் பிரயத்தனப்படுவார்கள்.

இந்த மாகாணத்திலுள்ள சுமார் பத்தாயிரம் காங்கிரஸ் தியாகிகளுக்கும், யுத்தத்திற்குச் சென்று வந்த ஆயிரக் கணக்கான சோல்ஜர்களுக்கும், பயிரிடப் பிரியப்படும் பல்லாயிரக் கணக்கான ஏழைகளுக்கும் இரண்டு மூன்று மாதத்துக்குள் நிலம் வழங்குவதனால் குறைந்தது இரண்டு லட்சம் ஏக்கராக்களில் அதிகப்படி உணவு உற்பத்தி செய்யலாம். இவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தால் இவர்கள் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் உணவு உற்பத்தி வேலையில் ஈடுபடுவார்கள். சர்க்கார் மனம் வைத்தால் இவர்களுக்கெல்லாம் நிலம் கொடுப்பதும், பயிரிடுவதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுப்பதும் சுலபமான காரியம்.

அடிக்கடி ஜனங்களை ஒத்துழைக்க வேண்டும் என்று சொல்கிறார்களே ஒழிய சர்க்கார் ஜனங்களுடன் ஒத்துழைப்பதில்லை. அதனால்தான் இன்னும் நம்முடைய உணவுக் கஷ்டம் தீர்ந்தபாடில்லை.

புதிசு!



சங்கல்பமும் சந்தர்ப்பமும்

வாசவன்

அடம் பிடித்து அலறிய குழந்தையைச் சமாதானப் படுத்துவதற்காகத் தூளியில் போட்டு ஆட்டிக் கொண்டிருந்தாள் மங்களம். அப்படியும் குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. மங்களம் எவ்வளவோ முயன்று பார்த்தாள்; தாலாட்டுப் பாடினாள்; கிலுகிலுப்பையை ஆட்டினாள். பிரயோஜனமென்ன? அதனுடைய அழுகை வரவர அதிகமாயிற்றே ஒழியக் குறையவில்லை.

இதை, ஈஸிச்சேரில் அமுத்தலாகச் சாய்ந்து கொண்டிருந்த சரஸா, தான் பிடித்திருந்த புத்தகத்தின் இடுக்கு வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தக் குழந்தை செய்யும் அடத்தையும், அதைச் சமாதானப்படுத்தப் பலவிதத்திலும் முயன்று தோல்வியுறும் மன்னியையும் பார்க்கப் பார்க்க அவளுக்கு ஒரே வேடிக்கையாக இருந்தது.

ஆனால் மங்களத்திற்கு இதையெல்லாம் கவனிக்க நேரமேது? குழந்தையை ஏமாற்றும் முயற்சியில் மறுபடியும் ஈடுபட்டாள். குழந்தையினுடைய கவனத்தை வேறு பக்கம் திருப்பலாம் என்ற எண்ணத்துடன், "கண்ணா! அதோ எந்த மாமாவோ ரேடியோவிலே பாடுகிறார். அதைக் கேட்டுண்டே நீ தூங்கிப் போவாயாம். அப்புறம் அம்மா வந்து ஒரு முத்தம் தருவாளாம்!" என்று கூறிக்கொண்டே குழந்தையின் பிஞ்சுக் கன்னத்திலே, அச்சாரமாகப் பலப் பல, பலப் பல முத்தங்களைத் தந்தாள். குழந்தை அவ்வளவு சாமான்யமாக ஏமாந்து விடவில்லை. தன்னுடைய அழுகையின் சுருதியைக் கொஞ்சம் அதிகமாக்கிக் கொண்டது; அவ்வளவுதான்!

இந்தச் சமயத்தில் 'அன்ன நடை' நடந்து மங்களம் இருக்குமிடத்திற்கு வந்த சரஸா, அருவி வேகத்தில் கலகலவென்று சிரித்தாள். மங்களம் அவளை எரிச்சலுடன் பார்த்தாள்.

"ஏண்டி சரஸா, சிரிக்கிறே?"

"பின்னே என்ன மன்னி! குழந்தை எதற்காக அழறது தெரியுமோ? நீ எந்த ரேடியோப் பாட்டைக் கேட்டா அது அழறதுன்னு நெனச்சியோ, அந்த பாட்டாலே தான் அழறது!"

"நல்ல காரணம் கண்டு பிடிச்சுட்டா! தூங்கற குழந்தைக்குப் பாட்டு அவசியம் என்கிறது ஒரு குமரிப் பெண்ணுக்கு எப்படித் தெரியப்போறது?"

"ரொம்ப சரி மன்னி. நீ சொல்றது! ஆனாலும் ஒரு குழந்தை பெத்தவளுக்குத் தெரியாத உண்மை ஒரு குமரிப் பெண்ணுக்குத்தான் தெரிஞ்சிருக்கு. அதை நிரூபிக்கிறேன், பாரு!" என்று கூறிக் கொண்டே, பாடிக் கொண்டிருந்த ரேடியோவைச் சரஸா நிறுத்தினாள். என்ன மந்திரமோ தெரியவில்லை; குழந்தை அழுகையை நிறுத்திக் கொண்டது.

சரஸா அவ்வளவோடு விட்டு விடுவாளா? பூரிப்படைந்த தோள்கள் மேலும் கீழும் விம்மி இசைக்க, "பாரு, மன்னி! ஒரு குமரிப் பெண்ணோட மந்திரத்தை? ஏன், இப்போ குழந்தையை அழச் சொல்லேன் பார்ப்போம்? இப்போதாவது இந்த சரஸாவின் சாமர்த்தியத்தை நீ ஒப்புக் கொள்கிறாயா, இல்லையா?" என்று கேட்டாள்.

மங்களமும் விட்டுக் கொடுப்பவளாயில்லை. "போடி! குழந்தைக்கு என்ன தெரியும்? என்னவோ அழுதது, என்னவோ நிறுத்தினது!" என்றாள்.

"ஓ! அதையும் பார்த்து விடலாம்!" என்று சொல்லியவாறு ரேடியோவைத் திருப்பினாள் சரஸா. பாகவதர் பாடினார்; குழந்தை மீண்டும் அழ ஆரம்பித்தது!

"பாரு மன்னி, நன்னாப் பாரு! குழந்தையைப் பெத்தவ கெட்டிக்காரியா? குமரிப் பொண்ணு கெட்டிக்காரியா?" என்று சரஸா கேட்டாள்.

மங்களம் ஏன் பதில் சொல்கிறாள்? அதை அப்படியே ஒப்புக் கொள்கிறவளைப்போல ரேடியோவை மூடினாள். குழந்தையும் அழவில்லை.

இந்தச் சமயத்தில் உள்ளிருந்து ஒரு சிம்ம கர்ஜனை கேட்டது. மங்களம் அப்படியே திடுக்கிட்டு விட்டாள். சரஸா மட்டும் கொம்பேறி மூக்கனைப்போல் நின்று கொண்டிருந்தாள். மறுபடியும் அதே கர்ஜனை!

"யார் ரேடியோவை மூடினது?"

அந்தக் கேள்விக்கு இம்முறையும் பதில் வராமற் போகவே, சிம்மம் ஆத்திரத்துடன் வந்து கொண்டிருந்தது. அந்தச் சிம்மம் சரஸாவின் அருமை அண்ணாவாக

வும், மங்களத்தின் கோபமே உருவான கணவனாகவுமிருந்த நரசிம்மமேதான்!

மங்களம் வாய் மூடி மௌனியாகி நின்று கொண்டிருந்தாள்.

"என்னடி பேசாமடந்தை? நான் மரமாட்டமா நின்னுண்டு பேயாட்டமாக் கத்தறேன்; நீ என்னடான்னு குனிஞ்ச தலை நிமிராமே குந்தாணிக் கட்டை மாதிரி நிக்கறயே!" என்று அந்த ஹால் அதிரக் கத்தினான் நரசிம்மன்.

பூனையைக் கண்டு எலி நடுங்குவதைப் போல, "ஒண்ணுமில்லேன்னா! ரேடியோவை வச்சா குழந்தை அழறது; அதனாலேதான் மூடி வச்சேன்!" என்று பதிலளித்தாள் மங்களம்.

"உன்னுடைய அருமைக் குழந்தை ரேடியோப் பாட்டைக் கேட்டு அழலை; கடுகடுவே நீ பேசறியேன்னு, அதைக் கேட்டு அழறது. கொஞ்ச நேரமாவது நிம்மதியா ரேடியோக் கேக்கலாம்னு ஒரே உபத்திரவமா யிருக்கு!" என்று அலுத்துக் கொண்டான் நரசிம்மன்.

அதுவரை பொறுமையோடு பார்த்துக் கொண்டிருந்த சரஸா, "அண்ணா! மன்னியை ஏன் அனாவசியமாக் கோவிச்சுக்கறே? அவள் சொல்றது அத்தனையும் நெஜம்!" என்று கூறினாள்.

"என்னடி அத்தனையும் நெஜம்? நீர்க் காக்கை மாதிரி என்னடி சம்பந்தமில்லாமல் நீ தலை நீட்டறே? போடி உள்ளே!" என்று உச்சஸ்தாயியில் கோப நிரவல் செய்தான் நரசிம்மன்.

"உன்னோடே அதிகாரம், ஆர்ப்பாட்டம், உருட்டல், மிரட்டல் — இதெல்லாம் அசட்டு மன்னியோடேயே இருக்கட்டும். நீ யாரு என்னை உள்ளே போகச் சொல்வதற்கு......?"

"யாரா? உன் அண்ணாதான்!"

"கோபத்திலே நானும் உனக்குத் தங்கைதான்னு நெனைச்சுக்கோ! குழந்தை பெத்துட்டாலும், குழந்தை! அப்படி ரேடியோவைக் கேக்கணும்னு நெனைக்கிறவள் ஏன் குழந்தையைப் பெறணும்?"

"அதை உன் 'அசட்டு மன்னி'யிடமே சொல்லு!" என்று எரிச்சலுடன் கூறி விட்டு, "மங்களம்! உன்னுடைய 'கண்ணு' அழுதா, நிறுத்தறதுக்கு எங்காவது எடுத்துண்டு போ! அதுக்காக நான் பாட்டை இழந்துட முடியாது" என்று கண்டிப்பாகச் சொன்னான்.

சொன்னதை அப்படியே அமுலாக்கும் தோரணையில் அவன் மீண்டும் ரேடியோவைத் திருப்பி வைத்து விட்டுப் போய் விட்டான். உடனே நடந்த அதிசயம் என்னவென்றால், குழந்தை மறுபடியும் அழ ஆரம்பித்ததுதான்!


மங்களத்துக்கு ஒரே அவஸ்தை! புருஷனோ உத்தரவு போட்டுவிட்டான். இனி ரேடியோவை மூட முடியாது. மூடாவிட்டாலோ குழந்தையின் அழுகையை நிறுத்த முடியாது. என்ன செய்வாள்? கொஞ்ச நேரம் திண்டாடிய பிறகு, குழந்தையை எடுத்துக்கொண்டு மாடிக்குப் போனாள், அம்புலியைப் பிடித்துக் கொடுக்க. அவளைத் தொடர்ந்து சென்றாள் சரஸா.

★

மூங்கில் இலைமேலே தூங்கும் பனி நீரைப் போல, மங்களத்தின் கண்களோரத்தில் முத்துக் கட்டி யிருந்த நீரை எப்படியோ பார்த்துவிட்டாள் சரஸா. உடனே அவள் பொத்துக்கொண்டு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, "வேஷ்டி கட்டிய ஆண்களை நம்பினால்......" என்று பாடி ஆலாபனம் செய்ய ஆரம்பித்தாள்.

அதைக் கேட்ட மங்களம், தன்னுடைய பலவீனத்தை மறைப்பதற்காகக் கண்களைத் துடைத்து விட்டுக்கொண்டு சரஸாவைச் சாவதானமாகப் பார்த்தாள்.

"மன்னி! உன்னுடைய இளக்காரத்தைக் கண்டுதான் அண்ணா ஏறமேடறான்.



ஒரு சின்ன விஷயம்: 'ரேடியோவை மூடினா குழந்தை அழுகையை நிறுத்து'னு நீ மூடினே; அண்ணாவோ, 'ரேடியோவை மூடினா பாட்டு வீணாய்ப் போயிடும்'னு கத்தறான். இதுக்குக் காரணம் என்ன தெரியுமா? அவன் ஆணாம், நீ பெண்ணாம்! அவன் கணவனாம், நீ மனைவியாம்! அவன் அதிகாரம் செய்யப் பிறந்தவன்; நீ அடங்கி வாழப் பிறந்தவள்! அவன் சீறி விழுந்தாலும், விழுந்து கடிச்சாலும் நீ வாயைத் திறக்கப்படாது. ஏன், நீ ஒரு கணவனில்லே, கேவலம் ஒரு பஞ்சை மனைவி! பாரு, மன்னி! சமூகத்திலே என்ன நீதி, என்ன ஒழுங்கு?'' என்றாள் சரஸா.

அவள் வார்த்தைகளிலே பாம்பு படமெடுத்தாடிற்று; மழை சீறிக் கொட்டிற்று; புயல் வாரி அடித்தது.

மங்களம் சிரித்தாள்!

"ஏன் மன்னி சிரிக்கிறே?''

"சரஸா! நீ ஒண்ணும் தெரியாதவ. இள ரத்தம். அதனாலேதான் ஆத்திரமாப் பேசறே! நாமெல்லாம் அவர்களுடைய கைப்பாவை மாதிரி. அவா ஆட்டத்தான் செய்வா. அதுக்காக நாம் ஆத்திரப்படப் படாது. பெரியவாளே



நம்ம தலையிலே 'பாவையர்'னுதானே எழுதி வச்சிருக்கா? அதுமாத்திரமில்லே, நீ இவ்வளவு பெரிசாக்குகிற இந்தச் சம்பவம் எனக்கு ஒரு மின்னல் மாதிரி! நான் இன்னும் எவ்வளவோ சிரமங்களையெல்லாம் சமாளிச்சாகணும்......''

"நிறுத்து, மன்னி! உன் மாதிரிக் கோழைகளாலேதான் நம்ம பெண் இனமே அடிமையாகிவிட்டது. வாழ்க்கையிலே அண்ணாவுக்கு எவ்வளவு உரிமை இருக்கோ, அவ்வளவு உரிமை உனக்கும் இருக்கு; எனக்கும் இருக்கு!''

"நீ சொல்றது தவறு. 'ரெண்டு பேருக்கும் சம உரிமை இருக்கு'ன்னு எந்தப் புஸ்தகத்திலே படிச்சே?''

"ஏன்......?''

"ஆமாம், சரஸா! உன் அண்ணாவுக்கு என் மேலே கோபம் வந்தா, என்னை என் பிறந்தகத்துக்கு அனுப்ப அவருக்கு உரிமை இருக்கு; ஆனா உன் அண்ணா மேலே எனக்குக் கோபம் வந்தா, அவரை நான் எந்தாத்துக்கு அனுப்பறது? மாமனார் ஆத்துக்கா?''

"சபாஷ்! நீயும் என் கட்சிக்கே வந்துட்டே! அதனாலேதான் சொல்றேன்: ஒவ்வொரு ஆணையும் ஒவ்வொரு பெண்ணும் அணு அணுவாச் சித்திரவதை பண்ணணும்!''

"அது எப்படியம்மா?''

"ஒவ்வொரு பெண்ணும் அவசியமாக் கல்யாணம் பண்ணிக்கத்தான் வேணும். எதுக்கு? வாழ்க்கை நடத்தறதுக்கில்லே; ஜோரா பீச்சுக்குக் காற்று வாங்கப் போறதுக்கில்லே; பழி வாங்குகிறதுக்காக! அவன் சிரிச்சா இவ அழணும்; அழுதா சிரிக்கணும். அவன் 'சாதம் போடு'ன்னா குழம்பு வார்க்கணும். 'மெத்தையைப் போடு'ன்னா டான்ஸ் பண்ணணும். 'பாட்டுப் பாடு'ன்னா கிரல் விழுந்த கிராமபோன் ரிக்கார்டை எடுத்து வைக்கணும்......!''

"இனிமே கிரல் விழுந்த கிராமபோன் ரிக்கார்டுகளுக்கெல்லாம் ஒரே கிராக்கியாயிருக்கப் போறதுன்னு சொல்லு!''

"விளையாட்டு இல்லே, மன்னி! நிஜமாகத்தான் சொல்றேன்! அப்படிச் செஞ்சாத்தான் இந்த ஆண்பிள்ளைகளைப் பழிக்குப் பழி வாங்க முடியும்.''

"நானும் நிஜமாத்தான் சொல்றேன்: இப்படியெல்லாம் செஞ்சா, பழி வாங்கிறதா நெனைச்சுக் காரியம் பண்ற பெண்தான் பலியாகிறா!''

"மங்களம்மா! ரொம்ப சரி! அது எப்படின்னு கொஞ்சம் சொல்லுங்களேன்!'' என்றாள் சரஸா பரிகாசத்துடன்.

தற்பெருமை இல்லை !



மானேஜர்:—இந்த ஆபீசில் வேலை செய்யும் ஐந்து பேர்களிலும் யார் யோக்கியன் சொல்லுங்கள் !

குமாஸ்தா :— உம்.......ம்......நான் தானுங்க !

மானேஜர்:—இப்படி நீர் தற்பெருமை அடித்துக்கொள்ளலாமா ?

குமாஸ்தா :—வேறு என்ன சொல்வது? மீச்சப் பேரெல்லாம் வேலையை ராஜிநாமாப் பண்ணிவிட்டு இப்பொழுதுதான் போகிறார்கள் !

"ஆமாண்டி! அவன் அந்தப் பழிகார மனைவியை விட்டுட்டு, இன்னொருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு விடுவான். அதனாலே வாழாவெட்டியாறது ஆணல்ல ; பெண்தான் !"

"ஏன், எல்லாப் பெண்களும் நான் சொல்றமாதிரி இருந்துட்டா ஆண்கள் தான் வாழாவெட்டியாகணும். அப்படியெல்லாம் செஞ்சா எத்தனையோ கண்ணகிகளோடே கண்ணீரைத் தொடச்ச மாதிரி இருக்கும்."

"நீ சொல்றது ஒரு காலத்திலேயும் நடக்கப் போறதில்லே. அப்படி நடந்திருந்தா ஒரு ராமாயணம், ஒரு மகாபாரதம் வந்திருக்க நியாயமே இல்லே."

"மன்னி! நீ இன்னும் நல்லதங்கா காலத்திலேயே நின்னுண்டிருக்கே. கொஞ்சம் அப்படியே முன்னேறி வந்து ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தி ஒன்பதிலே நின்னு பாரு! எங்கே பார்த்தாலும் பெண் மயம்......"

"ஆமாமாம்! பஸ் கண்டக்டராக்கூடப் பெண் வந்தாச்சு. இன்னும் வேறே என்ன முன்னேற்றம் வேணும்?"

"அப்படி இல்லே! அந்த முன்னேற்றம்தான் எதிர்காலத்திலே ஒரு மகோன்னத சக்தியை உருவாக்கப் போறது!"

"அதாவது எல்லாரையும் 'ருப்ளிக் கேட்' அல்லிகளாகவா!"

"அல்லி! அவ பேரைச் சொல்லாதே, மன்னி! 'ஆண் வாடையே ஆகாது'ன்னவ அர்ஜுனனைப் பயலைக் கட்டிண்டா! அப்புறம் பவளத் தேர் கேட்கறதுக்கு ஒரு பயலையும் பெத்தா! அவளா சங்கல்பவாதி! நாங்களெல்லாம் அல்லிக்கும் அல்லியா யிருப்போம். அது மாத்திர மில்லே, அதுதான் என் அசைக்க முடியாத சங்கல்பம்!"

"என்னமோம்மா, நீ அறியாத குழந்தை. எனக்கு அவ்வளவுதான் தெரியும்!" என்று சொன்ன மங்களத்தின் வார்த்தைகளிலே அநுபவத்தின் உரம் ஏறி இருந்தது.

அதே நேரத்தில் மாடிப் படிகளில் யாரோ நடந்து வரும் அரவம் கேட்டது. இருவரும் படிக்கட்டுப் பக்கம் பார்வையைச் செலுத்தினர். சரஸாவின் அம்மா, இந்தத் தள்ளாத வயதிலும்கூட இரண்டு படிக்கொரு கால் விதம் வைத்து மேலே வந்து கொண்டிருந்தாள். வந்ததும் வராததுமாக, "மங்களம், கேட்டியா சங்கதியை! நம்ம சரஸாவுக்கு ஆத்தூரிலே யிருந்து ஒரு நல்ல வரன் குதிர்ந்திருக்கு!" என்று சொல்லும் போது சுருக்கங்கள் விழுந்த அவள் முகத்திலே அசாதாரணமான ஒரு பிரகாசம் நிலைத்து நின்றது.

★

சரஸாவின் வீட்டாருக்கு ஆத்தூர் வரன் கோபாலன் எல்லா விஷயங்களிலும் பிடித்திருந்தான். ஆனால், சரஸா மாத்திரம் தன்னுடைய வெறுப்பையோ, வெறுப்பையோ சிறிதும் காட்டிக் கொள்ளாமல் 'கடமையைச் செய்யத் தயார்' என்று சொல்லும் பாவனையில் பட்டும் படாமலும் இருந்தாள்.

மங்களகரமான ஒரு நன்னாளில், மேள வாத்தியங்கள் முழங்க, தேவாதி தேவர்களெல்லாம் மானசீகமாய் ஆசீர்வதிக்க, பெரியோர்கள் பூமழை பொழிய, வாண்டுகள் உற்சாகமாய்த் தென்னோலை வாத்தியங்களை இசைக்க, சௌபாக்கியவதி சரஸா தேவிக்கு, சிரஞ்சீவி கோபாலன் மணமாலை சூட்டி மகிழ்ந்தான்.

இந்தக் கோலாகலக் காட்சிகளை அபூர்வமாக ரஸித்துக் கொண்டிருந்த மங்களம், குழந்தைகளின் தீர்க்காயுசுக்காக இறைவனை வேண்டிவிட்டுத் தம்பதிகளைக் கவனித்தாள். கடைக்கண் பார்த்துக் கருணை பாலிக்க வேண்டுமென்று மன்றாடுபவனைப்போல, சரஸாவை அடிக்கடி பார்த்து முறுவலித்துக் கொண்டிருந்தான் கோபாலன். தேவியாரின் முகமென்னவோ மலர்ச்சியாயில்லை. அதைக் கண்ட மங்களம் ஒரு கணம் திடுக்கிட்டாள். "எங்கே, இந்தப் பெண் சொன்னமாதிரி அசட்டுப் பிசட்டென்று நடந்து கொள்ளப் போகிறதோ?" என்று கவலை கொண்டாள்.

பெண் சாப்பிடுவதற்கு அழைப்பு வந்தது. சரஸா சுற்றுமுற்றும் பார்த்தாள். மங்களம் மட்டும்தான் அருகில் இருந்தாள்

அவளுக்குத் தைரியம் வந்துவிட்டது!

"மன்னி! 'அவர்' சாப்பிட்டாச்சோ?"

மங்களம் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, "அப்பாவைக் கேக்கறியா? அவர் சாப்பிட்டார்!" என்றாள்.

"இல்லே, மன்னி! அப்பாவைக் கேட்கவில்லே; 'அவ'ரைக் கேட்கிறேன்!"

"அது யாரடி அவர்?"

"எல்லாம் 'அவர்'தான்!"

"அப்படீன்னா?"

"நெஜமாக் கேக்கறேன்; 'அவர்' சாப்பிட்டாச்சோ?"

மங்களம் பிடித்துக் கொண்டாள். "நேற்றுவரை இல்லாத 'அவர்' இப்போ எங்கேடி வந்தார்? 'அவர்' சாப்பிட்டா உனக்கென்ன? சாப்பிடாவிட்டா உனக்கென்ன?" என்று கேட்டாள்.

சரஸா வாயைத் திறக்கவில்லை.

"உன்னோடே பழி வாங்கும் எண்ணம் சங்கல்பம் எல்லாம் 'அவர்' சாப்பிட்டாச்சோன்னு கேட்கச் சொல்றதா?"


சரஸா அதற்கும் பதில் சொல்லவில்லை; காலினால் தரையில் கோலம் போட்டாள்!

"அடி, அசட்டுப் பெண்ணே! இதுதான் 'பெண் மனம்' என்கிறது. அதை நீ வென்னுடலாம்னு நெனைச்சே; அப்படியே நடந்தும் வந்தே. அப்போ எல்லாம் அந்த மனமே இல்லேன்னு வேறே நெனைச்சே. இப்போ கண்கூடாப் பார்த்தா 'பெண் மனம்' எங்கேயும் போயிடலே, அது ஒவ்வொரு பெண்ணிடத்திலேயும் அடங்கியிருக்கு, ஒரு சந்தர்ப்பம் வந்து அது விழிச்சுண்டா, சங்கல்பம், லக்ஷியம் எல்லாம் கருகிப் போகிறது! அந்தக் காட்சியைக் காணறப்போ எனக்கு என்ன ஆனந்தமாக இருக்கிறது தெரியுமா?" என்று சொல்லும்போது மங்களத்தின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சுரந்தது.

இப்பொழுது சரஸா சேலைத் தலைப்பைச் சுருட்டிச் சுற்றி அப்படியும் இப்படியுமாக வீசிக்கொண்டிருந்தாள்

"ஸ்ரீமதி கோபாலன்! நெஜமாச் சொல்றேன்; இனிமே நீ எத்தனையோ கண்ணைக் கொண்டே கண்ணீரைத் துடைச்சாகணுமோல்லியோ? வயிறு நெறையச் சாப்பிட்டாத்தான் கண்ணீரை அழுத்தித் தொடைக்க முடியும். அது மாத்திரமில்லேடியம்மா! 'அவர்' கூடச் சாப்பிட்டாச்சாம்! எச்சில் இலை உன்னை எதிர்பார்த்திண்டிருக்காம்!" என்று வேடிக்கையாகக் கூறிய மங்களத்தைப் பார்த்து, "வெறுமே இரேன், மன்னி! யாரு காதிலேயாவது உன் அசட்டுப் பேச்சு விழுந்துடப் போறது!" என்று சொல்லும்போது, சரஸாவின் முகம் குங்குமம் போலச் சிவந்தது.

பரோபகாரம்!



"நம்ப சாரங்கனுக்கு ஒரு நூறு ரூபாய் கைம்மாத்துக் கொடுத்து உபகாரம் செய்யுங்களேன்!.........

..........பாவம்! அவன் கடன் தொல்லை பொறுக்க முடியாமல் தவியாய்த் தவிக்கிறான். கொஞ்சம் மனம் வையுங்கள்!"

"அவன் யாருக்குக் கடன் கொடுக்க வேண்டும்?"

"வேறு யாருக்குமில்லை; எனக்குத்தான்!"

படித்துப் பார்!

The Principal Saranathan Memorial Volume

"கல்விக்காகவே தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்த தமிழ் நாட்டுத் தியாகி யார்?" என்று கேட்டால், அதற்கு ஒரே பதில்தான் இருக்க முடியும். "காலஞ்சென்ற பேராசிரியர் சாரநாதன்" என்பது தான் அந்தப் பதில்.

அறிஞர் ஸ்ரீ சாரநாதன் வேறு சில கலாசாலைகளில் ஆசிரியர் பணி ஆற்றிய பிறகு திருச்சி தேசியக் கல்லூரியைச் சேர்ந்தார். அது முதல் திருச்சி தேசியக் கல்லூரியை வளர்ப்பதையே தம்முடைய லட்சியமாகக் கொண்டார்; அந்த இலட்சியத்தில் வெற்றியும் அடைந்தார். இருபத்தைந்து வருஷத்துக்கு மேலாகத் திருச்சி தேசியக் கல்லூரியில் அருந்தொண்டாற்றி விட்டு, அந்தக் கல்லூரியை இந்த மாகாணத்தில் உள்ள மிகச் சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக ஆக்கி விட்டு, சென்ற 1947-ம் வருஷம்தான் ஓய்வு பெற்றுக் கொண்டார். உழைத்து உழைத்து ஓய்ந்து போன அந்தப் பேரறிஞருக்கு இந்த உலகத்தில் சரியான ஓய்வு கிடைக்காது என்று தானோ என்னவோ, சென்ற வருஷம் மே மாதம் ஆண்டவன் அவரைத் தம்மருகே அழைத்துக் கொண்டார். பெங்களூருக்குச் சென்றவர் எதிர்பாராத விதமாகத் திடீரென்று காலமானார்.

காலஞ்சென்ற அறிஞர் சாரநாதனின் தொண்டையும் மேதையையும் பாராட்டி மேற்படி தேசியக் கல்லூரி ஸ்தாபனத்தார், அவருடைய ஞாபகார்த்தமாக ஒரு மலரை வெளியிட்டிருக்கிறார்கள். இதில் பேராசிரியர் ஸ்ரீ சாரநாதனைப் பற்றி அவருடைய நண்பர்களும் மற்றப் பெரியார்களும் எழுதிய பாராட்டுக் கட்டுரைகள் ஒரு பகுதியாகவும், அவர் புனைந்த கவிதைகளையும் எழுதிய கட்டுரைகளையும் மற்றொரு பகுதியாகவும் வெளியிட்டிருக்கிறார்கள். ஸ்ரீ சாரநாதனுடைய எழுத்தை வாசிக்கும்போது அவர் மீது நமக்குள்ள மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கின்றன. அவருடைய சிந்தனையின் ஆழத்தையும் கருத்துச் செறிவையும் கண்டு பிரமிக்கிறோம். இத்தனை அருமையான கட்டுரைகளையும் கவிதைகளையும் வெளியுலகத்துக்குக் கொண்டு வந்த திருச்சி தேசியக் கல்லூரி ஸ்தாபனத்தாரைப் பாராட்டுகிறோம். பேராசிரியர் சாரநாதனுக்கு இதை விடச் சிறந்த ஞாபகார்த்தம் எதையும் அவர்கள் செய்திருக்க முடியாது.

1. Gautama the Buddha
2. Great Indians

"வேதம் என்றால் என்ன?" "உபநிஷத்து என்றால் என்ன?" "ஹிந்து மதம் என்றால் என்ன?" என்று யாராவது கேட்டால் பேராசிரியர் ராதாகிருஷ்ணன் அவர்களைச் சுட்டிக் காட்டி "இதோ இருக்கிறது வேதம்; இதோ இருக்கிறது உபநிஷத்து; இதோ இருக்கிறது ஹிந்து மதம்" என்று நாம் சொல்லிவிட முடியும்.

ஹிந்து மதத்துக்கும் ஹிந்தப் பண்பாட்டுக்கும் பிரதிபிம்பமாகவும் உதாரணமாகவும் ஸர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் விளங்குகிறார். மேல் நாட்டுக்கு ஹிந்து மதத்தைப் பற்றி நன்றாக எடுத்துச் சொல்லி, ஹிந்து மதத்தின்மீது மதிப்பும் வியப்பும் உண்டாகும்படி பல வருஷ காலமாகத் தொண்டாற்றி வருபவர் ஸ்ரீ ராதாகிருஷ்ணன். அவருடைய மேற்கண்ட இரு நூல்களையும் பம்பாயில் உள்ள Hind Kitabs என்னும் பிரபல புத்தகக் கம்பெனியார் வெளியிட்டிருக்கிறார்கள். பகவான் புத்தருடைய வாழ்க்கையையும் பௌத்த மதத்தின் சிறப்பையும் தெளிவாக விளக்குகிறது முதல் புத்தகம். இரண்டாவது புத்தகம் மகாத்மாஜி, ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ரமண பகவான், கவியரசர் டாகூர் ஆகியோருடைய வாழ்க்கையையும் அவர்கள் உலகத்துக்குப் போதித்துள்ள தத்துவங்களையும் விளக்குகிறது. இரண்டும் சிறந்த புத்தகங்கள்.

ஆசிரியர் ராதாகிருஷ்ணன் இந்திய சுதந்திர சர்க்காரின் தூதராக மாஸ்கோவுக்குப் போகிறார் என்ற செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்தோம். ஸர் ராதாகிருஷ்ணன் இந்தியாவை விட்டுச் சென்றாலும் அவருடைய சிறந்த நூல்கள் பல இங்கேயே இருக்கின்றன என்பதை எண்ணி ஆறுதல் அடைவோமாக.

விலாசம்:—Hind Kitabs Limited, Bombay. முதல் புத்தகம் விலை ரூ. 1; இரண்டாவது புத்தகம் விலை ரூ. 2.

மறைந்த மாயம்

விஜயம்

இரவு மணி பன்னிரண்டு அடித்தது. ஊர் முழுவதும் அயர்ந்து தூங்கியது. அந்தத் தெருவிலிருந்த பெரிய பெரிய மாடி வீடுகளெல்லாம் மௌனமாக நித்திரையில் ஆழ்ந்திருந்தன. நீண்டு அடர்ந்து வளர்ந்திருந்த பெரிய பெரிய மரங்களெல்லாம் சாலை ஓரத்தில் தூங்கி வழிந்துகொண்டிருந்தன.

அந்தப் பாதி ராத்திரியில் விழித்துக் கொண்டிருந்தவன் மாரிமுத்து ஒருவன் தான் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். அவனுக்கு எப்படித் தூக்கம் வரும்? அவன் தொழிலே பாதி ராத்திரிக்கு மேலேதானே ஆரம்பமாகிறது? அந்தச் சமயத்தில் அவன் தூங்கி வழிந்தால் அவனுடைய தொழில் எப்படி நடக்கும்?


மாரிமுத்து அன்றுதான் சிறைச் சாலையிலிருந்து விடுதலை பெற்று வெளியே வந்தான். உடனே அவன் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கியது. அந்தத் தெருவில் நுழைந்ததும் வேகமாக நடந்து ஒரு பெரிய பங்களாவின் கைப்பிடிச் சுவரில் ஏறி உட்கார்ந்து நாற்புறமும் பார்த்தான். கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் அவனை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. உடனே உள்ளே குதித்தான். அடுத்த விநாடி, பங்களாவை அடுத்து நீண்டு வளர்ந்திருந்த மரத்தின்மேல் தாவி மாடித் தாழ்வாரத்துக்குப் போய் விட்டான். பழக்கப் பட்டவன்மாதிரி விடுவிடு என்று மாடி ஹாலுக்குள் நுழைந்து அங்கு இருந்த அறைக்குள் புகுந்தான். வீட்டு எஜமான் கட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். அந்த அறையில் கண்ணுக்குக் குளிர்ச்சியாக நீல வர்ண மின்சார விளக்கு ஒன்று பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது.

உள்ளே புகுந்த மாரிமுத்து அந்த வீட்டு எஜமான் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த கட்டிலுக்கு அருகில் போடப்பட்டிருந்த இரும்புப் பெட்டியைப் பார்த்தான். மெதுவாக, அடிமேல் அடி எடுத்து வைத்து அந்தப் பெட்டியை நெருங்கினான். பிறகு ரொம்பத் துணிச்சலோடு எஜமானது தலையணையின் அடியில் கையை விட்டு மெதுவாகத் துழாவிக் கொத்துச் சாவியைத் தேடி எடுத்தான்.

கையில் சாவி கிடைத்ததும் இரும்புப் பெட்டியின் சாவி எது என்று மாரிமுத்து தேடிக்கொண்டிருக்கவில்லை. அவன் கையில் இரும்புப் பெட்டியின் சாவி தானே தட்டுப் பட்டது. எஜமான் வீட்டில் உள்ள சாமான்களெல்லாம் இருபது வருஷமாக வேலை பார்த்து வந்த மாரிமுத்துவுக்குத் தெரியாமல் இருக்குமா?

அடுத்த விநாடி இரும்புப் பெட்டியைக் கொஞ்சமும் சத்தம் கேட்காமல் ரொம்ப லாகவமாகத் திறந்தான் மாரிமுத்து. இரும்புப் பெட்டியினுள் கூர்ந்து பார்த்தான். நீல மின்சார விளக்கின் ஒளியில் கட்டுக் கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பச்சை நோட்டுக் கத்தைகள் அவன் கண்களுக்கு நன்றாய்த் தெரிந்தன.


எப்படிப்பட்ட பயங்கரமான நிலைமையில் நாம் இருக்கிறோம் என்பதைக்



சமையற்காரர்:—என் உடம்பைப் பற்றிப் பயமாக இருக்கிறது. ஒரு வாரம் லீவு வேணும்.

எஜமானர்:—உமது உடம்பு நன்றாகத்தானே இருக்கிறது!

சமையற்காரர்:—தவறுதலாகப் பெட்ரோலைக் குடித்து விட்டேன். அடுப்புக்கு அருகில் போகப் பயமாக இருக்கிறது!



கொஞ்சமும் பொருட்படுத்தாமல் 'ஆ' வென்று அதிசயத்துடன் வாயைத் திறந்தான். மறு நிமிஷம் 'ஐயோ! எஜமான் விழித்துக்கொண்டு விட்டால்?' என்ற எண்ணம் தோன்றியதும் சட்டென்று எழுந்திருந்து கட்டிலுக்கு அருகில் சென்று குனிந்து எஜமானைப் பார்த்தான். நல்லவேளையாக எஜமான் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்.

பரபரவென்று மாரிமுத்து நோட்டுக் கத்தைகளில் நூறு ரூபாய்க் கட்டாகப் பார்த்து நாலைந்து கட்டுகளை எடுத்துக்கொண்டான். மாரிமுத்துவின் மனத்தில் இன்னொரு பேஷான யோசனை பளிச்சென்று தோன்றியது. உடனே அடுத்தாற்போலிருந்த எஜமானது டிரஸ் பீரோவைத் திறந்து அதிலிருந்து ஒரு வேஷ்டியும் சட்டையும் மேலுக்கு ஒரு துண்டும் எடுத்துக்கொண்டான்.

மறு கணம், வந்த வழியாகவே மாரிமுத்து மாடியிலிருந்து கீழே இறங்கித் தோட்டத்திலிருந்து விரைவாக வெளியேறினான். எஜமான் வீட்டுக் காம்பவுண்டைத் தாண்டியதும் மாரிமுத்துவின் நடை வேகமாக மாறிப் பிறகு ஓட்டமாகி விட்டது. வெகுதூரம் ஓடி ரயில்வேத் தண்டவாளத்தை அடுத்திருந்த மைதானத்தை அடைந்தான். அங்கே அமைதியுடன் உட்கார்ந்து சற்று சாவகாசமாக யோசித்தான்.

இருபது வருஷம் அவன் வேலை செய்த எஜமான் வீட்டிலேயே இந்தக் காரியம் செய்யத் துணிந்தது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. முன்பு, அதாவது ஐந்து வருஷங்களுக்கு முன்பு, மாரிமுத்து எஜமான் வீட்டில் ஒரு தங்கச் சங்கிலியைத் திருடிவிட்டான். அதற்காக ஐந்து வருஷம் சிறையில் இருந்த பிறகு முந்தா நாள் அவன் விடுதலை அடைந்தான்.

இதையெல்லாம் நினைக்க மாரிமுத்துவுக்கு அவகாசம் இருக்கவில்லை. தான் எஜமான் வீட்டிலிருந்து எடுத்து வந்த சலவை செய்த வேஷ்டியையும் ஷர்ட்டையும் அணிந்துகொண்டான். பிறகு, மடியிலிருந்து வத்திப் பெட்டியை எடுத்துத் தன் பழைய வேஷ்டிக்கும் சட்டைக்கும் தீ வைத்தான். ஜலத்தைக் கண்டு வெகு நாளாகி, அழுக்கேறியிருந்த அவன் உடைகளில் குப்பென்று தீ பிடித்துக்கொண்டது. அந்த வெளிச்சத்தையே துணையாகக் கொண்டு மாரிமுத்து ரயில் தண்டவாளத்தோடு நடையைக் கட்டினான். பொழுது விடிவதற்குள் ஆறு மைல் தூரம் நடந்து ஒரு ரயில்வே ஸ்டேஷனையடைந்தான்.

அங்கே போனதும் மாரிமுத்துவின் இருதய ஆழத்தில் கிடந்த அவனது நல்லுணர்ச்சி தலை தூக்கியது. டிக்கெட் வாங்காமல் பிரயாணம் செய்ய அவன் மனம் அப்போது சம்மதிக்கவில்லை. அதற்கு முன் எத்தனையோ முறை அவன் டிக்கெட் இல்லாமலேயே பிரயாணம் செய்திருக்கிறான். ஆனால் இப்போதுதான் அவனிடம் பணம் இருக்கிறதே!

ஆகா! எங்கே அந்தப் பணம்? மடியில்தானே பத்திரமாக வைத்துக்கொண்டிருந்தான்? காணவில்லையே! அத்தனை நோட்டுக் கத்தைகளுமா வழியில் விழுந்துவிட்டன?

மாரிமுத்துவின் வயிறு பற்றி எரிந்தது. ஆம், அவன் பழைய உடையில் தீப்பற்றி எரிந்த மாதிரி அவன் வயிறு எரிந்தது. அந்த நோட்டுக் கத்தைகள் அவனது பழைய வேஷ்டியில் முடி போட்டபடி எரிந்து சாம்பராகி விட்டன என்பதை நினைக்கும்போது மாரிமுத்துவுக்கு எரிச்சலாயில்லாமல் பின்னே எப்படியிருக்கும்?



கவலை இல்லை !

வக்கீல் (மிகவும் பெருமையாக):—எனக்கு வேலை எப்பொழுதும் அதிகமாயிருக்கும். காகிதக் கட்டுகளுக்கு நடுவில் உட்கார்ந்தபடியே ஒரு வாய் அள்ளிப் போட்டுக் கொள்ளுவேன் ; அவ்வளவுதான் !

நண்பர் :— அப்படியானால் உங்களுக்கு அரிசியைப் பற்றிக் கவலை இல்லை என்று சொல்லுங்கள் !

★

இங்கே கிடைக்குமா ?

பெரிய மனிதர்:—ஸார், இங்கே பேராசிரியர்கள் எழுதிய நல்ல புத்தகங்கள் ஏதாவது கிடைக்குமா ?

புஸ்தகக் கடைக்காரர்:—உங்களுக்கு என்ன புஸ்தகம் வேண்டும்? அரசியல் நூல்களா? நாவல்களா?

பெரிய மனிதர்:—எந்தப் புஸ்தகமாயிருந்தாலும் பரவாயில்லை. போட்டோ பிடித்துக் கொள்ளும்போது, கையில் வைத்துக் கொள்வதற்கு ஏதாவது ஒரு பெரிய புஸ்தகமாகக் கொடுங்கள் !

★

பரவாயில்லை !

கிட்டு:—அடே ராமு, முதல் கணக்கின் விடை என்னடா?

ராமு :—சரியான விடை எழுபது!

கிட்டு —அடடா ! நான் ஏழுதான் போட்டேன். ஸைபரை விட்டுவிட்டேனே !

ராமு:—பரவாயில்லை, போ! வாத்தியார் அந்த ஸைபரைப் போட்டு விடுவார் !

★

ஓகோ !

டாக்டர்:—உங்கள் ஊரில் டாக்டர் ஒருவர் கூட இல்லையே, யாருக்காவது வியாதி வந்தால் என்ன செய்வீர்கள் ?

நாட்டுப்புறத்து மனிதர்:—அதைப் பற்றி நாங்கள் கவலைப்படுவதில்லை ; நாங்கள் இயற்கையாகவே மரணமடைகிறோம் !

வேதாந்தம்

"என்ன ஸார், இப்பத்தான் ஹோட்டலுக்குள் நுழைந்தீர்கள், அதற்குள் திரும்பி விட்டீர்களே !"

"ஆமாம், ஸார் ! இந்த ஹோட்டல்காரர் ரொம்ப வேதாந்தம் பேசுகிறார் ; தாங்கவில்லை. வந்து விட்டேன் !"

"அது என்ன வேதாந்தம் ?"

"பழம் பாக்கியைக் கொடுத்து விட்டால் அவருக்கும் நல்லதாம்; எனக்கும் நல்லதாம். யார் கேட்டார்கள் இதை யெல்லாம் !"

★

உண்மை !

கைதி :—வெளியில் வேலை செய்வதைவிட சிறைச்சாலையில் வேலை செய்வது எனக்குச் சந்தோஷமா யிருக்கிறது !......


நீதிபதி:—சந்தோஷமா ! அதெப்படி இருக்க முடியும்?

கைதி :—'நீ வேலை சரியாகச் செய்வதில்லை. உன்னை வேலையை விட்டுத் தூக்கிவிடுவேன் !' என்று அங்கே யாரும் என்னைப் பயமுறுத்துவதில்லையே !

★

வேண்டுகோள்

பிரசங்கி (ஸ்திரீ சுதந்திரவாதி):— இன்று அடைந்துள்ள பாக்கியங்களுக்காக என்னுடைய மனைவிக்கு நான் பெரிதும் கடன் பட்டிருக்கிறேன்......!



மளிகைக் கடைக்காரர் (கூட்டத்திலிருந்து எழுந்து):—ஐயா, ஐயா ! உங்கள் மனைவிக்கு நீங்கள் பட்டிருக்கும் கடன் ஒருபுறமிருக்கட்டும் ; நம்ம கடைக்குக் கொடுக்க வேண்டிய கடனை மறந்து விடாதீங்க !

விரும்பிய விதமே

மணி

“காத்தாயி......!”

திரும்பிப் பார்த்தாள் காத்தாயி. அத்தான் முத்து அவளுக்கு எதிரே நின்று கொண்டிருந்தான். அவ்வளவுதான்; அவனைக் கண்டதும் விசித்து விசித்து அழ ஆரம்பித்து விட்டாள் காத்தாயி.

“என் காத்தாயி? என்ன ஆயிடுச்சு?”

“ஆட்டுக் கடாச் சண்டையை நினைச்சுக் கிட்டேன், அத்தான்......!”

“அதுக்குத்தான் இன்னும் ஒரு மாசம் இருக்குதே! காளியம்மா மனசு வைச்சா நம் எண்ணம் ஈடேறுமலா போயிடும்?”

“உன் ஆட்டுக் கடா கறுப்பனுக்குத் தான் சண்டை போட்டுப் பழக்கமில்லையே, அத்தான்! அது எப்படித்தான் சிங்காரத்தின் கடாவுக்கு ஈடு கொடுக்கப் போவுதோ, தெரியவில்லையே!” என்றாள் காத்தாயி.

முத்து ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டு விட்டு, “இந்தக் காலத்திலே பணம் காசுக்குத்தானே மதிப்பு, காத்தாயி! உங்கப்பாருக்குச் சிங்காரத்துக்குத்தான் உன்னைக் கட்டிக் கொடுக்கணும்னு எண்ணம். அவனுக்கு நிறையச் சொத்து இருக்குது. என்ன இருந்தாலும் நான் ஏழை அத்தான் தானே?” என்றான் முத்து.

“அத்தான், ஒருவேளை உன் கடா ஜெயிச்சுப்புட்டா சிங்காரம் கரம் வைச்சுகிட்டு இருந்து ஏதாச்சும் செஞ்சாலும் செஞ்சிடுவானே!” என்றாள் காத்தாயி.

அதற்குள் இருட்டி விடவே, “காத்தாயி! நீ அதற்கெல்லாம் கவலைப்பட வேண்டாம். நேரமாச்சு; வீட்டுக்குப் போ!— நேத்து என் சித்தி மகன் சொக்கு ஊரிலேருந்து வந்திருக்குது. இப்போ வீட்டிலே அது தனியா யிருக்கும்; நானும் போறேன்” என்று சொல்லி விட்டுக் கிளம்பினான் அத்தான் முத்து.

2

பூங்குடி கிராமத்தில் வேலப்பக் கவுண்டர் பெரிய பண்ணைக்காரர். அவருடைய அருமைப் புதல்விதான் காத்தாயி.

கவுண்டருக்கோ வயதாகி விட்டது. பண்ணை வேலைகளை வரப்போகும் மருமகனிடம் ஒப்படைத்து விட்டு அவர் ஓய்வு எடுத்துக் கொள்ள விரும்பினார். ஆனால் பண்ணைக்குச் செல்வதற்கும் பண்ணை ஆட்களிடம் வேலை வாங்குவதற்கும்தான் அவருக்கு நேரம் சரியாக இருந்தது. ஆகவே, காத்தாயியின் கல்யாணத்தைப் பற்றி நினைக்கக் கூட அவருக்கு நேரமில்லை.

சிங்காரத்திற்கு வேலப்பக் கவுண்டர் மாமா முறையாக வேண்டும். அவன் கவுண்டருக்குப் பண்ணை வேலைகளில் துணையாக இருந்துவந்தான். காலையில் மாட்டு வண்டியைக் கட்டிக் கொண்டு கவுண்டர் வீட்டிற்கு வந்துவிடுவான். வண்டியில் கவுண்டரை அழைத்துக் கொண்டு பண்ணைக்குச் செல்வான். பண்ணை வேலைகளை மேற்பார்வை யிடுவான். கவுண்டரின் அதிகாரத்தை விடச் சிங்காரத்தின் அதிகாரம்தான் அங்கே அதிகமாயிருக்கும்.

முத்து, கவுண்டரின் சிறிய சகோதரியின் மகன். அவன் சிறு வயதிலிருந்தே கவுண்டரின் வீட்டிற்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தான். காத்தாயி அவனிடம் தன் மனதைப் பறிகொடுத் திருந்தாள். முத்துவுக்குச் சொத்து ஒன்றும் கிடையாது. ஆனால் அவனுடைய ஜீவனத்திற்கு அவனிடமிருந்த ஆடுமாடுகளே போதுமானதாயிருந்தது.

அந்த வருஷத்திலேயே காத்தாயியின் கலியாணத்தை எப்படியாவது முடித்து விட வேண்டுமென்று இருந்தார் கவுண்டர். வேறு மருமகப்பிள்ளையைத் தேட அவருக்கு நேரமில்லாததால், முறைப்படி சிங்காரத்திற்கே தன் பெண்ணைக் கொடுத்து விடுவதென்று அவர் தீர்மானித்தார். காத்தாயிக்கு இதில் விருப்பமில்லை, தந்தையிடம் மெல்ல முத்துவைப் பற்றிச் சொன்னாள். இது கவுண்டருக்குப் பிடிக்கவில்லை. இருந்த போதிலும் தன்னுடைய ஒரே பெண்ணின் விருப்பத்திற்கு விரோதமாகப் போவதிலும் அவருக்கு விருப்பமில்லை. எனவே, என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தார்.

இந்தச் சமயத்தில்தான் அந்த ஊர் நாட்டாண்மைக்காரர் அவருக்கு ஒரு யோசனை சொன்னார். அதாவது, அடுத்து வரும் பௌர்ணமியன்று காளி கோவிலின் முன்னால் ஒரு ஆட்டுக்கடாச் சண்டைக்கு ஏற்பாடு செய்வதென்றும், அதில் சிங்காரத்தின் ஆட்டையும் முத்துவின் ஆட்டையும் சண்டைக்கு விடுவதென்றும், சண்டையில் யாருடைய ஆடு ஜெயிக்கிறதோ அவனுக்குக் காத்தாயியைக் கலியாணம் செய்து

கொடுத்து விடுவதென்றும் அவர் சொன்னார். கவுண்டரும் அவர் சொன்னதை ஆமோதித்தார்.

சிங்காரத்தினிடம் ஒரு பந்தயக் கடா இருந்தது. அதன் பெயர் வீரன். அது மிகவும் அலட்சியமாக எந்த ஆட்டையும் ஜெயித்துவிடும். இருந்தாலும் இவ்விதப் போட்டி அவனுக்குப் பிடிக்கவில்லை.

3

நாட்கள் உருண்டன. கடைசியாக அந்தப் பந்தய நாளும் வந்தது. காளி கோயிலுக்கு எதிரே கடாச் சண்டை ஆரம்பமாயிற்று. அந்த இடத்தைச் சுற்றிலும் ஒரே கூட்டம். முத்துவின் கடாவான 'கருப்பன்' சிங்காரத்தின் கடாவின் மேல் பாய்ந்தது. ஒன்றையொன்று முட்டித் தள்ளின. சிங்காரத்தின் கடா வெற்றிகரமாகப் பின் வாங்கிக்கொண்டே இருந்தது. கருப்பனோ வெற்றிக்கு மேல் வெற்றி பெற்று வந்தது.

"என்ன அண்ணே, சிங்காரம் இன்னிக்கு 'வீர'னைச் சண்டைக்கு விடவில்லை போலிருக்குதே! இந்தக் கடா புதுசால்லே இருக்குது!" என்று ஆரம்பித்தான் கூட்டத்திலிருந்த ஒருவன்.

"ஆமாம், வீரனுக்குக் காலிலே ஏதோ காயம் பட்டிருக்குதாம்!" என்றான் இன்னொருவன்.

இம்மாதிரி பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். சண்டை ஆரம்பித்துப் பதினைந்து நிமிஷங்கள்தான் ஆகியிருக்கும். சிங்காரத்தின் புதுக் கடாவை ஜெயிக்க கருப்பனுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. கடைசியாக அதன் மீது பாய்ந்து அதைக் கீழே தள்ளிவிட்டது கருப்பன். அவ்வளவுதான்; கைதட்டலும் கரகோஷமும் வானைப் பிளந்தன. முத்து தன் கடாவைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்தான். சிங்காரம் அந்தக் கூட்டத்திலிருந்து எப்படியோ மெதுவாக நழுவி விட்டான்.

• • •

கவுண்டர் வெகு சீக்கிரத்திலேயே கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்



செய்தார். பெரிய பண்ணை வீட்டுக் கலியாண மென்றால் கேட்க வேண்டுமா? பூங்குடி கிராமமே இரண்டு பட்டது. காத்தாயி சந்தோஷத்தோடு கலியாண தினத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

கலியாண தினமும் வந்தது. விடியற் காலையில் வழக்கம்போல் சிங்காரம் மாட்டு வண்டியில் வந்து இறங்கினான். அவன் என்ன செய்யப் போகிறானோ என்று கவுண்டர் அஞ்சினார். சிங்காரம் எதிர்பாராத விதமாக மேல் துண்டை எடுத்து வரிந்து கட்டிக்கொண்டு கலியாணத்திற்கு வந்திருந்தவர்களைத் தடபுடலாக விசாரிக்க ஆரம்பித்து விட்டான்! கவுண்டர் ஆச்சரியத்துடன், 'இது என்ன தம்பி......!" என்று ஏதோ கேட்க ஆரம்பித்தார்.

அவரை இடைமறித்து, "காரியம்மா கட்டளைக்கு விரோதமா என்ன செய்யறது? எப்படியோ காத்தாயி நல்லா இருந்தா அதுவே போதும்" என்று வேதாந்தம் பேசினான் சிங்காரம்.

ஆனால் நடந்த விஷயம் கவுண்டருக்கு எப்படித் தெரியும்?

4


கவுண்டரின் பண்ணைக்கு இப்போது முத்துதான் எஜமானன். பொழுது விடிந்ததும் வழக்கம்போல் சிங்காரம் வண்டியைக் கட்டிக் கொண்டு வருவான். முத்துவை வண்டியில் ஏற்றிக் கொண்டு பண்ணைக்குச் செல்வான். பரம விரோதமாக இருந்த இருவரும் திடீரென்று அந்நியோன்னியமாகப் பழக ஆரம்பித்தது எல்லோரையும் விடக் காத்தாயிக்குத்தான் அதிசயமாக இருந்தது. ஒரு நாள் அவள், "அத்தான், சிங்காரம் ஏன் இப்படித் திடீரென்று மாறிப் போயிடுச்சி?" என்று கேட்டாள்.

"அது பெரிய ரகசியம், காத்தாயி! ஆட்டுக்கடாச் சண்டை நடந்தப்போ வீரனுக்குக் காது நல்லாத்தான் இருந்தச்சி. வீரனோடு கறுப்பன் சண்டை போட்டு ஜெயிக்க முடியுமா, என்ன? எங்களுக்குள்ளே செஞ்சிகிட்ட தீர்மானத்தினாலேதான் நான் ஜெயிச்சேன்!" என்றான் முத்து.

"அது என்ன தீர்மானம்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் காத்தாயி.

"காட்டாண்மைக்காரனுடைய தீர்மானத்தைக் கேட்டப்புறம் என் மனசுக்கு ஒண்ணும் பிடிக்கவில்லை. எப்படியும் சிங்காரம் ஜெயிச்சப்பிடுவான்னு எனக்குத் தெரியும். நேரே வீட்டுக்குப் போனேன். ஊரிலேருந்து என் சித்தி மகள் சொக்கி வந்திருந்திச்சி. அவளோடு ஏதோ பேசிக்கிட்டே இருந்தேன். அப்போ சிங்காரம் என் வீட்டுக்கு வந்து, 'டேய், முத்து! நீ செய்யறது நல்லா இல்லே! மரியாதையா நீ இந்த ஊரைவிட்டு ஓடிப்போயிடு!' என்று மிரட்டினான். எங்களுக்குள்ளே பேச்சு கொஞ்சம் வலுத்ததும் என் தங்கச்சி வெளியே வந்து எட்டிப் பார்த்துச்சி. சிங்காரம் அவளைப் பார்த்ததும் வாயடைத்து நின்னுட்டான். சொக்கியும் ஒண்ணும் புரியாமல் கல்லாய் நின்னுப் போச்சு. ஒரே கிஷணத்திலே சொக்கி என்னவோ சொக்குப் பொடி போட்டுச் சிங்காரத்தை மயக்கிட்டாப் போலே இருக்குது! அவன் கோபமெல்லாம் இருந்த இடம் தெரியலே. அதுக்கப்புறம் சிங்காரம் அடிக்கடி என் வீட்டுக்கு வர ஆரம்பிச்சான். 'சொக்கியை எனக்குக் கட்டிக் கொடுக்க எப்படியாவது ஏற்பாடு பண்ணிடு; காத்தாயியும் நீயும் சந்தோசமா இருங்கோ'ன்னு சொன்னான். அதனாலேதான் சிங்காரம் சண்டையிலே வீரனை விடவில்லை. இப்போ புரிஞ்சுதா, விசயம்?— இன்னும் பத்து நாளிலே சொக்கிக்கும் சிங்காரத்துக்கும் கிராமத்திலே கலியாணம் நடக்கப் போவுது!" என்று கூறி முடித்தான் முத்து.

காத்தாயி ஆச்சரியத்தினால் அசைவற்று நின்றாள். இப்படி எல்லாம் நடக்கும் என்று அவள் கண்டாளா, என்ன?



கல்கத்தா தமிழ் அன்பர் ஸ்ரீ டி. எஸ். திரௌபதி அவர்களின் சகோதரர் சிரஞ்சீவி டி. எஸ். சுப்பிரமணியனுக்கும், கல்கத்தா ஸ்ரீ என். ராமஸ்வாமி அய்யரின் புதல்வி சௌ. சாரதாவுக்கும் சென்னையில் சென்ற 30—6—'49 அன்று சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

வாழ்க சுப்பிரமணியம்—சாரதா!

திறமையே, திறமை!

"இந்தக் காலத்தில் என்ன ஸார் நாடகங்கள் போடுகிறார்கள்; சினிமாக்கள் போடுகிறார்கள்! இவையெல்லாம் ஒரு ஆட்டத்தில் — நாடகத்தில் சேர்த்தியா? அந்தக் காலத்து நாடகங்களைப் பார்த்துவிட்டு, இவற்றையெல்லாம் பார்த்தால், ஏன் இந்த பிரமன் கண்ணையும் காதையும் படைத்தான் என்று தோன்றுகிறது. அந்தக் காலத்தில் அரிச்சந்திரன் நாடகத்தில் சோக பார்ட் சோணாசலந்தான் சந்திரமதி வேஷம் போடுவார். (அதாவது போட்டுக் கொள்வார்) பையன் பாம்பு கடிச்சுச் செத்துப் போனான் என்ற செய்தி கேட்டதும் சந்திரமதி பிரலாபிப்பா பாருங்கோ, அப்படி பிரலாபிப்பா! முகாரி ராகம் சரியா மூணு மணி நேரம் பாடுவார். ஏன்? நல்லதங்காள் நாடகத்தில் ஆறு குழந்தைகளையும் கிணற்றில் தள்ளிவிட்டு ஏழாவது குழந்தையைக் கையில் ஏந்திக் கொண்டு பாட ஆரம்பித்தாரானால் இரண்டரை மணி நேரத்துக்குக் குறையாது. கொட்டகை முழுதும் சோக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி ஜனங்கள் எல்லோரும்...!" என்று ஒரு கிழவர் இன்னொரு கிழவரிடம் சொல்லிக் கொண்டு வந்தார்.

உடனே கேட்டுக்கொண்டுவந்த கிழவர் "அப்படியே தூங்கிப் போய் விடுவார்களாக்கும்" என்றார் குறும்பாக.

வாஸ்தவம்; ரொம்பப் பேர் மூன்று மணி நேரம் முகாரி ராகம் பாடி ஏழு குழந்தைகளையும் கிணற்றில் தள்ளினால் தான் சோக உணர்ச்சி ஊட்ட முடியும் என்று நினைக்கிறார்கள்.

ஒரு மேல்நாட்டு விமர்சகர் இரண்டு நாடகாசிரியர்களை ஒப்பிட்டுக் கூறும் போது பின்வருமாறு கூறினார்:—

ஒருவருக்கு மாபெரும் நகரத்தையே தீக்கிரையாக்கினால்தான் சோக ரஸத்தைப் பரிபூரணமாகக் கொண்டுவந்ததாகத் திருப்தி ஏற்படுமாம். ஆனால் அடுத்தவர் ஒரு சிறு கைக் குட்டை நழுவ விட்டதாகக் கூறி அற்புதமாகச் சோக ரஸத்தைக் கொண்டுவந்து விடுவாராம்.

ஆமாம்; வாஸ்தவம். சிறு கைக் குட்டையை நழுவ விட்டே அற்புதமான சோக ரஸத்தைக் கொண்டுவந்து விடலாந்தான். உதாரணமாக ஒரு கட்டத்தைக் கற்பனைசெய்து பார்ப்போம்.

காதலனைப் பிரிந்த ஏக்கத்தில் உள்ள ஒரு கதாநாயகி பூஞ்சோலையில் நடந்து செல்லுகிறாள். போய்க் கொண்டிருக்கும் போது, அவள் கையிலிருந்த கைக்குட்டை நழுவி விழுந்து காற்றினால் அடிக்கப் பட்டு, இரண்டு அடி தூரம் அவளுக்கு முன்னால் போய் விழுகிறது. அதைப் பார்த்த உடனேயே அவள் கண்களில் கண்ணீர் பொல பொல என்று வந்து விடுகிறது. "எத்தனை அன்பு மொழிகள், ஆசை மொழிகள் கூறி எனக்கு இந்தக் கைக் குட்டையை அன்புப் பரிசாக அளித்தார்! அந்த வார்த்தைகளின் நினைவை மட்டும் என்னிடம் இருத்திவிட்டுத் தாம் எங்கோ சென்று விட்டாரே!" என்று எண்ணித் துயருறச் செய்கிறது. அதைப் பார்க்கும் நமக்கும் அந்தச் சோகம் ஏற்படுகிறது.

ஒரு சித்திரக்கலை வல்லுனர் ஒரு சமயம் சித்திரக் கலையில் சோகரஸம் பற்றிக் கூறும்போது பின்வரும் ஒரு உதாரணம் சொன்னார்.

ஒரு சித்திரக்காரன் ஒரு பிச்சைக்காரனின் படத்தை வரைகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பிச்சைக்காரன் பார்ப்போர் மனதில் இன்னும் அதிகப் பரிதாப உணர்ச்சியை எழுப்ப வேண்டும் என்பதற்காகச் சித்திரக்காரன் அவனைக் கண்கள் குழி விழுந்தவனாகவும், தாடி வளர்ந்தவனாகவும், கன்னங்களிலும் நெற்றியிலும் சுருக்கங்கள் விழுந்திருப்பவனாகவும் இன்னும் எத்தனை விதங்களில் அந்தப் பிச்சைக்காரனைத் தீட்டினாலும் அந்தச் சித்திரக்காரன் தான் எதிர்பார்க்கும் சோக உணர்ச்சியைப் பார்ப்போரிடை எழுப்ப முடியாது. ஆனால் ஒரு சாதாரணப் பிச்சைக்காரனை வரைந்து அவனுக்குப் பின்னால் ஒரு வீட்டு வாசற்படி மட்டும் போட்டால் போதும். "ஆ! இந்தப் பிச்சைக்காரன் இவ்விதம் எத்தனை வீடுகளில் ஏறி ஏமாற்றத்துடன் திரும்பியிருக்கிறானோ! எத்தனை பேரிடம் எத்தனை விதக் கடுஞ் சொற்கள் அவன் காதுகள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனவோ........" என்று எண்ணத் தூண்டும் பார்ப்பவர்களை என்றார்.

நாடகத்தில் நடிக்காமலும், கைக் குட்டையை நழுவ விடாமலும் சித்திரம் வரையாமலும் சோக ரஸத்தை ஊட்டும் திறமை சிலருக்குக் கைவந்திருக்கிறது. ஏன்? உங்களுக்கே அந்தத் திறமை வந்திருக்கிறதே என்கிறீர்களா? சரி சொல்லி விட்டுப் போங்கள்!

—"வேந்த"

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

261 கிணற்றைக் கண்டு கடலுக்கு பயமா?

மயிந்தன் விபீஷணனைப் பார்த்து விசாரித்து விட்டு ராமனிடம் வந்து இலங்கையில் நடந்த செய்தியைச் சொன்னான். அதாவது, இலங்கையை விட்டு விபீஷணன் ஓடிப்போய் விட வேண்டியது என்று ராவணன் சொன்னதைச் சொன்னான்.

விஷயம் தெரிந்து விட்டது ராமனுக்கு. பக்கத்தில் இருந்தவர்களைப் பார்த்து அபிப்பிராயம் கேட்கிறான்.

அப்பொழு(து) இராமனும்
அருகின் அன்பரை
இப்பொருள் கேட்கநீர்
இயம்பு வீர், இவன்
கைப்புகற் பாலனோ
கழியற் பாலனோ,
ஒப்புற நோக்கிநும்
உணர்வி னால்' என்றான்.

[அப்பொழுது இராமன்: மயிந்தன் சொன்னதைக் கேட்ட ராமனும்; அருகின் அன்பரை: பக்கத்திலுள்ள நண்பரைப் பார்த்து; இப்பொருள் கேட்க நீர் இயம்புவீர்: இந்த விஷயத்தைக் கேட்டுக் கொண்டீர்கள், நீங்கள் சொல்லுங்கள்; இவன் கைப்புகற் பாலனோ: இவன் நம்மிடத்தில் அடைக்கலம் புகத் தகுந்தவன் தானோ; கழியற் பாலனோ: நம்மை விட்டுப் போய்விட வேண்டியவன் தானோ; ஒப்புற நோக்கி நும் உணர்வினால்: உங்கள் அறிவினால் நன்றாக தம்பியங்களை யோசித்து—இயம்புவீர் என்றான்.]

∴

தலைவர்கள் சுக்ரீவன் உள்பட "அரக்கன் அரக்கன் தான். அரக்கன் என்பவன் நம்மிடையே வந்துவிட்டால் ஆபத்துத்தான். நம்முடைய பலம் சிதைந்து போகும்" என்று 'விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது' என்று சொல்லிவிட்டார்கள்.

அவர்கள் அப்படியெல்லாம் சொல்லுவதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது. அரக்கர்கள் பொதுவாகவே அவ்வளவு கொடியவர்களாகத்தான் இருந்தார்கள்.

ஆனாலும் எந்த இனத்திலும் நல்ல குணமுடையவர் இருக்கக்கூடும் என்பதை உணரவேண்டும். விபீஷணனுடைய உயர்ந்த தன்மையை அறிவதற்கான பண்பாடு வானரத் தலைவர்களிடத்தில் இல்லை. அவ்வளவுதான்.

ஆனால் அனுமன் உண்மையை உணரக்கூடிய உயர்ந்த பண்பாடுடையவன். விபீஷணனை நன்றாய் அறிந்தவன். அவனைச் சாமான்ய மக்களோடு சேர்த்து எண்ணக்கூட மனம் இல்லை அனுமனுக்கு.

விபீஷணனுடைய மனப்பாங்கை அனுமன் எடுத்துச் சொல்லுகிறான்:

"அரக்கர்கள் பொதுவாக இயற்கையில் அரிய சக்தி வாய்ந்தவர்கள் தான். ஏதோ வரத்தினால் பெற்றது அந்தச் சக்தி என்று சொல்லலாம். தந்திரங்களிலும் அவர்கள் திறமைசாலிகள். அவர்கள் பிறந்தபோதே உடன் பிறந்தவை அந்தத் தந்திரங்கள் என்று சொல்லத் தோன்றும்.

"சக்தியும் தந்திரமும் எப்படி இருந்தாலும் என்ன செய்ய? உன்னுடைய அம்பினால் தொலைந்து தானே போகும். அதை யாரும் அறிந்து கொள்ளக் கூடும். யாரையும்விட விபீஷணன் தெளிவாய்த் அறிந்து கொள்ளக் கூடியவன்."

பெற்றுடைய பெருவரமும்,
பிறந்துடைய வஞ்சனையும்
பிறவும் உன் கை
வில்தொடையின் விடுகணையால்
வெந்தொழியும் எனக்கருதி
விரைவின் வந்தான்;

உற்றுடைய தனியறமும்
உகந்துடைய தண்ணளியும்
உணர்வுற்நோக் கின்,
மற்றுடையார் தாமுளரோ,—
வாளரக்கன் அன்றியே,—
தவத்தின்வாய்த் தார்.

[பெற்றுடைய பெருவரமும்: வரப்பிரசாதம் என்று சொல்லக்கூடிய சக்தி: உன் கையில்தொடையின் விடுகணையால் வெந்து ஒழியும்: உன் கையிலுள்ள வில்லிலிருந்து தொடர்ச்சியாக வரும் அம்புகளால் நிர்மூலமாகும்—(சக்தி, வஞ்சனை எல்லாம்)—உற்றுடைய தனி அறமும்: நீதிக்கு ஏதோ வேறு இடமில்லை என்று விபீஷணனை வந்து அடைந்தது என்று சொல்லக்கூடியதான நீதிப்பண்பும்: உகந்துடைய தண்ணளியும்: கருணையே தனக்கு உகந்த வஸ்து என்று எண்ணி வளர்ந்து வந்தான் விபீஷணன்: உணர்வுற் நோக்கின்: நீதி, கருணை இவைகளோடு அவனுடைய மேம்பட்ட அறிவையும் பார்த்தால்; மற்றுடையார் தாமுளரோ தவத்தின் வாய்த்தார்: தவ ஒழுக்கத்தில் இறங்கியவர்கள் மேலே சொன்ன நீதி, கருணை, அறிவு இவைகளை உடையவர் என்று சொல்ல யார் இருக்கிறார்கள்; வாளரக்கன் அன்றியே: வாளை ஏந்திய இந்த அரக்கன் இருக்கிறானே விபீஷணன் இவனை அல்லாமல் — வேறு யார் இருக்கிறார்கள்?

குறிப்பு:—விபீஷணனுடைய உயர்ந்த பண்புகளை எப்படி அனுபவிக்கிறான் அனுமன். அனுபவம் அதற்கொத்த தானங்களோடு எடுத்துச் சொல்லுகிறது. அரிய பாவம் கொண்ட செய்யுள்.]

***


"இத்தகைய அரிய குணம் படைத்தவனாய் இருப்பதால் விபீஷணனை சேர்த்துக் கொள்ளத்தான் வேண்டும். அதனால் குறைவு ஒன்றும் ஏற்படாது" என்று ராமனுக்கு உறுதி கூறுகிறான் அறிவாளியான அனுமன்.

"தேவர்கள் என்ன, தானவர்கள் என்ன, பிரம்மா முதலான மும்மூர்த்திகளே என்ன, இவர்களால் முடியாத காரியத்தை முடிக்கப் போகிறவன் அல்லவா நீ?"

'தேவர்க்கும் தானவர்க்கும்
திசை முகனே முதலாய
தேவதே வர்
மூவர்க்கும் முடிப்பரிய
காரியத்தை முற்றுவிப்பான்
மூண்டுநின் றாய்!
ஆவத்தின் வந்(து) அபயம்
என்றானை அயிர்த்தகல
விடுதியா யின்,—
கூவத்தின் சிறுபுனலைக்
கடல் அயிர்த்த(து) ஒவ்வாதோ!
கொற்றவேந் தே.'

[தானவர்: மிக்க பலசாலிகளான அசுரர்கள்: திசை முகன்: பிரம்மா: முற்றுவிப்பான் மூண்டு நின்றாய்: முடிக்கும்படி அதாவது அதர்மத்தை ஒழிக்கும்படி முனைந்து நிற்கும் நீ: ஆவத்தின் வந்து அபயம் என்றானை: பெரிய ஆபத்துக்கு உள்ளாகி உன்னிடம் வந்து அடைக்கலம் பெற வேண்டும் என்றவனை: அயிர்த்து அகல விடுதியாயின்: சந்தேகித்து வெளியே விடுவாயானால்: கூவத்தின் சிறு புனலை: கிணற்றிலுள்ள சிறிய அளவான தண்ணீரைக் கண்டு: கடல் அயிர்த்தது ஒவ்வாதோ: எங்கே இந்தத் தண்ணீர் அடித்துக் கொண்டுபோய் விடுமோ என்று கடல் பயந்த கணக்காகாதோ!]

இந்தவாறாக அழுத்தமாய்த் தன் அபிப்பிராயத்தைச் சொல்லி முடித்தான் அனுமன்.



"நேற்று உங்கள் பிரசங்கத்தைக் கேட்டேன். அடடா, என்ன பிரமாதம்!"
"என்னவோ நீங்கள்தான் என் பிரசங்கத்தைப் பிரமாதமாகப் புகழுகிறீர்கள்!"

"உம்... ஒரு பத்து ரூபாய் கொடுக்க முடியுமா?"
"ஆகா! தாராளமாகத் தருகிறேன் [illegible] இருக்கிறது. கேட்கிறீர்களா?"

"என்ன சொல்லுகிறீர்கள்? தயவு செய்து இன்னும் கொஞ்சம் உரக்கச் சொல்லுங்கள்: எனக்குக் காது அவ்வளவு நன்றாகக் கேட்காது!"

கவிதைப் போட்டி

“ ஈ.ஓ ”

ராவ்பகதூர் பொன்னம்பலம் பிள்ளைக்கு எழுத்து வாசனை இருந்தாலும் கவிதையின் நாமம் தெரியாது. ஆனால் கவிதைக்காரர்கள் பரம்பரையில் பிறந்தவர். அவருடைய தகப்பனார் கூடத் தமது கிராமத்தின் பெயரால் ஸ்தல புராணம், உலா, தூது, கலம்பகம், சிலேடை வெண்பா, நாகபந்தம் முதலியவை பாடியவர். அவருடைய முன்னோர்கள், ஊரைச் சுற்றி ஒரு பனை பாக்கி வைக்காமல், மொட்டையடித்தார்கள். ஓலையைக் கிழித்தார்கள். கவிதையினால் கிரப்பினார்கள். அவர்கள் கவிச் செல்வர்களாய் விளங்கினார்கள். ஆனால் ராவ்பகதூர் பொருட் செல்வராய் விளங்கினார். கவிதை இன்னதெனவே தெரியாது. ஏன்? ஆசிரியப்பாவுக்கும் ஜிப்பாவுக்கும்கூட வித்தியாசம் தெரியாத அப்பாவி அவர்!

அவருக்குப் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கும்போதெல்லாம் 'கவிதை வழித் தோன்றலே! கவிராயர் பெற்றெடுத்த புவி மாரா!' என்றெல்லாம் அழைத்தார்கள். இரண்டொரு நண்பர்கள் அவருடைய பரம்பரைப் பெருமை நீடூழி வாழ ஒரு பரிசு-தங்கப்பதக்கம் பந்தயம் வைக்கும்படி வேண்டினார்கள். அதற்கு எங்கள் பள்ளிக்கூடத்தை முற்றுகைப் பூமியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

எங்கள் பள்ளிக்கூடத்தில் கவிராயர் பரிசு என்பதாக விளம்பரம் செய்தார்கள். முழுப் பவுன் பதக்க ரூபத்தில் ராவ்பகதூர் உருவம் பொறித்து வழங்கப்படுமென்றார்கள். அதிலும் அது கவித்துவப் போட்டி! அதில் நாங்கள் எல்லோருமே ஒரு கை பார்க்கிறதென உத்தேசம் செய்திருந்தோம். முக்கியமாக ஐந்தாம் வகுப்பு மாணவர்களிடையே அதிகப் பரபரப்பு: பத்தாம் வகுப்பில் நாலைந்து பேரே போட்டியில் உட்காருவதற்கு முன் வந்தனர்.

தங்கப் பதக்கம் கொடுக்கப் போவதை என் தாத்தாவிடம் சொன்னேன். அவருக்கு வாயெல்லாம் பொக்கை. “டேய் பயலே, தங்கப் பதக்கத்தை அடித்துக் கொண்டு வந்து விடு. உன் மீனுவுக்குத் 'தாலி' செய்யலாம்” என்றார். மீனு எனக்கு முறைப் பெண்; கவிதை மேலுள்ள மோகத்தினால், போட்டியில் தலையிடாவிட்டாலும் மீனுவின் பேரிலுள்ள மோகத்தினால் போட்டியில் உட்காருவதற்கு ஒப்புக் கொண்டேன்.

உட்கார்ந்தால் போதுமா? கவிதையல்லவா எழுத வேண்டும்! அதுவும் யாரும் எழுத முடியாதபடி உயர்வாக எழுத வேண்டும். கவிதைக்கு வேண்டிய பொருள்கள் (கடலை மாவும், சர்க்கரையும் லட்டுக்கு வேண்டியதைப்போல) என்னென்ன என்று எனக்குத் தெரியாது. தாத்தா ஒரு பவுன் பெறும் ஆசையால் நிகண்டுகளையும் சூத்திரங்களையும் புரட்டினார்; என் மூளையில் புகுத்திவிடவும் முயன்றார். ஓசையை நான் புரிந்துகொள்ள இரண்டு வாரம் பிடித்தது. மூச்சீர் புரிய நாலுவாரம்! எதுகை எது? மோனை எது? என்று விளக்கினார் தாத்தா. அவர் இலக்கணத்தை விளக்க விளக்க என் தலைசுற்றியது. விருத்தத்துக்கும் வெண்பாவுக்கும் வேற்றுமைகளைச் சொன்னார். என் வரையில் எல்லாம் ஒன்றாகவே பட்டன.

தாத்தா மனங் குன்றாமல், எங்கள் தெருவில் குடியிருந்த தமிழ்ப் பண்டிதரிடம் என்னை அழைத்துப் போய், “பையனுக்குத் தமிழ் கற்க ஆசை; கவி கட்ட வேண்டுமென்று நினைக்கிறான். என்ன எதிர் பார்க்கிறீர்கள்?” என்றார்.

“இருபது ஆட்டைகள் பிடிக்கும்” என்றார் தமிழ்ப் பண்டிதர்.

“ஆட்டைகளா, ஆடுகளா?” என்று கேட்டார் தாத்தா.

“ஆண்டு என்பது ஆட்டையென மாறும். இதுகூடத் தெரியாதவரா தமிழ் கற்க வந்து விட்டீர்?” என்றார் பண்டிதர்.

“இன்னும் இருபது நாள் இருக்கிறது. அதற்குள் செய்யுள் இயற்றும் ரகசியத்தைச் சொல்லி வைத்தால், புண்ணியம் உண்டு” என்றார் தாத்தா.

“இருபது நாட்களில் கவிதை கற்பதா? என்னே விந்தை!” என்று இறும்பூதெய்தினார் பண்டிதர். முடிவாக என்னைப் பரிசோதனை செய்து தமது மாணாக்கனாக எடுத்துக்கொள்ள ஒப்புக் கொண்டார்.

கவிதைப் பரீட்சை நாளும் நெருங்கிற்று. என்னைப் போலவே, அன்று பரீட்சை எழு

றிய மூன்று பேர்களும் தத்தமக்கே பதக்கம் என்று நினைத்தனர். ராவ்பகதூரே விஷயத்தின் தலைப்பைக் கொடுத்திருந்தார்.

நாற்றங்கால், முன்னந்தி, பனைத்தோப்பு இம்மூன்றில் இரண்டைப் பற்றி முப்பது பாட்டுக்கள் எழுத வேண்டும்.

அல்லது, சுகாதாரம், குப்பை உரம், மேழிச்செல்வம் இம்மூன்றில் இரண்டைப் பற்றி இருபது பாடல்கள் வேண்டும்.

தாத்தா சொல்லி வைத்த எதுகைகள், வாத்தியார் சொல்லிக் கொடுத்த இலக்கண மரபுகள் ஒன்றுமே என் நினைவில் வரவில்லை. எதை எடுத்தாலும் மூன்றே எதுகைகள் தான் வரும். நாலாவது எதுகை வராது. மூன்று அடியுடன் பாட்டை நிறுத்தினால் அது மரபுக்கு விரோதம். எப்படியோ தட்டுத் தடுமாறி எழுதி, பேப்பரை மடித்துக் கொடுத்து விட்டு வந்தேன். பரிசு கிடைக்கா விட்டாலும் கவிதைப் போட்டியில் கலந்து கொண்ட பெருமையே போது மென்று மனதைத் தேற்றிக் கொண்டேன்.

• • •

போட்டிக்கு நியாயாதிபதிகள் மூவர்; ஒருவர் ஆங்கிலத்தில் கரை கண்ட பேரறிஞர்; மற்றவர் கணித சாஸ்திர வல்லுநர்; மூன்றாமவர் உள்ளூர் சகல கலா பிரமுகர். இம்மூவரும் இளம் பிள்ளைகளின் கவித்துவ சக்தியைச் சீர்தூக்கிப் பார்க்கலாயினர். இம்மூவரும் ராவ்பகதூர் கேட்டுக் கொண்டதைத் தலைமேல் தாங்கி, பரீட்சைத் தாள்களைச் சோதனை செய்தனர்.



முதன் முதலாக ஆங்கிலப் பேரறிஞர் வீட்டுக்கு மூன்று கவிதைக் கட்டுகளும் போய்ச் சேர்ந்தன. அவருக்குத் தமிழ் அறிவு அப்படி அப்படித்தான். கவிக்கு எதுகை மோனைகளே அவசியம் இல்லையென நினைப்பவர். ஆங்கில முறைப் படி வாக்கியத்தின் கடைக் கோடியில் எதுகை வர வேண்டுமென நினைக்கிறவர். அவர் எப்படித்தான் சகித்தாரோ மூன்று இளங் கவிஞர்கள எழுதிக் குவித்த ஆயிரக்கணக்கான பாக்களை. சில பேர் முப்பது பாட்டுக்குப் பதிலாக முப்பது காண்டங்களே எழுதியிருந்தனர். உண்மையில் ஆங்கிலப் பேரறிஞர் பக்கள் கவிதைகளை ஊன்றிப் படித்திருந்தால், நிச்சயமாக பிராணனை விட்டிருக்கலாம்; அல்லது புத்தி மாறாட்டம் ஏற்பட்டிருக்கலாம். இரண்டும் அவர் விஷயத்தில் நேரவில்லை. அதற்கு மாறாக ஒரு ஒற்றை மாட்டு வண்டியில் அந்தக் கவிதைக் கட்டுகளைப் போட்டு இரண்டாவது நியாயாதிபதி வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

இரண்டு மூன்று மாதங்கள் கழிந்தன. கணக்காசிரியர், வட்டங்களுக்குள்ளும் பின்னங்களுக்குள்ளும் போராடுகிறவர். அவருக்கு அறிவிக்கப் பட்டிருந்தபடி, 'ம' அல்லது 'மூ' என்று போடவேண்டும். இவருக்கோ 'தமிழ்க் கவிதை படி என்ன விலை?' எனக் கேட்கும் நிலையுண்டு. தமக்கு முன்னதாகத் திருத்தியிருந்த ஆங்கில அறிஞரைப் பின்பற்றி அவர் 'ம' என்றால் இவரும் 'ம' அவர் 'மூ' என்றால் இவரும் 'மூ' போட்டார். ஒரு மணி நேரத்தில் 'ம' வோ 'மூ' வோ போட்டு விட்டாலும் மூன்று மாதம் வைத்திருந்து பிறகு கட்டை வண்டியில் ஏற்றி மூன்றாவது நீதிபதி வீட்டுக்கு அனுப்பினார். மூன்றாவது கவிதைப் பரிசோதகர் சம்ஸ்கிருதம் படித்தவர். தமிழின் வாசம் தெரியாதவர்; ஆனால், தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளும் பிரமுகர். தமக்கு முன்னுள்ள இரண்டு நீதிபதிகளும், தலைப்பில் என்னென்ன எழுதியிருந்தார்களோ. அதையே இவரும் ஆமோதித்தார்.

ஒருவழியாக, கவிதை பார வண்டி ஏறி ராவ்பகதூர் வீட்டை யடைந்தது. அவர் ஒவ்வொரு கவிதைக்கும் மேலாக உள்ள விமர்சனத்தைப் பார்த்தார். ம என்றால் மட்டம்: மூ என்றால் முதல் தரம் என்று தமக்குள் முடிவு செய்து கொண்டார்.

ஜில்லா கலெக்டர் மனைவியார் தலைமை வகித்துத் தங்கப் பதக்கம் கொடுக்கப் போவதாகச் சொன்னார்கள். அவரோ மேல் நாட்டுப்பெண். தமிழ்ப் பரிசு, அதுவும் கவிதைக்குப் பரிசளிக்கத் தகுந்த நபர் என்று அமோகமான ஏற்பாடுகள் நடந்தன. கவிதைப் பரிசளிப்பு விழாவுக்குப் பிரமுகர்கள் விஜயம் செய்தனர். தமது காரியதரிசி தங்கப் பதக்கத்தைத் தூக்கிக் கொண்டு பின் வர, ராவ்பகதூர் முன்னே நடந்து வந்தார். எங்கள் கல்லூரித் தமிழாசிரியர்கள் தவிர, எல்லோரும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். தங்களுக்குள் ஒருவரையாவது நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கவில்லையே என்ற கோபம், அந்தத் தமிழாசிரியர்களுக்கு. அதனால் அவர்கள் வரவில்லை. தகுதி உள்ளவர்களை நீதிபதியாகத் தேர்ந்தெடுப்பதுதான் எந்தக் காரியத்திலும் கிடையாதே; இது தமிழாசிரியர்களுக்கு எங்கே தெரியப் போகிறது?

நீதிபதிகள் மூவரும், முன் வரிசையில் இருந்தனர். கவிதைப் போட்டியிட்ட எல்லா மாணவர்களும் பதக்கத்தைத் அடித்துக் கொண்டு போக வந்துவிட்டோம். ஆங்கில பாஷையிலுள்ள கவிதா மகத்துவத்தைக் கலெக்டர் மனைவி பேசி வந்தார். பிறகு ஆங்கிலப் பேரறிஞர் அந்த அம்மாள் சொல்ல விட்டுப் போன கவிதைகளைச் சொல்லிக் கழுத்தை யறுத்தார். தமிழ்க் கவிதை படுகிற பாடு இப்படி! முடிவில் ராவ்பகதூர் எழுந்து, கவிதைப் போட்டிக்கு ஒத்துழைத்துச் சீர்தூக்கிய நீதிபதிகளைப் பாராட்டி, தலைமை தாங்கிய கலெக்டர் மனைவியின் சேவையையும் பாராட்டிவிட்டுப் பரிசு பெற்ற கவிஞனைக் கூப்பிட்டார்.

நான் திகைத்துப் போனேன். எனக்குத்தான் பரிசு என்று அறிவிக்கப்பட்டது! பிறகு தங்கப் பதக்கத்தை எடுத்துக் கொடுத்தார்: பொன் போல் வாங்கி, பூப் போல என் நெஞ்சுக்கு நேரே கலெக்டர் மனைவி குட்டினார். எனக்கு இரத்த ஓட்டம் அதிகமாயிற்று. முகம் 'குப்'பென வியர்த்தது, நான் சொப்பனம் காண்கிறேனோ என நினைத்தேன்!

என் கவிதையை என் கையில் கொடுத்துப் படிக்கும்படி சொன்னார்கள். எனக்குத் தேவாரம் திருவாசகம் பாடிப் பழக்கம். அந்தப் பண் வழியிலேயே என் கவிதைகளைப் பாடினேன். கேட்டுக் கிறு கிறுத்துப் போனார்கள். அங்கே கூடியிருந்தவர்களின் கை தட்டலும் ஆரவாரமும் சொல்லி முடியாது. வானத்திலே மிதப்பது போன்ற உணர்ச்சி எனக்கு யுண்டாயிற்று.



நோயாளி:— டாக்டர்! இந்த மூச்சு விடறது இருக்குப் பாருங்கோ; அது தான் ரொம்பக் கஷ்டமா யிருக்கிறது......திணறுது......!

டாக்டர்:—கவலைப்படாதே ... இதோ ஒரு மருந்து எழுதித் தரேன். ஒரே வேளையிலே 'பட்'டுன்னு நின்னுடும்.

தலைமை தாங்கிய கலெக்டர் மனைவி கவிதையின் பொருளை ஆங்கிலப் பேரறிஞர் வாயிலாக ஆங்கில பாஷையிலே கேட்டனுபவித்தார். என் கவிதைகள் என் செவி முன்னதாகவே மொழி பெயர்ப்பதைக் கேட்டேன். இதைவிட வேறு பாக்கியம் என்ன வேண்டும்?

எங்கள் தலைமை ஆசிரியர் ராவ்பகதூர் அவர்கள் 'கவிராயர் பரிசு' இப்படியே வருஷா வருஷம் தொடர்ந்து நடக்கப் போவதைப் பற்றிப் பாராட்டிப் பேசினார். நீதிபதிகளைப் புகழ்ந்தார். கவிதையுலகில் புதிய சகாப்தத்தை நான் உண்டு பண்ணி விட்டதாக என்னைப் புகழ்ந்தார்: வந்திருந்த கனதனவான்களையும், போட்டியிட்ட மற்றவர்களையும் புகழ்ந்தார்.

கூட்டம் கலைய ஆரம்பித்தது. கலெக்டர் மனைவி சிறு பயலாகிய என்னிடம் கை குலுக்கி விடை பெற்றார்; கவிதை தந்த பரிசென நினைத்தேன். நான் நீதிபதிகளுக்கு வணக்கம் செலுத்த முயன்றபோது ஆங்கிலப் பேரறிஞர் விளக்கெண்ணெய் சாப்பிட்டவர் போல் விழித்தார்!

“நமஸ்காரம்” என்றேன்.

“நமஸ்காரம் இருக்கட்டும், வீட்டுக்குப் போய்விடாதே. சற்று இரு!” என்றார் கோபமாக. எனக்குப் பயம். தங்கப் பதக்கம் உடம்பில் கிடக்கிறதே, இவரும் இப்படி அதட்டுகிறாரே என்று உள்ளூற நடுக்கம். என்னை மட்டுமல்ல, மற்ற இரு நீதிபதிகளையும் “இருங்கள் ஸார், எல்லோரும் போகட்டும்” என்றார்.

மூன்று நீதிபதிகளும் சேர்ந்து தங்கப் பதக்கத்தை அபேஸ் செய்யச் சூழ்ச்சி செய்கிறார்களோ?—நான் சிறு பயல்தானே!

அந்த ஹாலில் நாங்கள் நால்வரே இருந்தோம். போட்டியிட்டவர்கள் எழுதிய கவிதைக் கற்றைகள் ஸ்தலத்திலேயே வாபஸ் செய்யப்பட்டன. என் கவிதையை முத்து முத்தாக எழுதிக் கண்ணாடி போட்டுப் பள்ளிக்கூடத்தில் மாட்டி வைக்க வேண்டுமென நாங்கள் கேட்டுக் கொண்டதற் கிணங்க, நானும் திருத்திப் பிடித்தெழுதி தருவதாகக் கவிதையைக் கையோடு வாங்கி வைத்திருந்தேன்.

“கொண்டா, உன் கவிதையை” என்றார் ஆங்கில அறிஞர். கொடுத்தேன். “என்ன ஸார், இதற்குத்தானா போயும் போயும் பரிசு கொடுத்தீர்கள்? நீங்கள் எப்படி இதைத் தேர்ந்தெடுத்தீர்கள்?” என்று கேட்கவே மற்ற இரு நீதிபதிகளும் ஆடு திருடின கள்வர்கள் போல விழித்தார்கள்.

“ஒரே ஒரு கவிதைதான் சுமார்—என்று எழுதி இருந்ததாக எனக்கு ஞாபகம். அந்த ‘சுமார்’ இவனுடையதல்ல. பின்னர் இவன் எப்படிப் பரிசு பெற்றான்?” என்று கேட்டார் முதல் நீதிபதி.

“நீங்கள்தானே ‘மூ’ என்று போட்டிருக்கிறீர்கள். அதனால் உங்களை ஒட்டி, நான் ‘மூ’ என்று போட்டேன்” என்றார் இரண்டாவது நீதிபதியாகிய கணிதப் பேராசிரியர்.

“நானும் அதன்படியே இன்னொரு ‘மூ’ போட்டேன்” என்றார் மூன்றாம் நீதிபதி.

என் கவிதையைப் புரட்டினால் அங்கே மூன்று நீதிபதிகளும் போட்டிருந்த ‘மூ மூ மூ’க்கள் இருந்தன. அதிலும் முதல் ‘மூ’ அழுத்தமாக இருந்தது.

“நாசமாய்ப் போச்சு!......ரொம்ப மட்டம் என்பதற்காகக் கோபத்தில் அழுத்தமாக எழுதின ம, மூ வாக உங்கள் கண்ணில் பட்டிருக்கிறது. மட்டத்திலும் மட்டம் மகா மட்டம் இது!” என்றார் ஆங்கில அறிஞர்.

“நாங்கள் என்னத்தைக் கண்டோம், ஸார்? நீங்களே முதல்தரமென ‘மூ’ போட்டிருப்பதாக நினைத்து நாங்களும் ‘மூ’ போட்டு விட்டோம்” என்றனர்.

நான் வியர்த்து மூவர்களைப் பார்த்தேன். எங்கே பதக்கத்தைப் பிடுங்கிக் கொள்வார்களோ என்று பயம் ஏற்பட்டு விட்டது.

“டேய் தம்பி! நடந்த விஷயங்களை வெளியே சொல்லாதே. தங்கப் பதக்கத்தை மட்டும் கொண்டு போ. கவிதையை என்னிடம் கொடுத்து விடு” என்றார் ஆங்கிலப் பேராசிரியர்.

என் கவிதைக் காகிதத்தைக் கொடுத்து விட்டு அங்கிருந்து எடுத்தேன் ஓட்டம். தாத்தா என்னை வெகுவாகப் புகழ்ந்தார்.

அன்று முதல் கவிதை எழுதும் எண்ணத்தையே அடியோடு விட்டு விட்டேன்!

நமது நாட்டில் கால்நடை அதிகம். இன்னும் பெருக வேண்டும்.

— மைசூர் மகாராஜா.

“பஸ் நிர்வாகம் சென்னை சர்க்காருக்கு மாறியதிலிருந்து தினந்தோறும் ஆபீஸுக்குக் கால்நடைதான்” என்கிறார் ஒரு சென்னைவாசி.

★

தந்தி தபால் போக்குவரத்து மந்திரி ஜனாப் ரபி அகமத் கித்வாய் ஒரு பார்சலை, ஒரு பிராங்கு போஸ்டாபீஸில் அனுப்பக் கொடுத்தபோது, அவரை யாரென்று அறிந்து கொள்ளாத போஸ்ட் மாஸ்டர் கொணர்ந்த பார்சலை அவரைக் கொண்டே எடை போடச் சொன்னார். —பத்திரிகைச் செய்தி.

மந்திரிகளைத் தவறாக எடை போட வேண்டாம் என்று இந்த ஒரு சம்பவமே எடுத்துக் காட்டுகிறது.

★

குழந்தைகள் குப்புறப் படுத்துக் கொள்வதால் மூச்சுத் திணறக் கஷ்டப்படுவதிலிருந்து தடுக்க ஒரு ஆங்கிலேயர் தமது மனைவியின் ஒத்துழைப்புடன் ஒரு நூதனத் தலையணையைக் கண்டுபிடித்திருக்கிறார்.

—லண்டன் செய்தி

மேற்படி நூதனத் தலையணையைத் தயாரிப்பதில் தலையணை மந்திரத்தின் ஒத்துழைப்பை நாடியதைக் கண்டு மகிழ்ச்சி யுண்டாகிறது.

வட்ட மேஜை

நமது பழக்கங்கள்!

ஜூன் 26-ந் தேதி 'கல்கி'யில் 'லண்டனில் கர்நாடக ஸங்கீதம்' என்பதைப் படித்துச் சந்தோஷப்பட்டேன். நம்முடைய கர்நாடக ஸங்கீதம் லண்டன் போல் உள்ள வெளி தேசங்களில் பிரக்யாதி பெற்றிருப்பதைக் கண்டு அளவில்லா ஆனந்தம் கொண்டேன். ஜான்மார் என்பவர் 'வாதாபி கணபதிம்' என்ற கீர்த்தனையைக் கடைசியில் பாடினதற்கு அவருடைய நண்பர் 'விக்னேஸ்வரரைப் பற்றிய பாடல்கள் ஆரம்பத்தில் பாடவேண்டும்' என்று சொன்னதைக் கேட்டு அளவிலா ஆச்சரியம் கொண்டேன். ஆனால் நம் நாட்டு மக்களை நினைக்கும்போது வருத்தமாய் இருந்தது. ஏனென்றால், நம் நாட்டு மக்கள் நம்முடைய பழக்க வழக்கங்களை அடியோடு மறந்திருக்கிறார்கள். நம்முடைய பழக்க வழக்க ஸம்பிரதாயத்தை நம்மில் சிலரே தான் அனுஷ்டிக்கிறார்கள். அப்படி இருக்கும்போது ஆங்கிலேயர் அறிந்திருப்பது ஆச்சரியம் அல்லவா? நம் நாட்டார் லண்டன் போல் உள்ள வெளி தேசங்களுக்குச் சென்றாலோ அல்லது கொஞ்சம் ஆங்கில பாஷை தெரிந்து விட்டாலோ அவர்களுடைய தாய் பாஷையையே அடியோடு மறந்து விடுகிறார்கள். நம்முடைய தாய் தகப்பன்மார்களை 'அம்மா அப்பா' என்று அழைப்பதை அவமானமென நினைத்து 'டாடி, மம்மி' என்று அழைக்கிறார்கள். நாம் மேனாட்டவர்களைப் போல் கிராப் செய்து கொண்டோம். ஸூட், ஹேட் எல்லாம் அணிந்துகொண்டோம். நம்முடைய பெண்மணிகள் ஆங்கில மாதரைப்போல் தலையை 'பாப்' செய்து கொள்ளுதல், நகங்களுக்குச் சாயம் பூசுதல், உதட்டுக்கு வர்ணம் பூசுதல் முதலியவற்றைச் செய்து கொள்கிறார்கள். ஒரு ஆங்கிலேயராவது நம்மைப் பார்த்துக் குடுமி வைத்துக் கொண்டிருக்கிறாரா? அல்லது நம்மைப் போல் உடை உடுத்தியதுண்டா? இடுப்பிலே ஒரு துண்டும் மேலுக்கு ஒரு துண்டும் போட்டுக் கொண்டு நம் காந்தி மகான் லண்டன் போன்ற வெளி தேசம் சென்று வந்தார் என்பதை நம் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

ஆகவே நம் நாட்டு மக்கள் நம்முடைய பழக்க வழக்கங்களைக் கைவிடாது பின்பற்றி நம்முடைய நாட்டுக்குக் கௌரவத்தைக் கொடுத்து நம் மணிக் கொடிக்குத் தக்க மரியாதை அளிப்பார்களாக.

பெங்களூர்
18—7—49 ஸரஸ கிருஷ்ணன்

○●○


சோஷலிஸ்ட் கட்சி

"எதிர்ப்புக் கட்சி வேண்டியதே!" என்ற தலைப்பில் வந்த தங்கள் தலையங்கத்தைப் படித்தேன். நம் மாகாணத்தில் உள்ள பல கட்சிகளின் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் நன்கு அலசிப் பார்த்து சோஷலிஸ்ட் கட்சிதான் காங்கிரஸுக்குச் சரியான எதிர்ப்புக் கட்சியாக இருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்தது பற்றி பெரு மகிழ்ச்சியடைந்தேன்.

இன்றைய விஞ்ஞான சோஷலிஸத்தின் தந்தை காரல் மார்க்ஸ். அவர் சோஷலிஸத்தை நிறுவுவதற்குக் கையாளும் முறைகளைப் பற்றிக் கூறும்பொழுது "நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள், நாட்டின் பண்பாடு நாட்டிலுள்ள பல வேறு அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள், முக்கியமாக ஆளும் கட்சியின் போக்கு முதலியவற்றை நன்றாக ஆராய்ந்து அதற்கேற்ப சோஷலிஸ்டுகள் நடந்துகொள்ள வேண்டும்" என்றார்.

நம் நாட்டைப் பொருத்த வரையில் சோஷலிஸ்டுகளுக்குச் சமாதான முறையில் நம்பிக்கை உண்டு. புத்தர், காந்தி போன்ற அஹிம்ஸா மூர்த்திகள் பிறந்த நன்னாடு நம் நாடு. அதோடல்லாமல் இன்றைய பரம்பரையைச் சேர்ந்த நாம், காந்தி மகானுடன் வாழ்ந்திருக்கின்றோம். ஆகவே அராஜக வேலையில் சோஷலிஸ்டுகள் இறங்கினால் மக்கள் ஆதரவு கிடைக்காது. மேலும் ஆளும் கட்சியைப் பொருத்திருக்கிறது சோஷலிஸ்டுகளின் போக்கு. இன்று சோஷலிஸ்டுகள் தங்கள் திட்டங்களை மக்கள் முன் எடுத்துரைக்கவும் தொழிற் சங்கங்களில் ஈடுபடவும் அனுமதிக்கப்படாமல் பொது ஜனப்

சந்தேகம்!



உபாத்தியாயர்:— பிள்ளைகளே! மற்றவர்களுக்கு உபகாரம் புரிவதற்காகவே இந்த உலகில் நம்மைக் கடவுள் படைத்திருக்கிறார்...

ஒரு மாணவன்:—ஸார்! அந்த மற்றவர்களை இந்த உலகில் எதற்காகக் கடவுள் படைத்திருக்கிறார்?

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ 'நமது பழக்கங்கள்!' என்ற கடிதம் எழுதிய பெங்களூர் ஸ்ரீ ஸரஸ கிருஷ்ணனுக்கும். 'திருந்தும் அவசியம்' என்ற கடிதம் எழுதிய சென்னை ஸ்ரீ செ. வீ. பாலசுந்தரத்துக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது

"மடகாஸ்கரில் இந்தியருக்கு எதிராக கடவடிக்கை. சர்க்காரின் விபரீதப் போக்கு." —புதுச் செய்தி.

மடகாஸ்கரில் நடக்கும் காரியம் சுத்த மடத்தனமாயிருப்பதில் வியப்பென்ன இருக்கிறது?

★

"இந்தியப் பட்டுத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், அயல் நாடுகளில் மாணவர்களைப் பட்டுத் தொழில் கல்வி கற்பதற்கு வசதி செய்யவும் யோசிக்கப்பட்டது."

—பெங்களூர் செய்தி.

எப்படியோ பட்டுத் தொழில் பட்டுப் போகாமல் இந்திய சர்க்கார் பார்த்துக் கொள்ள வேண்டும்!

★

பன்னிரண்டு வருடச் சிறை வாசத்திற்குப் பிறகு வெளிவந்த ஒரு ஆடவனை ஒரு யுவதி காதலித்துக் கலியாணம் செய்து கொண்டு விட்டாள்.

—சிகாகோ செய்தி.

மேற்படி ஆடவனுக்கு மீண்டும் ஆயுள் தண்டனை அனுபவிக்கும்படி நேரிட்டு விட்டதே!

பாதுகாப்புச் சட்டத்தின்படி விசாரணையின்றி உள்ளே தள்ளப்பட்டால் பின் எந்த முறையைக் கையாள முடியும் சோஷலிஸ்டுகள்?

காங்கிரஸுக்கு எதிராக சோஷலிஸ்டுகள் செய்யும் பிரசாரத்தைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லவேண்டும். தாங்கள் கூறியதுபோல் "தாதாபாய் நௌரோஜி முதல் நேரு, நேதாஜி வரை" வளர்த்த ஸ்தாபனம் காங்கிரஸ். அதில் முதலாளி, தொழிலாளி, மகாராஜா போன்ற பல வர்க்கத்தினர்கள் தங்கள் சுய நலத்தை நாடியே பங்கெடுத்துக் கொண்டார்கள். இவர்கள் யாவருக்கும் பொது விரோதியாக நின்றது ஏகாதிபத்தியம். நாடு சுதந்திரம் அடைந்தபின் அந்த மாபெரும் ஸ்தாபனத்தில் பல வர்க்கத்தினருக்கு இடமில்லை. "காங்கிரஸைக் கலைத்து விடுக" என்றனர் சோஷலிஸ்ட் தலைவர்கள். கடைசியில் சோஷலிஸ்ட் தலைமையில் பெரும்பான்மையான தொழிலாளர்கள் காங்கிரஸை விட்டு வெளியேறினர். இன்று காங்கிரஸ் தொழிலாளர்களின் செல்வாக்கற்ற ஸ்தாபனமாக இருக்கின்றது. இந்நிலையில் காங்கிரஸைச் சீர்திருத்துவதல்ல சோஷலிஸ்டுகளின் நோக்கம். காங்கிரஸுக்கு எதிராக,—முதலாளிகள் தங்களுக்குப் பக்க பலமாக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கும் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் திட்டங்களுக்கு மாறாக—சோஷலிஸத் திட்டங்களை மக்களிடையே சமர்ப்பிப்பதுதான் நேர்மையான வழி.

திருவல்லிக்கேணி
10—7—49 எஸ். இராஜகோபால்

சுபிட்சம் வேண்டும்!

இன்று உலகின் எங்கும் நிம்மதியில்லை. அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை யென்று சொல்லிவிட முடியாது. கவலையிலேயே உழன்று கொண்டிருக்கிற காலமும் இதுவல்ல. நமக்கு உணவு வேண்டும்; உடை வேண்டும்; பொழுது போக்குக்கு ஒரு விளையாட்டு வேண்டும்; கலை வேண்டும்; நமது நாகரிகம் வளர்ச்சியடைய வேண்டும்.

இன்றைய அரசியல் கேலிக் கூத்தாகி விட்டது. வியாதிக்குத் தக்க மருந்தை யாரும் சொல்வாரில்லை. உபதேசத்துக்குக் குறைவில்லை. உபதேசம் உபத்திரவத்தை நீக்காது. உபத்திரவம் நீங்க மருந்து தேவை. இன்றைய அரசியலைக் காங்கிரஸ் கட்சி நடத்துகிறது. காங்கிரஸ் கட்சியில் போராட்டம் செய்தவர்கள் பலனைக் கண்டார்கள். பலனைப் பங்குபோட முனைகிறார்கள். இதில் பலவானுக்கும் பலஹீனனுக்கும் போட்டி என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. உரிமையும், மரியாதையும் முண்டியடிக்கிறது.

இதில் சாதியும் வர்க்கமும் தழைக்கப் போகின்றன. எல்லோரும் சர்க்கார் வேலை பார்க்க முடியாது. எல்லோரும் டாக்டர்களாக ஆக முடியாது. அதேபோல உழவர்களாகவும் ஆகமுடியாது. சில சில பேர்தான் சில சில வேலைகளைச் செய்ய முடியும். எல்லோருக்கும் வேலை வேண்டும். அதேபோல எல்லோருக்கும் உணவும் உடையும் வீடும் வேண்டும் இதில் ஏற்றத் தாழ்வு இருப்பதற்கு இடமில்லை. ஆனால் இதைச் சொல்லிக்கொண்டே இருப்பதில் பலனில்லை. நாட்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. துயரம் சமுதாயத்தில் புரைவிட்டோடுகிறது. பொறுத்திரு என்றால் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையாவது வேண்டாமா? அதுதான் இல்லை. அறிவுக்கு இந்தியாவில் பஞ்சமில்லை. திட்டங்களுக்குக் குறைவில்லை. செய்யும் ஆற்றலுடையவர்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள்.

பாரத நாகரிகம் அனாதியானது. நவ இந்தியா உலகிற்கு ஒரு எடுத்துக் காட்டாக அமைய வேண்டும். அதற்குரிய பாதையில் விரைந்து செல்லவேண்டும். அப்படி மக்களை அழைத்துச் செல்ல ஒரு கட்சி வேண்டும். அதற்கு 1930-ம் வருடத்துக் காங்கிரஸ் தோன்ற வேண்டும். அல்லது புதிய சோஷலிசக் கட்சி நல்லபடியாக உருப்பெற்று வளரவேண்டும். அதுவே சுபிட்ச வாழ்வுக்கு அழைத்துச் செல்லும்.

விசாகம்

○●○

பவானி கற்சட்டி

ஜூலை 3-ந்தேதி இதழில் "ஆற்றைத் தேக்குவோம்! சாகரம் ஆக்குவோம்!" என்ற தலைப்பில் தாங்கள் எழுதியிருந்த அற்புதமான கட்டுரையைப் படித்துப் பேரானந்தம் அடைந்தேன். பவானி அணைக்கட்டில் செய்யப்படும் மாக்கல் கற்சட்டிகளின் பெருமையைப் பற்றித் தாங்கள் எழுதியிருப்பது என் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது.

பவானி அணைக்கட்டில் தோண்டி எடுக்கப்படும் மாக்கல்லினால் செய்த கற்சட்டிகள், மிகவும் அழகானவை யென்றும், சமையலுக்கு ரொம்பவும் தகுதியானது என்றும், இந்தக் காலத்துப் பாத்திரம் எதுவும் அதற்கு ஈடாகாது என்றும் என்ஜினியர்களில் ஒருவர்

சொன்னதாகத் தாங்கள் எழுதியிருப்பது மிகவும் உண்மையான விஷயம்.

பழைய காலத்திலிருந்தே நம் முன்னோர்கள் கற்சட்டிகளைச் சமையல் செய்வதற்காக உபயோகித்து வந்தனர். அதில் எந்த விதமான பதார்த்தங்களையும், எவ்வளவு மணி நேரம் வைத்திருந்தாலும் கெட்டுப் போவதில்லை. தேக ஆரோக்கியத்திற்கும் மிகவும் சிறந்தது. தற்காலத்தில் அலுமினியம், 'ஸ்டேயினைட்', 'எவர் ஸில்வர்' பாத்திரங்களையே பெரும்பாலோரும் வாங்கி உபயோகிக்கின்றனர். அலுமினியப் பாத்திரம் உபயோகிப்பதால் தேகத்திற்கு ஒன்றும் கெடுதல் ஏற்படாது. ஆனால், யுத்தத்திற்குப் பிறகு உடைந்த ஏரோப்ளேன்களிலிருந்து, அலுமினியப் பாத்திரம் செய்கிறார்கள். இவைகளில் அதிக நேரம் ஏதாவது உணவுப் பதார்த்தம் வைத்திருந்தால், பெட்ரோல் எண்ணெய் நாற்றம் வருகிறது. இதனால் தேக ஆரோக்கியத்துக்குக் கெடுதல் உண்டாகிறது.

கடைகளில் அநேக வியாபாரிகள், ஏரோப்ளேனிலிருந்து செய்த அலுமினியப் பாத்திரங்களில் மேல் பூச்சுக் கொடுத்து விற்கிறார்கள் என்று ஒரு பத்திரிகையில் படித்தேன். இதை அறியாத ஜனங்கள் அவை மலிவாயிருக்கிறது என்று எண்ணி அதை வாங்கி உபயோகிக்கிறார்கள். இதனால் அவர்கள் தேக சுகம் கெடுகிறது. மேற்கூறிய அலுமினியப் பாத்திரங்களைக் கடைக்காரர்கள் விற்பனை செய்வதை சர்க்கார் தடுக்க வேண்டும்.

கற்சட்டியில் இவ்விதமான கெடுதல்கள் சிறிதளவும் கிடையாது. சமையலுக்கு ரசம் பவும் தகுதியானது. அதனால் கற்சட்டிகளை ஏராளமாகச் செய்து ஏழைகளும் வாங்கும்படி குறைந்த விலைக்கு விற்றால் மிகவும் நல்லது.

கோயமுத்தூர்
7—7—49 எஸ். சுந்தரா

○●○

நடுத்தர வகுப்பினர்

யுத்த காலத்தில் அக விலைகளின் உயர்வாலும் வாழ்க்கைக்கு அவசியமான பொருள்கள் கிடைக்காத காரணத்தாலும் வியாபாரிகள் அதிகமான பணத்தைச் சம்பாதித்தனர். உணவுப் பொருள்களின் விலை உயர்வால் விவசாயிகள் நன்மையடைந்தனர். அந்நிய நாட்டுப் பொருள்களின் இறக்குமதி தடைப்பட்டதால் ஆலை முதலாளிகள் பெரும் பணம் திரட்டினர். தொழிலாளர்கள் சம்பள உயர்வாலும், வருடத்திற்கு ஒன்றிரண்டு முறை கொடுக்கப்பட்ட ''போனஸ்''களாலும், தக்க வருமானத்தைப் பெற்றனர். ஆனால் நம் மத்தியதர வகுப்பினரோ, தங்களுக்குக் கிடைத்த குறிப்பிட்ட வருமானத்தைக் கொண்டு, அதிக விலை கொடுத்து அவசியமான பொருள்களை வாங்க முடியாமலும் வாழ்க்கை நிலையை எவ்வகையிலும் குறைக்க வழி தெரியாமலும் திண்டாடினர்; இன்னும் திண்டாடுகின்றனர்.

இவ்வகுப்பினர்தான், குமாஸ்தாக்களாகவும், ஆசிரியர்களாகவும், இன்னும் இதர நிலைகளிலும் நின்று சமூகத்திற்கும் தேசத்திற்கும் சேவை செய்கின்றவராவர். இப்பொழுதுள்ள சர்க்காரிடமிருந்து அதிக நன்மையை எதிர்பார்ப்பவர்களும் இவர்களே ஆவர். 'பணக்காரர்கள் மீது வரி விதிப்பதாகப் பிரசாரம் செய்து கொண்டு, பஸ்கள் மீதும், ஹோட்டல்கள் மீதும், ஸினிமாக்கள் மீதும், காய்கறிகள் மீதும் போடக் கூடிய வரிகளை இவர்களல்லவா கொடுக்க வேண்டியிருக்கிறது? பணம் கொடுக்கக் கூடிய சக்தியுள்ளவர்கள் மீது நேரடியான வரிகளைப் போடாதது, வழி தெரியாமலா, அறியாமையினாலா அல்லது சுயநலத்தினாலா? இவர்கள் சங்கிரகக்கும் தங்களுக்கும், தங்களுக்குத் தெரியாமலேயே ஒரு பெரிய எதிர்ப்பைச் சிருஷ்டித்துக் கொண்டிருக்கின்றனர்.

கொல்லம்
11—7—49 மு. துரைராஜு ரெட்டியார்

○●○

★ திருத்தம் அவசியம்

ஒரு வருஷத்துக்கு முன்னர் 'பீச்' 'போர்ட்' 'பார்க்' என்று தமிழ் எழுத்துக்களிலிருந்த ஆங்கில வார்த்தைகளை எடுத்து 'கடற்கரை' 'கோட்டை' 'பூங்கா' என்று முறையே நல் தமிழ் வார்த்தைகளை ரயில்வே ஸ்டேஷன்களில் அதிகாரிகள் பொறிப்பித்தார்கள். ஆங்கிலத்தில் மட்டும் 'Beach' 'Fort' 'Park' என்று பழையபடியே இருக்கின்றன.

ஒரு சமயம் முற்றிலும் சென்னைக்குப் புதிதான தமிழ் படிக்கத் தெரியாத ஒரு வட இந்தியனைப் பார்த்து ''அடுத்த ஸ்டேஷன் 'பூங்கா'வா?'' என்று ஒருவன் கேட்டான். 'பார்க்' என்றே கேள்விப் பட்டிருந்த அந்த வட இந்தியன் ''அடுத்த ஸ்டேஷன் பூங்கா இல்லை; பார்க்'' என்றான். மற்றொரு சமயம் தமிழ்படிக்கத் தெரியாத ஒரு தெலுங்கு தேசத்துப் பெண்மணி தன் பக்கம் அமர்ந்திருந்த ஒரு நாட்டுப்புறத் தமிழ்ப் பெண்மணியைப் பார்த்து, ''போர்ட் ஸ்டேஷன் இதுதானா?'' என்று கேட்டாள். 'கோட்டை' என்று மட்டும் அறிந்திருந்த அந்தத் தமிழ் மகள் ''நீங்கள் சொல்கிற ஸ்டேஷன் இன்னும் தள்ளிப் போகணும் போலிருக்கு!'' என்றாள்.

தமிழ் தெரியாத ஒருவர் 'பார்க்' என்று ஆங்கிலத்தில் எழுதப் பட்டிருப்பதைக் கண்டு



அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர் ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி பாரதியின் குமாரர் சிரஞ்சீவி லக்ஷ்மிகாந்தன் பாரதி எம்.ஏ.க்கும், தென்காசி போர்டு ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீ அருணகிரிநாதன் புதல்வி சௌ. ஞானலக்ஷ்மிக்கும் 8—7—49 அன்று மதுரையில் சிறப்பாகத் திருமணம் நடந்தது.

மணமக்களுக்கு கவர்னர் ஜெனரல் ராஜாஜி அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்கள். நாமும் தம்பதிகளைப் 'பல்லாண்டு வாழ்க'வென்று வாழ்த்துகிறோம்!

அவ்வாறே தமிழிலும் எழுதப் பட்டிருக்க வேண்டு மென்று எண்ணுகிறேர். அது போலவே தமிழ் தெரிந்த, ஆனால் ஆங்கிலம் அறியாத ஒருவர் 'பூங்கா' என்று தமிழில் இருப்பதைப் பார்த்து ஆங்கிலத்திலும் 'Poonga' என்று எழுதியிருக்கும் என்று நினைக்கிறேர். இதனால்தான் மேலே குறிப்பிட்ட சங்கடமான சம்பவங்கள் ஏற்பட வழி ஏற்படுகின்றது.

'நெல்லூர்' என்று தமிழில் இருப்பதை ஆங்கிலத்தில் Rice Village (ரைஸ் வில்லேஜ்) என்றோ அல்லது வேறு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டோ எழுதப்படுவதில்லை. அது போலவே அமெரிக்க நாட்டில் இருக்கும் Lake Success என்னும் நகரைத் தமிழில் 'லேக் ஸக்ஸஸ்' என்று தான் அழைக்கிறோமே தவிர, 'வெற்றி கொண்ட ஏரி' யென்றோ, 'வெற்றி ஏரி' என்றோ யாரும் தமிழில் அழைப்பது கிடையாது. ஒரு ஊரின் பெயரையோ அல்லது ஒரு நபரின் பெயரையோ குறிப்பிடும் பொழுது ஒரே உச்சரிப்பில்தான் வெவ்வேறு மொழியிலும் குறிப்பிடுகிறார்களே தவிர, அந்த மொழிகளில் அப் பெயரை மொழி பெயர்த்துக் கூறுவது கிடையாது. ஒரு இடத்தின் பெயரை எம் மொழியாளரும் மூல உச்சரிப்பிலேயே குறிப்பிடுவதினால் ஒருவித சங்கடமும் ஏற்படுவது இல்லை. ஆதலால் முறை தவறிய மாற்றத்தினால் ஏற்படும் மேலே குறிப்பிட்டது போன்ற சம்பவங்கள் இனியும் நேராதிருக்க, ரயில்வே அதிகாரிகளோ, அல்லது தாய் மொழிக்கு முதலிடம் கொடுப்பதாகக் கூறிக்கொள்ளும் சென்னை ஆட்சியாளரோ, 'கடற்கரை' 'கோட்டை' 'பூங்கா' என்று தமிழில் அழைக்கப்படும் ரயில்வே நிலையங்களின் ஆங்கிலத்திலும் முறையே திருத்தி எழுத வேண்டுகிறேன்.

சென்னை
11—7—49

சி. வி. பாலசுந்தரம்



பிரசுரகர்த்தர் (காவல் கொடுத்திருக்கும் எழுத்தாளரைப் பார்த்து): ஸார்! உங்கள் கையெழுத்தைப் படிக்கவே முடியவில்லை. அதை 'டைப்' அடித்துக் கொண்டு வந்து கொடுக்கக் கூடாதா?

எழுத்தாளர்:—எனக்கு 'டைப்' அடிக்கத் தெரிந்தால் நான் ஏன் எழுத்தாளனாக வருகிறேன், ஸார்!

ஒப்புக்கொள்ள முடியாது!


பரீக்ஷை ஒரு பாதகம் என்பது தங்கள் கருத்து. அது எல்லாருடைய கருத்தும்தான். ஆனால் இப்பொழுதிருக்கும் நிலைமையில் பரீக்ஷையைத் தவிர்க்க முடியாது. நம் தேசத்தில், பப்ளிக் ஸ்கூல்கள் இல்லவேயில்லை என்று சொல்லலாம். சர்வகலாசாலைகளும் பரீக்ஷை நடத்தி, லிஸ்டு வெளியிடுவதை முக்கிய வேலையாக வைத்துக் கொண்டிருக்கிறவே யொழிய, மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஒருமிக்க வாழச்செய்து, வாழ்க்கைப் போராட்டத்திற்கு வேண்டிய விஷயங்களைக் கற்றுகொள்ளச் சந்தர்ப்பம் கொடுக்க முயலுகிறதேயில்லை. அநேக கலாசாலைகளில் ஆசிரியருக்கும் பெரும்பாலான மாணுக்கர்களின் பெயர் கூடத் தெரியாது!

பரீக்ஷையில் தவறும் நண்பர்களுக்கு நம் அனுதாபம் தெரிவிக்க வேண்டியதுதான். ஆனால் அதற்காக அதிகாரிகள் முன்கூட்டி விதித்திருக்கும் விதிகளை மாற்றக் கூடாது. 'ஒரு மார்க்குத்தானே குறைகிறது, பாஸ் போட்டால் மூழ்கி விடுமா?' என்ற கேள்வி சரியல்ல. ஒரு மார்க்குக் குறைவாக வாங்கினவர்களைத் தேறவிட்டால் இரண்டு மார்க்குக் குறைவாக வாங்கினவர்கள் அபய ஆர்ப்பாட்டம் செய்ய மாட்டார்களா? அவர்களையும் தேறவிட்டால், இதற்கு எல்லை எங்கே? முடிவு எங்கே? அதனால் ஸ்வயம் அதிகாரிகள் என்ன செய்தாலும் நாம் இந்த விஷயத்தில் கண்டிப்பு முறையைத் தளர்த்தவேண்டிய அவசியமில்லை. பரீக்ஷை எழுதுமுன்பே பாஸ் செய்யவேண்டிய மார்க்குகள் எவ்வளவு என்று மாணுக்கர்களுக்குத் தெரியும். அதற்கு அவர்கள் நன்றாகப் படித்து ஒழுங்கான முறையில் இந்தத் தவிர்க்க முடியாத முள் வேலியாகிய பரீக்ஷையைத் தாண்ட முயல வேண்டும். பரீக்ஷை என்பது ஒரு முள்வேலிதான். அதைத் தாண்ட ஊன்றுகோலாக இருப்பது உழைப்பு, ஒழுங்காக அவ்வப் பொழுது படிப்பது. அதைத் தாண்டிவிட்டால் நேராக ஸ்வர்க்க பூமிக்குக் கொண்டு போய் விடுமென்று நம்பிப் படிக்கிறோம். அநேகமாக ஏமாற்றம்தான் ஏற்படுகிறது. ஆனால் பரீக்ஷையைத் தாண்டாவிட்டால், முள் வேலியில் விழுந்து விடுவோம். பலன் மனக்கஷ்டமும், 'அடியைப் பிடிடா பாரத பட்டா' என்று மறுபடியும் டியுடோரியல் காலேஜை நோக்கிச் செல்வதுமாகதான் இருக்கும்.

இண்டர்மீடியட்டில் முதல் வகுப்பில் தேறியவர்கள், 'ஹானர்ஸ் பரீக்ஷையில் 'கோட் அடித்தது' வருந்தத்தக்க விஷயமே. பரீக்ஷையில் தவறினதினால் அவர்கள் மண்டுக்களாகி விட்டார்கள் என்பது கலப்பற்ற பொய்க் கூற்றுதான். ஆனாலும், இண்டரில் நன்றாகப் பாஸ் செய்தவர்கள் தவறினதற்குக் காரணமில்லாமல் இராது. இண்டருக்குப் பிறகு மூன்று வருஷம் கழித்து எழுதும் ஹானர்ஸ் பரீக்ஷைக்கு. மிக அத்தியாவசியமானது உண்மை உழைப்பு. மூன்று வருஷம் 'தானுறுனா' பாட்டுப் பாடிவிட்டு 'எங்காத்துக் காரரும் கச்சேரிக்குப் போகிறார்' என்று கலாசாலைக்குப் போய்விட்டு வந்தால், பரீக்ஷை லிஸ்ட் அவ்வாறுதான் அமையும். அந்த லிஸ்ட்டைக் கொண்டு, பரீக்ஷை முறையையும் அதிகாரிகளையும் கண்டிக்கிறார்கள். அதை ஒப்புக்கொள்ள முடியாது.

சென்னை
20—6—49

ஸ்ரீனிவாஸன்



நீங்கள் வாங்குவது
ஒரு ஜாதிக் குதிரையோ
கெடியாரமோ
அதன் பரம்பரை சிறந்த
தாக இருக்க வேண்டும்!
"வெஸ்ட் எண்ட்" வாட்சுகளின் பரம்பரை 75 ஆண்டுகளுக்கு அப்பாலிருந்து ஆரம்பமாகிறது. இத்தனை காலமாக இந்தியாவிற்கேற்ற வாட்சுகளைத் தயாரித்து விற்பதில் வெஸ்ட் எண்ட் ஸ்தாபனத்தார் விசேஷ தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள். வெஸ்ட் எண்ட் வாட்சுகளின் தயாரிப்பில் நம்பகமான உழைப்பிற்கும் அழகிய தோற்றத்திற்கும் விசேஷ கவனம் செலுத்தப் பட்டிருக்கிறது. தவிர ஒவ்வொரு வெஸ்ட் எண்டும் கைதேர்ந்த வேலைப்பாட்டின் சிருஷ்டி. நீங்கள் எந்த விலையில் ஒரு வெஸ்ட் எண்ட் வாங்கினாலும் அதற்கு இந்த குணங்கள் உண்டு.
போதிய ஸ்டாக்குகள் இல்லையெனினும் முடிந்தவரையில் சப்ளை செய்வோம்.
வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.,
பம்பாய் & கல்கத்தா
எவர் பிரைட் ஸ்டீல்...ரூ.108/-
ரோல்டு கோல்டு ...ரூ.127/-
18 கேரட் தங்கம் ...ரூ.240/-
West End Watch Co.
BOMBAY CALCUTTA


உங்கள் (தேக) ஆரோக்கியத்தை
பருகுங்கள்
PLEASE REPLACE LID
Cadbury
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
1 LB. NET
இளைஞர் முதியோர் உள்பட குடும்பம் முழுவதற்கும் போர்ன்-வீடாவிலடங்கிய அபரிமிதமான விடமின்களும் கால்ஷியமும் அவசியமாகும். குழந்தைகள் இதன் சாக்லேட் மணத்தை விரும்புவர். காலையிலும் இரவிலும் சூடாகவோ அல்லது குளிர்ந்த பானமாகவோ இரண்டே இரண்டு தேக்கரண்டியளவை ஒரு கிளாஸ் பாலில் சேர்த்துப் பருகவும்.
Cadbury
THE TREE OF HEALTH
—ஆரோக்கிய விருக்ஷம்—
சூடான
அல்லது
குளிர்ந்த
CEY3TAM
காட்பரீஸ்
போர்ன்-வீடா
கால்ஷியமும், ஏ & டி விடமின்களும் நிறைந்தது
காட்பரி-ப்ரை (இந்தியா) லிமிடெட்
தபால் பெட்டி நெ. 1417 பம்பாய்-தபால் பெட்டி நெ 251 கல்கத்தா-தபால் பெட்டி நெ 1725 மதராஸ்


இதோ நிவாரணம்
வலுவிழந்து
தளர்ச்சியுள்ள நரம்புகளுக்கு
ASPRO
'ஆஸ்ப்ரோ'
இயற்கைக்கு உதவுகிறது
MADE IN ENGLAND
இதுதான் அசல்
ஆஸ்ப்ரோ. போலிகளை
மறுத்து விடுங்கள்
அணா 1½க்கு
3 வில்லைகள்
பல்வலிக்கு இவ்விதம்
செய்யுங்கள்
அணா 15க்கு
30 வில்லைகள்
'ஆஸ்ப்ரோ'
சாப்பிடுங்கள்


. . . AFTER THAT I'M CONVINCED
Tussanol
IS THE
ONLY WAY
பரீட்சைகள் செய்வது நேரத்துக்கும் பணத்துக்கும் வீண் செலவுதான். எப்போதுமே நிச்சயமாக குணத்தை யளிக்கும் "டஸனல்" உபயோகித்து ஜலதோஷம் இருமலினின்றும் மிக எளிதில் சௌகரியமடைந்த அநேகம் பேர்களின் புத்திமதியையே நீங்களும் மேற்கொள்ளுங்கள்.
TUSSANOL
TUSSANOL for COUGHS
MARTIN & HARRIS LTD., CALCUTTA

அதிகப்படியான மைல்கள்

Firestone

De Luxe CHAMPION TYRES

பயர்ஸ்டோன்

டிலக்ஸ் சாம்பியன் டயர்களினால்

இரண்டு அடுக்குகள் அதிகமான கம்-டிப்பிடு கயிறு பிணைப்புகள் கொண்டவை.

அகலமான அழுத்தமான விடாமிக் ரப்ப ருடன் விசேஷ முறையில் சேர்த்து செய் யப்பட்ட வரம்புகளுடன் கூடியவை.



இன்று சிறந்தது - நாளை இன்னும் சிரேஷ்டமானது

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk. Madras

கல்கி



KALKI ஜூலை 31, 1949 4 அணா

REGD. No. M. 4392



துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகச் சலவை செய்கிறது